# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 மாசி 20 வெள்ளிக்கிழமை (04.03.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 098



03
தெ. ஆபிரிக்காவிடம் மண்டியிட்டது நெதர்லாந்து



17
கொலையும் செய்யும் காதல்



30
முழுப்பொறுப்பையும் அரசே ஏற்கவேண்டும்



31
17 வருடங்களின் பின் மீள்குடியமர்வு

# யாழ்., கிளிநொச்சி மாவட்டங்களில் இராணுவப் பதிவு கைவிடப்பட்டது

## நீதிமன்றில் கூட்டமைப்பு தாக்கல் செய்த மனுவை அடுத்து நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 4

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் பதிவு நடவடிக்கைகள் கைவிடப்படும் என்று பொலிஸ்மா அதிபர் நேற்று உயர் நீதிமன்றத்தில் உறுதியளித்தார். இதையடுத்து இந்த வழக்கைத் தொடர்ந்து நடத்துவதில்லையென மனுதாரர்கள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் இராணுவத்தினர் பதிவுகளை மேற்கொள்ளும்படி மக்களைக் கட்டாயப்படுத்துவதை எதிர்த்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஷ் பிறேமச்சந்திரன், அப்பாத்துரை விநாயகமூர்த்தி, ஈ.சரவணபவன், எஸ். சிறிதரன் ஆகியோர் கடந்த 22 ஆம் திகதி உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர். (29 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைப் போர்க் குற்ற விசாரணைக்கு சுதந்திரமான சர்வதேச அமைப்பு தேவை

## ஐ.நாவும் உலக நாடுகளும் இணைந்து அமைக்க அமெ.செனற் வலியுறுத்து

நியூயோர்க், மார்ச் 04

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பில் சுதந்திரமான விசாரணையினை மேற்கொள்ளும் வகையில் அனைத்துலக சமூகமும் ஐக்கிய நாடுகள் சபையும் இணைந்து சுதந்திரமாகச் செயற்படும் விசாரணைக் கட்டமைப்பினை உருவாக்கவேண்டும் என்று அமெரிக்க செனற் சபை வலியுறுத்தி உள்ளது. இது தொடர்பில் தீர்மானம் ஒன்றையும் அது நிறைவேற்றியுள்ளது. (29 ஆம் பக்கம் பார்க்க)

# நாங்கள் மீளக்குடியமர்வதற்கு கூரைத் தகரம் மட்டும் போதுமா?

## அரியாலை மக்கள் அமைச்சரிடம் காட்டம்

யாழ்ப்பாணம், மார்ச்4

ஒரு மாதத்துக்கு முன்னர் எமது பகுதிகளில் பிரவேசிக்க அனுமதி வழங்கப்பட்டும் மீளக்குடியமர்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக எமது வீடுகளின் கூரைகள், கதவுகள் என்பனதிருட்டுப்போயுள்ளன. இப்போது கூரைத் தகரம் மட்டும் வழங்கி விட்டு மீளக் குடியமரச் சொன்னால் அது எப்படி முடியும்? குடியமர்வதற்கான அத்தியாவசிய சேவைகளை உடனடியாக எமக்கு (29 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுக்கு எதிரான போருக்கு ஐ.தே.கவும் ஆதரவு வழங்கியது

கொழும்பு, மார்ச் 4

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை அரசு முன்னெடுப்பதற்கு தாம் முழு ஆதரவு வழங்கியதாக ஐ.தே. கட்சி தெரிவித்துள்ளது.

பயங்கரவாதத்தினை ஒழிப்பதற்காக பெருமளவிலான ஆயுதங்களை வெளிநாடுகளில் இருந்து வாங்கிக் குவிப்பதற்கு பல பில்லியன் ரூபாவை அரசு செலவிட்டுள்ளது. அதற்கு நாம் எதிர்ப்பு ஏதும் தெரிவிக்கவில்லை என்றும் ஐ.தே.க. தெரிவித்துள்ளது.

கல்கமுவ என்ற இடத்தில் அரசுக்கு எதிராக இடம்பெற்ற (29 ஆம் பக்கம் பார்க்க)

# டக்ளஸுக்கு முன் பிணை மறுப்பு

சென்னை, மார்ச் 4

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்குசென்னை உயர் நீதிமன்றம் முன் பிணை வழங்க முடியாது எனவும் உயர்நீதிமன்றத்தில் சரணடைந்து தன் மீதான உத்தரவுகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் நீதிபதி நாகமுத்து தெரிவித்துள்ளார். (29 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நா. அதிகாரி நம்பியார் மீது நெதர்லாந்து நீதிமன்றில் வழக்கு

## புலித் தலைவர்களின் கொலைக்கு சூத்திரதாரி எனக் குற்றச்சாட்டு

நெதர்லாந்து, மார்ச்.04

வெள்ளைக்கொடியை ஏந்தி வரும்படி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர்களை அழைத்து அவர்களது படுகொலைக்குச் சூத்திர தாரியாக இருந்தார் என்று ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ - மூனின் அலுவலகத் தலைமை அதிகாரியான விஜய் நம்பியார் மீது நெதர்லாந்து குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது என இணையத் தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இனப்படுகொலைக்கு எதிரான அமெரிக்க தமிழர் அமைப்பும், சுவிட்சர்லாந்து ஈழத் தமிழர் அமைப்பும் கூட்டாக இந்த வழக்கைத் தொடர்ந்துள்ளன.

அந்த இணையதளத்தில் மேலும் கூறப்பட்டுள் ளவை வருமாறு:-

நெதர்லாந்து சர்வதேச நீதிமன்றத்தில் இந்த வழக்குக்காக் முக்கியமான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் தலைவர்களான பா.நடேசன், புலித்தேவன் உள்ளிட்டோர் ஐ.நா. செயலாளர் நாயகத்தின் அலுவலகத் தலைமை அதிகாரி (32 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்களின் வாக்குகளை கொள்ளையிட ஐ.தே.கவும் ஜே.வி.பியும் அரசியல் நாடகம்

## ஏமாற வேண்டாம் என்கிறார் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த



கொழும்பு, மார்ச் 04

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களில் வடக்கு, கிழக்கு மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காகவே ஐக்கிய தேசியக் கட்சியும், ஜே.வி.பியும் அவசர காலச் சட்டத்தை நீக்குமாறு கூறி அரசியல் நாடகம் ஆடுகின்றன. பல இடங்களில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள் பிற்போடப்பட்டமைக்கு ஐக்கிய தேசியக் கட்சியே காரணம்.

இவ்வாறு பெற்றோலிய வளத்துறை அமைச்சரும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளருமான சுசில் பிரேமஜயந்த குற்றஞ்சாட்டினார்.

கொழும்பு - மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி உட்பட சில கட்சிகள் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுக்களைத் தாக்கல் செய்தன.

இருந்தும் ஐக்கிய தேசியக் கட்சி சில மனுக்களை வாபஸ் பெற்றுக்கொண்டுவிட்டு, தேர்தல்கள் பின்போடப்பட அரசே காரணம் என்று விரல் நீட்டுகிறது. (32 ஆம் பக்கம் பார்க்க)

# கிபிர் மோதல் திங்களன்று அறிக்கை

கொழும்பு, மார்ச் 04

கம்பஹா, வாரண வான் பரப்பில் கடந்த செவ்வாய்க்கிழமை இரு கிபீர் விமானங்கள் மோதிக் கொண்டமையால் ஏற்பட்ட விபத்து சம்பந்தமான பூரண விசாரணை அறிக்கை எதிர்வரும் திங்கட்கிழமை விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் ஹர்ஷ அபேவிக் கிரமவிடம் சமர்ப்பிக்கப்பட உள்ளது என விமானப்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

அவசியம் ஏற்படின் இஸ்ரேல்எயார் (32 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தப்பித்துக்கொண்டது பாகிஸ்தான்

கனடாவுக்கு எதிரான லீக் ஆட்டத்தில், பாகிஸ்தான் அணித் தலைவர் அப்ரிடி சுழலில் அசத்த, பாகிஸ்தான் அணி 46 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 'ஹட்றிக்' வெற்றி பெற்றது.

கொழும்பில் உள்ள ஆர். பிரேமதாசா மைதானத்தில் நடந்த உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கான, 'ஏ' பரிவு லீக் ஆட்டத்தில் பாகிஸ்தான், கனடா அணிகள் மோதின. இதில் நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணித்தலைவர் அப்ரிடி, துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

பாகிஸ்தான் அணியில் இரண்டு மாற்றம் செய்யப்பட்டிருந்தது. சொகைப் அக்தர், அப்துர் ரெகிமான் உள்ளிட்டோருக்கு ஓய்வு வழங்கப்பட்டது. இதனால் வாகாப் றியாஸ், சயீட் அஜ்மல் வாய்ப்புப் பெற்றனர். கனடா அணியில் டேவிஸனுக்குப் பதிலாக ஹென்றி ஒஸின்டீ வாய்ப்புப் பெற்றார்.





பாகிஸ்தான் விக்கெட்டுக்களை சரித்த மகிழ்ச்சியில் கனேடியர்கள்

முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்த பாகிஸ்தான் அணிக்கு, வழக்கம் போல மொஹமட், அஹமட் மோசமான ஆரம்பம் கொடுத்தனர். கடந்த ஆட்டங்களில் அபாரமாக ஆடிய கம்ரான் அக்மல், யுனிஸ்கான் ஓட்டங்கள் சேர்க்க திணறினர். இதனால் பாகிஸ்தான் அணி 67 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டை இழந்து தத்தளித்தது.

இந்த நிலையில் இணைந்த அனுபவ வீரர் மிஸ்பா, உமர் அக்மல் ஜோடி நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. பொறுப்பாக ஆடிய இந்த ஜோடி 5 ஆவது விக்கெட்டுக்காக 73 ஓட்டங்கள் சேர்த்த போது, உமர் அக்மல் அரைசதம் அடிக்கும் வாய்ப்பை தவறவிட்டார். அணித் தலைவர் அப்ரிடியுடன் இணைந்த மிஸ்பா நீண்ட நேரம் தாக்கு பிடிக்க முடியவில்லை. துடுப்பாட்டத்தில் திறனின்றி தவிக்கும் அப்ரிடி, 20 ஓட்டங்கள் எடுத்து ஆறுதல் அளித்தார்.

அப்துல் ரஷாக், உமர் குல், வாகாப் றியாஸ், சயீட் அஜ்மல் உள்ளிட்டோரும் கனடாவின் பந்தில் மடிய பாகிஸ்தான் அணி 43 ஓவரில் 184 ஓட்டங்களுக்குள் சுருண்டது. கனடா சார்பில் பெயிட்வன் 3, ஷீமா, பாலாஜி, ஹன்சரா தலா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய கனடா அணிக்கு குணசேகரா, குமார் மோசமான ஆரம்பத்தையே இந்தப் ஆட்டத்திலும் அளித்தனர். அடுத்து வந்தவர்கள், பாகிஸ்தான் சுழலில் சரணடைந்தனர். அஜ்மல் சுழலில், சுர்காரி எல்.பி.டபிள்யூ., முறையில் வெளியேறினார். அணித் தலைவர் பகாஜி, ஹன்சரா, ஷீமா, பெயிட்வன், கொர்டன் உள்ளிட்டோர் அப்ரிடி பந்தில் பெவிலியனுக்கு நடையைக் கட்டினர். அடுத்து வந்த பாலாஜி, அப்ரிடியின் துல்லிய எறியில் 'ரன்-அவுட்' ஆனார். றியாஸ் வேகத்தில் ஒஸின்டே 'போல்டாக', கனடா அணி 42.5 ஓவரில் 138 ஓட்டங்களுடன் தனது ஆட்டத்தை முடித்துக் கொண்டது.

இதன்மூலம் கென்யா, இலங்கை, கனடா அணிகளை அடுத்தடுத்து வீழ்த்திய பாகிஸ்தான் அணி 'ஹாட்றிக்' வெற்றி பெற்று, காலிறுதி வாய்ப்பை பிரகாசப்படுத்திக் கொண்டது. பாகிஸ்தான் சார்பில் அப்ரிடி 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். அவரே ஆட்டத்தின் நாயகனாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## இலங்கை கிரிக்கெட்அணி வீரர்கள்மீது அரசுக்கு முழுநம்பிக்கை உண்டு

கொழும்பு, மார்ச் 4



இலங்கை கிரிக்கெட் அணியின் முக்கிய வீரர்களான மஹேல ஜெயவர்த்தன, திலான் சமரவீர ஆகியோர் மீது அரச ஊடகம் ஒன்றின் வர்ணணையாளரால் சூதாட்டப் புகார் தெரிவிக்கப்பட்டது.

பாகிஸ்தானுடனான ஆட்டத்தின் போது இலங்கை அணி 11 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இதில் மத்திய வரிசைத் துடுப்பாட்டத்தில் களமிறங்கிய மஹேல, சமரவீர ஒற்றை இலக்கத்துடன் ஆட்டமிழந்தனர்.

இதனையடுத்து அரச ஊடகம் ஒன்றில் அதன் வர்ணணையாளரினால் இவர்கள் இருவர் மீதும் சூதாட்டப் புகார் முன் வைக்கப்பட்டது. இதனை எதிர்த்து மஹேல சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக தெரிவித்திருந்தார். இதனைத் தொடர்ந்து அரசாங்கம் 'அந்தக் கருத்து அரசினுடையது அல்ல. தனிபட்ட ஒருவரின் கருத்தே. எமக்கு இலங்கை அணி வீரர்கள் மீது முழு நம்பிக்கை உண்டு'- இவ்வாறு அரசாங்கத்தின் சார்பில் சுசில் பிரேம ஜெயந்த தெரிவித்தார். (15)

## உலகக் கிண்ண இலச்சினையை பயன்படுத்தியோர் இலங்கையில் கைது

கொழும்பு, மார்ச் 4

பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் இலச்சினையை பொருள்களில் பயன்படுத்தி விற்பனையில் ஈடுபட்ட 15 பேர் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

கொழும்பில் புறக்கோட்டை மற்றும் பமுதுவ ஆகிய பிரதேசங்களில் இவர்கள் விற்பனையில் ஈடுபட்டிருந்தபோதே கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸாரும், பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரும் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப் பின்போதே இந்த 15 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய நிறுவனத்துக்கே ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் இலட்சினை பொறிக்கப்பட்ட பொருள்கள் விற்பனை செய்யும் அங்கீகாரம் வழங்கப்பட்டது. கைது செய்யப்பட்ட 15 பேரும் போலியாக தயாரிக்கப்பட்ட ஐ.சி.சி இலட்சினைப் பொறித்த பொருள்கள் விற்பனை செய்வதாக குறித்த இந்திய நிறுவனத்தினர் பொலிஸ்ஸில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டையடுத்தே பொலிஸார் இந்த நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளனர். (15)

### 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ண பதினேளாவது ஆட்டம்

ஆட்டம்: பாகிஸ்தான் Vs கனடா | நாணயச் சுழற்சி: பாகிஸ்தான்
முடிவு: பாகிஸ்தான் 46 ஓட்டங்களால் வெற்றி | ஆட்டநாயகன்: அப்ரிடி

**பாகிஸ்தான்**

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| மொஹமட் | lbw b ஓஸன்டீ | 11 | 12 | 2 | 0 |
| அஹமட் | c கொர்டன் b பெயிட்வன் | 12 | 23 | 2 | 0 |
| கம்ரான் அக்மல் | c குமார் b ஷீமா | 16 | 38 | 2 | 0 |
| யுனிஸ்கான் | lbw b பெயிட்வன் | 06 | 13 | 1 | 0 |
| மிஷ்பா உல் ஹக் | c பகாஜி b பாலாஜி | 37 | 68 | 1 | 0 |
| உமர் குல் | lbw b பாலாஜி | 48 | 68 | 4 | 1 |
| அப்ரிடி | c குமார் b ஷீமா | 20 | 17 | 2 | 0 |
| அப்துல் ரஷாக் | lbw b ஹன்சரா | 08 | 08 | 1 | 0 |
| உமர் குல் | ஆட்டமிழப்பில்லை | 02 | 04 | 0 | 0 |
| வகாப் றியாஸ் | c பகாஜி b ஹன்சரா | 00 | 03 | 0 | 0 |
| சயீட் அஜ்மல் | b பெயிட்வன் | 00 | 05 | 0 | 0 |
| உதிரிகள் | (b4, lb3, w16, nb1) | 24 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ஷொக்கன் | 3.3 | 10 | 0 | 0 |
| ஓஸன்டீ | 07 | 25 | 1 | 1 |
| கொர்டன் | 0.3 | 1 | 0 | 0 |
| பெயிட்வன் | 08 | 36 | 3 | 1 |
| ஷீமா | 06 | 33 | 2 | 0 |
| பாலாஜி | 10 | 50 | 2 | 0 |
| ஹன்சரா | 06 | 23 | 2 | 1 |

TOTAL - 184/10 (43)
1-16 (மொஹமட்), 2-42 (அஹமட்), 3-55 (யுனிஸ்), 4-67 (கம்ரான்), 5-140 (உமர் அக்மல்), 6-165 (மிஷ்பா), 7-181 (அப்ரிடி), 8-181 (ரஷாக்), 9-181 (வகாப்) 10-184 (அஜ்மல்)

**கனடா**

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| குணசேகர | lbw b உமர்குல் | 08 | 16 | 0 | 0 |
| குமார் | b அப்துல் ரசாக் | 02 | 13 | 0 | 0 |
| சுர்காரி | lbw b சயீட் அஜ்மல் | 27 | 67 | 2 | 0 |
| பகாஜி | lbw b அப்டிரி | 16 | 35 | 2 | 0 |
| ஹன்சரா | b அப்டிரி | 43 | 75 | 4 | 1 |
| ஷீமா | b அப்டிரி | 04 | 08 | 1 | 0 |
| கொர்டன் | c றியாஸ் b அப்டிரி | 09 | 12 | 1 | 0 |
| பெயிட்வன் | b அப்டிரி | 00 | 01 | 0 | 0 |
| ஷொக்கன் | ஆட்டமிழப்பில்லை | 05 | 20 | 0 | 0 |
| பாலாஜி | run out (அப்ரிடி) | 01 | 07 | 0 | 0 |
| ஓஸன்டீ | b றியாஸ் | 00 | 03 | 0 | 0 |
| உதிரிகள் | (w 19, lb 04) | 23 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| அப்துல் ரஷாக் | 6 | 26 | 1 | 1 |
| உமர் குல் | 5 | 18 | 0 | 0 |
| சயீட் அப்ரிடி | 8 | 19 | 2 | 0 |
| வகாப் றியாஸ் | 6.5 | 19 | 3 | 0 |
| சயீட் அஜ்மல் | 5 | 22 | 2 | 0 |
| மொஹமட் | 8 | 16 | 1 | 0 |

TOTAL - 138/10 (42.5)
1-16(குணசேகர), 2-16(குமார்), 3-44(பகாஜி), 4-104(சுர்காரி), 5-111(ஷீமா), 6-114(ஹன்சரா), 7-114(பெயிட்வன்), 8-130(கொர்டன்), 9-134 (பாலாஜி), 10-138 (ஓஸன்டீ)

c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர் st - ஸ்ரெம்ப்

### அணிகளின் நிலைகள்

| பிரிவு A | M | W | L | Pt | N/R |
|---|---|---|---|---|---|
| பாகிஸ்தான் | 3 | 3 | 0 | 6 | +1.747 |
| ஆஸ்திரேலியா | 2 | 2 | 0 | 4 | +1.813 |
| இலங்கை | 3 | 2 | 1 | 4 | +2.663 |
| நியூஸிலாந்து | 2 | 1 | 1 | 2 | +1.507 |
| சிம்பாப்வே | 2 | 1 | 1 | 2 | +0.840 |
| கனடா | 3 | 0 | 3 | 0 | -2.873 |
| கென்யா | 3 | 0 | 3 | 0 | -4.825 |

| பிரிவு B | M | W | L | Pt | N/R |
|---|---|---|---|---|---|
| இந்தியா | 2 | 1 | 0 | 3 | +0.870 |
| இங்கிலாந்து | 3 | 1 | 1 | 3 | +0.035 |
| தென்னாபிரிக்கா | 2 | 2 | 0 | 4 | +2.763 |
| பங்களாதேஷ் | 2 | 1 | 1 | 2 | -0.600 |
| நெதர்லாந்து | 3 | 0 | 3 | 0 | -3.058 |
| அயர்லாந்து | 2 | 1 | 1 | 2 | -0.207 |
| மே.தீவுகள் | 2 | 1 | 1 | 2 | +1.879 |

M போட்டி L தோல்வி N/R சராசரி
W வெற்றி Pt புள்ளிகள்

## இந்தியாவின் பந்து வீச்சு பலவீனமானது - கபில் தேவ்

இந்திய அணியின் துடுப்பாட்டவீரர்களுடன் ஒப்பிடுகையில், பந்து வீச்சாளர்களின் செயற்பாடு திருப்தி அளிக்கவில்லை. பந்து வீச்சு மிகவும் பலவீனமாக இருப்பது தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது. இவ்வாறு கபில்தேவ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:

கடந்த இரண்டு லீக் ஆட்டங்களில் நமது பந்து வீச்சாளர்கள் ஏமாற்றி விட்டார்கள். முதல் ஆட்டத்தில் மிகச்சிறப்பாக ஆடி பங்களாதேஷ் அணி 283 ஓட்டங்கள் எடுத்தது. அடுத்த ஆட்டத்தில் இங்கிலாந்து அணி, இந்திய அணி பெற்ற 338 ஓட்டங்களை பெற்றது.

இந்திய அணியின் பந்து வீச்சு மிகவும் பலவீனமாக உள்ளது. இதனை நான் சொல்லித் தான் தெரிய வேண்டிய அவசியமில்லை. துடுப்பாட்டவீரர்களுடன் ஒப்பிடுகையில், பந்து வீச்சாளர்களின் செயற்பாடுகள் மோசமாக உள்ளது. உதாரணமாக இங்கிலாந்துக்கு எதிராக 338 ஓட்டங்களை எடுத்த போதும், போட்டி சமனிலையானது. இது எமக்கு மிகுந்த ஏமாற்றம் அளித்தது. இதற்காக பந்து வீச்சாளர்களை விமர்சிக்க நான் விரும்பவில்லை. இவர்களால் சிறப்பாக பந்துவீச முடியாது என்று கூற முடியாது. கடந்த இரண்டு ஆண்டுகளாக பல ஆட்டங்களில் இந்தியாவுக்கு வெற்றி தேடித்தந்துள்ளனர். என்னைப் பொறுத்தவரை அபாரமாக ஆடிய இங்கிலாந்து அணி, வெற்றி பெற்றதாகவே குறிப்பிடுவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்காவிடம் மண்டியிட்டது நெதர்லாந்து

-டிலீப்-



உப்புச்சப்பில்லாத ஆட்டம் மொஹாலியில் நேற்று. தென்னாபிரிக்காவுக்கு பயிற்சி ஆட்டம். நெதர்லாந்துக்கு வெற்றிக்கான போராட்டம். பத்தாவது உலகக் கிண்ணத்தின் பதினாறாவது ஆட்டம்.

ஸ்மித் சுழற்றினார் நாணயத்தை. வென்றது நெதர்லாந்து தேர்வு செய்தது களத்தடுப்பை.

தென்னாபிரிக்கர்கள் இறங்கினர் துடுப்பாட்டத்துக்கு அம்லா - ஸ்மித் ஜோடி இட்டது நல்லதொரு ஆரம்பம். அதிரடி காட்டினர் தேவைக்கு ஏற்றதாய் மட்டும். நிலைத்து ஆடவே இருவரும் முயன்றனர்.

இணைப்பை பிரிப்பதில் நெதர்லாந்து முனைப்பு. லூட்ஸ் பந்தை எல்லைக்கு விரட்ட ஸ்மித் முயற்சி. 'போல்ட்' டாகியது அவர் விக்கெட். ஆரம்ப இழப்பை பொருட்படுத்தவில்லை தென்னாபிரிக்கா. வந்தவர் அனுபவ வீரர் கலிஸ். அவருக்கு இறுதி உலகக் கிண்ணத் தொடர் இது. வந்தார், 2 ஓட்டங்களுடன் சென்றார். 58 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்டுக்கள்.

மெதுவாய் ஆடியதால் இந்த ஓட்டங்களையே எட்டுவதற்கு எடுத்தது எடுத்தது 15 ஓவர்கள். நம்பிக்கை அதிகம் தென்னாபிரிக்காவுக்கு. தொடர்ந்து அதிரடியாய் ஆட வந்தார் ஏ.பி.டி. வில்லியர்ஸ். அம்லாவுடன் இணைந்து கொண்டார். அம்லா அமைதியாய் ஆட வில்லியர்ஸ் அதிரடி காட்டினார்.

அமைதியாய் ஆடிய அம்லா 68 பந்தில் கடந்தார் அரைச் சதம். அதிடிரடியாய் ஆடியதால் 48 பந்துகளில் வில்லியர்ஸ் அடித்தார் அரைச்சதம். அரைச்சதம் கடந்த இருவரதும் இணைப்பு கடந்தது சதத்தை. 121 பந்துகளில் அம்லா சதம் கடக்க, 88 பந்துகளில் வில்லியர்ஸ் சதம் பூர்த்தி. 221 ஓட்டங்கள் இவர்கள் இணைப்பு குவித்தது.

டென்டொஸ்சேர் பிரித்து வைத்தார் இவர்கள் இணைப்பை. அதிரடிக்குப் பஞ்சமில்லை அம்லா - வில்லியர்ஸ் இணைப்பில். அம்லா விக்கெட் சரிந்ததும் வில்லியர்ஸ் ஆட்டமும் முடிவுக்கு வந்தது. அவசர ஓட்டம் ஆட்டமிழக்கச் செய்தது ரன் அவுட் மூலம். 98 பந்துகளில் 134 ஓட்டங்கள் முழக்கம். 13 பவுண்டரிகள், 4 சிக்ஸர்களும் இதில் அடக்கம்.

டுமினி நுழைந்தார் களத்துக்கு. அதுவரை அமைதியாய் போன ஆட்டம் அதிரடியாய் வெடித்தது. முழங்கினார் டுமினி. சந்தித்த பந்துகள் எல்லாம் சென்றன எல்லைக்கு. 15 பந்துகளில் பெற்றது 40 ஓட்டங்கள். 2 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் பறந்தன. கொடுத்தது நெதர்லாந்து இவற்றுக்கு மேலாய் 24 உதிரிகள்.

பந்து வீச்சு டென்டொஸ்சேர் மட்டும் கைப்பற்றினார் மூன்று விக்கெட்டுக்கள். அதற்காய் கொடுத்த ஓட்டங்கள் 72.

எட்ட முடியாத இலக்கை விரட்ட நெதர்லாந்து வந்தது களத்துக்கு. அயர்லாந்து, இங்கிலாந்தை விரட்டியது போல் நடத்திக்காட்ட முயன்றது. நெதர்லாந்து. கோர்வேஷி - பரேஷி நெதர்லாந்து ஆட்டத்தை ஆரம்பித்தனர். தென்னாபிரிக்க வேகங்கள் சரித்தன. விக்கெட்களை

கலிஸ் துடுப்பாட்டத்தில் சாதிக்கவில்லை. சாதித்தார் பந்து வீச்சில். சரித்தார் கோர்வேஷி விக்கெட்டை. ஆரம்பித்தது நெதர்லாந்தின் சரிவு. பரேஷி மட்டும் நிலைத்து ஆடினார். மறுமுனையில் வந்தவர்கள், தாக்குப் பிடிக்கவில்லை தென்னாபிரிக்க பந்து வீச்சை.

பரேஷியின் அரைச்சதம் தவறியது ஆறு ஓட்டங்களால். டுமினியின் சுழலில் சிக்கினார்; சிறைப்பிடிக்கப்பட்டார். பின் வரிசை வீரர்கள் இரட்டை இலக்கம் எட்டுவதற்கே சிரமப்பட்டனர். இம்ரான் தகீர் இந்த ஆட்டத்திலும் கலக்கல். பின் வரிசை விக்கெட்டுக்கள் அவர் வசம். மீத மிருந்தது 15 ஓவர்கள், முடிந்தது நெதர்லாந்தின் ஆட்டம் 120 ஓட்டங்களுடன்.

அதிரடியாய் ஆடிய ஏ.பி.டி. வில்லியர்ஸுக்கே ஆட்ட நாயகன் விருது.



ஸ்மித்தின் விக்கெட் தகர்ந்தபோது...

## சூதாட்டம் என்ற பேச்சை நிறுத்தவேண்டும்

கொழும்பு, மார்ச் 04



"உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடர் மிகவும் சிறந்த உன்னதமான முறையில் நடந்து வருகிறது. சூதாட்டம் என்ற பேச்சை நிறுத்தவேண்டும். என பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளரான வக்கார் யூனிஸ் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைத் தேசிய தொலைக் காட்சி வெளியிட்ட சூதாட்டம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். (சி)

## வீரர்களைக் குழப்ப வேண்டாம்

கொழும்பு, மார்ச் 04



இலங்கை அணியின் துணைத்தலைவர் மஹேல ஜெயவர்த்தன, திலான் ஆகியோர் சூதாட்டத்தில் ஈடுபட்டனர் என்ற தொனியில் வெளியான தேசிய தொலைக்காட்சியின் விமர்சனத்துக்கு, இலங்கை அணியின் முன்னாள் தலைவரான அர்ஜூன ரணதுங்க கண்டனம் வெளியிட்டுள்ளார்.

அரசு சார்பான ஊடகங்கள் போட்டிக்காலத்தில் அணி வீரர்களுக்கு தொந்தரவு கொடுக்கக் கூடாது. அது அவர்களது மனநிலையைப் பாதித்துவிடும். இதனால் அவர்களால் தொடர்ந்து போட்டிகளில் கவனம் செலுத்த முடியாது. இது இலங்கை அணி கிண்ணம் வெல்லும் வாய்ப்பினை பாதிக்கும் - என்றார். (சி)

| அதிகூடிய ஓட்டங்கள் | M | R | 50'S | 100'S | H.S | Avg. |
|---|---|---|---|---|---|---|
| ஸ்ரோரஸ்(இங்கிலாந்து) | 03 | 280 | 01 | 01 | 158 | 93.33 |
| ஏ.பி.டீ.வில்லியர்ஸ்(தெ.ஆபிரிக்கா) | 02 | 241 | 01 | 01 | 134 | 105.00 |
| சேவாக்(இந்தியா) | 02 | 210 | 00 | 01 | 175 | 105.00 |

| அதிகூடிய விக்கெட்டுகள் | M | W | Best |
|---|---|---|---|
| அப்ரிடி (பாகிஸ்தான்) | 03 | 14 | 05/16 |
| ஜோன்ஸன் (அவுஸ்திரேலியா) | 02 | 08 | 04/19 |
| இம்ரான் தகீர் (தெ.ஆபிரிக்கா) | 02 | 07 | 04/41 |

## பயிற்சியில் சச்சின் பங்கேற்கவில்லை

பெங்களூர், மார்ச் 4

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கான பயிற்சியில், இந்திய 'மாஸ்டர் பட்ஸ்மன்' சச்சின் பங்கேற்கவில்லை.

பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதல் லீக் ஆட்டத்தில் அசத்தல் வெற்றி கண்ட இந்திய அணி, இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தை சமனிலை செய்தது. நாளை மறுதினம் பெங்களூரில் நடக்கும் மூன்றாவது ஆட்டத்தில் இந்திய அணி, அயர்லாந்தை எதிர்கொள்கிறது.

இதற்கான பயிற்சி பெங்களூரில் உள்ள தேசிய கிரிக்கெட் அக்கடமியில் நேற்றுமுன்தினம் நடந்தது. இதில் இந்திய 'மாஸ்டர் பட்ஸ்மன்' சச்சின் பங்கேற்கவில்லை. இவரைத் தவிர, ஹர்பஜன் சிங், சகிர்கான், சுரேஷ் ரெய்னா, ஸ்ரீசாந்த் உள்ளிட்டோரும் பங்கேற்கவில்லை. இவர்கள் தங்கி இருந்த ஹொட்டலிலேயே இருந்துவிட்டனர். சிகிச்சைக்காக டில்லி சென்றுள்ள சேவாக், நேற்று இந்திய வீரர்களுடன் இணைந்தார்.

தோனி, யூசுப் பதான், முனாப் படேல், அஷ்வின், விராட் ஹோக்லி, கவுதம் காம்பீர், யுவராஜ் சிங், பியூஸ் சாவ்லா, ஆஷிஸ் நெஹ்ரா உள்ளிட்ட ஒன்பது இந்திய வீரர்கள், பயிற்சியாளர் ஹரி கிறிஸ்டன் முன்நிலையில் பயிற்சி மேற் கொண்டனர். (15)



### 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ண பதிறாவது ஆட்டம்

ஆட்டம்: தெ.ஆபிரிக்கா Vs நெதர்லாந்து — நாணயச் சுழற்சி: நெதர்லாந்து

முடிவு: தெ.ஆபிரிக்கா அணி 231 ஓட்டங்களால் வெற்றி — ஆட்டநாயகன்: ஏ.பி.டி.வில்லியர்ஸ்

தென்னாபிரிக்கா

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| அம்லா | c கூப்பர் b டென்டொஸ்சேர் | 113 | 130 | 8 | 0 |
| ஸ்மித் | b லூட்ஸ் | 20 | 32 | 1 | 0 |
| கலிஸ் | c பரேஷி b டென்டொஸ்சேர் | 02 | 12 | 0 | 0 |
| வில்லியர்ஸ் | run out (வெஸ்டஜிக்/புக்காரி) | 134 | 98 | 13 | 4 |
| பிளெஸிஸ் | ஆட்டமிழக்கவில்லை | 18 | 14 | 1 | 0 |
| டுமினி | cபோரேன் bடென்டொஸ்சேர் | 40 | 15 | 2 | 4 |
| வன்விக் | ஆட்டமிழக்கவில்லை | 00 | 00 | 0 | 0 |
| பீரர்ஸன் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| மோர்கல் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| ஸ்ரென் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| இம்ரான் தகீர் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (w 16, lb 5, b2, nb1) | 24 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| புக்காரி | 10 | 44 | 0 | 0 |
| வெஸ்டஜிக் | 09 | 76 | 0 | 0 |
| டென்டொஸ்சேர் | 10 | 72 | 3 | 0 |
| லூட்ஸ் | 09 | 60 | 1 | 0 |
| ஷீலார் | 10 | 74 | 0 | 0 |
| கூப்பர் | 02 | 18 | 0 | 0 |

TOTAL - 351/5 (50)

1-51(ஸ்மித்), 2-58(கலிஸ்), 3-279(அம்லா), 4-283(வில்லியர்ஸ்), 5-349 (டுமினி)

அயர்லாந்து

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| கோர்வெஷி | c & b கலிஸ் | 10 | 18 | 01 | 0 |
| பரேஷி | st வன்விக் b டுமினி | 44 | 66 | 05 | 0 |
| கூப்பர் | c ஸ்ரென் b கலிஸ் | 09 | 21 | 01 | 0 |
| சுடோனேட் | lbw b பீரர்ஸன் | 15 | 26 | 01 | 1 |
| டென்டொஸ்சேர் | lbw b ஸ்ரென் | 11 | 21 | 00 | 0 |
| குருத் | run out ( ஸ்மித்) | 12 | 26 | 00 | 0 |
| போரேன் | lbw b பீரர்ஸன் | 03 | 13 | 00 | 0 |
| புக்காரி | b இம்ரான் தகீர் | 00 | 04 | 00 | 0 |
| ஷீலார் | lbw b இம்ரான் தகீர் | 02 | 05 | 00 | 0 |
| லூட்ஸ் | lbw b இம்ரான் தகீர் | 06 | 07 | 00 | 1 |
| வெஸ்டஜிக் | lbw b இம்ரான் தகீர் | 00 | 02 | 00 | 0 |
| உதிரிகள் | (w 8 ) | 08 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ஸ்ரென் | 8 | 26 | 1 | 1 |
| மோர்கல் | 5 | 18 | 0 | 0 |
| கலிஸ் | 6 | 19 | 2 | 0 |
| இம்ரான் தகீர் | 6.5 | 19 | 3 | 0 |
| பீரர்ஸன் | 5 | 22 | 2 | 0 |
| டுமினி | [illegible] | 16 | 1 | 0 |

TOTAL - 120/10 (34.5)

1-26 (கோர்வெஷி), 2-46 (கூப்பர்), 3-81 (சுடோனேட்), 4-83 (பரேஷி), 5-100 (டென்டொஸ்சேர்), 6-109 (போரேன்), 7-109 (குருத்), 8-110 (புக்காரி) 9-120 (லூட்ஸ்) 10-120 (வெஸ்டஜிக்)

c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர் st - ஸ்ரொம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாருக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கை?

இங்கிலாந்து அணியுடனான ஆட்டத்தில் வெற்றிபெற்றதன் மூலம் தம்மையும் பலமான அணியாக எதிரணிகள் இனியாவது கணிக்கவேண்டும் என்பதைச் சொல்லாமல் சொல்லியிருக்கின்றது அயர்லாந்து.

2007 ஆம் ஆண்டு மேற்கிந்தியத்தீவுகளில் இடம்பெற்ற ஒன்பதாவது உலகக் கிண்ணத் தொடரின் லீக் ஆட்டத்தில் டெஸ்ட் அந்தஸ்து பெற்ற பாகிஸ்தான் அணிக்கு எதிராகத் தனது வெற்றியினைப் பதிவு செய்து உலகினை ஆச்சரியப்பட வைத்தது. இந்த வெற்றி அன்றைய பாகிஸ்தான் அணியின் பயிற்றுவிப்பாளர் பொப்வூல்மர் கொலைவரை நீண்டது . அப்படிப்பட்ட அதிர்ச்சிகள் கொடுத்த அயர்லாந்து அணி கடந்த முறை சுப்பர்-8 சுற்றில் பங்களாதேஷ் அணியினை மட்டுமே வீழ்த்தியிருந்தது. பெரிய அணிகளுக்கு எதிராக அயர்லாந்தால் ஒன்றும் செய்ய முடியாமல் போனது.

இதன் பின்னர் அயர்லாந்து அணி பேசப்படும் ஒரு அணியாக இருக்கவில்லை. உலகக் கிண்ணத்தில் மட்டும் பேசு பொருளாகும் அணியாகவே இருக்கின்றது.

அதேபோன்று 2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளிலும் அயர்லாந்து அணி ஏதாவது ஒரு அணிக்கு அதிர்ச்சியளிக்கும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் அயர்லாந்து அணி மோதிய முதலாவது ஆட்டத்திலேயே பங்களாதேஷ் அணியுடன் தோல்வியைத் தழுவியிருந்தது. எனவே பலமான அணிகளை வெல்வது எங்கனம் என்ற நினைப்பே மேலோங்கியிருந்தது.

ஆனாலும் அயர்லாந்து அணித்தலைவர் வில்லியம் போட்டர்பீல்ட் 'நாங்கள் இந்த முறையும் ஏதாவது ஒரு பலமான அணியினை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறுவோம்' என்று எச்சரித்திருந்தார். அடுத்த ஆட்டத்தில் இங்கிலாந்து அணியினை அயர்லாந்து எதிர்கொண்டது. அயர்லாந்துடனான ஆட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் இங்கிலாந்து அணித்தலைவர் ஸ்ரோரஸ் கருத்துத் தெரிவிக்கையில்:

''அயர்லாந்துடனான ஆட்டம் எங்களுக்கு சவாலானதே. ஏனெனில் அயர்லாந்து அணியின் வீரர்கள் பலர் எமது உள்ளூர் ஆட்டங்களில் பங்கேற்றவர்கள். எனவே அவர்களுக்கு எமது பலம், பலவீனம் தெரியும்'' என்றார்.

இங்கிலாந்து அணி சவாலான ஆட்டமாக அயர்லாந்துடனான ஆட்டத்தைக் கணித்தது. இருந்தும் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மிகப்பெரியதொரு இலக்கை அயர்லாந்துக்கு நிர்ணயித்திருப்பதால் அந்த அணியினால் வெற்றி கொள்ள முடியாது என்று கருதியதே இங்கிலாந்தின் தோல்விக்குக் காரணமாகியது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று அதிரடியான ஆட்டத்தை இங்கிலாந்து வெளிப்படுத்தியது. மிகச் சிறப்பான துடுப்பாட்ட வரிசையினைக் கொண்டுள்ளது இங்கிலாந்து அணி. அந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் அனைவரும் அயர்லாந்தின் பந்து வீச்சைத் துவம்சம் செய்தனர். ஆனால் மத்திய வரிசைத் துடுப்பாட்டம் பெரிதாகச் சோபிக்கவில்லை. இறுதியில் அதிரடியாக ஆடி ஓட்டங்கள் குவிக்க முனைந்ததால் விக்கெட்டுக்கள் தொடர்ச்சியான இடைவெளியில் சரிந்தது. இருந்தும் மிகச் சிறப்பாக 327 ஓட்டங்கள் பெற்றது.

அயர்லாந்து அணியினைப் பொறுத்த வரையில் அந்த அணியின் பலம் அதன் பந்து வீச்சுத்தான். ஏனெனில் 2007 ஆம் ஆண்டு பாகிஸ்தான் அணி அயர்லாந்தின் பந்து வீச்சிலேயே துவண்டது. அந்தப் பந்து வீச்சையே இங்கிலாந்து சமாளித்து விட்டது. எனவே இந்த இலக்கை அயர்லாந்தினால் நெருங்க முடியாது என்று இங்கிலாந்து தவறாக எடைபோட்டு விட்டது. மற்றும் இங்கிலாந்தின் பந்து வீச்சு சொல்லிக் கொள்ளும்படியாக சிறப்பாகவும் இல்லை. முன்னைய ஆட்டத்தில் நெதர்லாந்து அணியும் இங்கிலாந்தின் பந்து வீச்சில் 300 ஓட்டங்களை அண்மித்திருந்தது குறிப்பிடத் தக்கது. இருந்தும் நேற்று முன்தினம் அணிக்குத் திரும்பியிருந்த புரோட் ஏதாவது சாதிப்பார் என்ற நம்பிக்கை இங்கிலாந்துக்கு இருந்தது.

அயர்லாந்து அணி ஆட்டத்தின் தொடக்கத்திலேயே தனது முதலாவது விக்கெட்டை இழந்தது. அடுத்து வந்த வீரர்களும் தம்மால் முடிந்தளவு அதிரடியைக் காட்டினர். இருந்தும் இங்கிலாந்துப் பந்து வீச்சாளர்கள் அவர்களைச் சரித்து 111 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட்டுக்கள் என்னும் இக் கட்டான நிலைக்கு கொண்டுவந்திருந்தனர். சாதாரணமாக இரண்டு பலமான அணிகள் விளையாடினாலே இவ்வாறானதொரு இக்கட்டு நிலைமை ஏற்பட்டால் இரண்டாவதாக ஆடும் அணி நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தும். அதுவே அதன் தோல்விக்கான அடித்தளமாகவும் மாறும் தோல்வியிலேயே முடிவடையும். இதையே இங்கி லாந்தும் நினைத்துக் கொண்டது. இதுவே அவர்களுக்குப் பாதகமாக முடிந்தது.

அதுவும் பலமான ஒரு அணிக்கு எதிராகக் கத்துக்குட்டி அயர்லாந்து அணியால் இக்கட்டு நிலையிலிருந்து மீண்டுவர முடிந்தது என்றால், அந்த அணியின் துடுப்பாட்டப் பலமும் எதிரணிகளுக்கு இனிச் சவாலானதே.

எப்போதாவது அதிர்ச்சி கொடுக்கும் அணியாகவே அயர்லாந்து பரிணமித்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலை தொடருமா? அல்லது இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கு நேர்ந்த கதிதானா?

-அருண்மொழி-



# இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை டோனிக்கு ஆதரவு; ஐ.சி.சிக்குக் கண்டனம்

டில்லி,மார்ச் 4

தோனியை விமர்சித்த ஐ.சி.சிக்கு, இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை காட்டமாகப் பதிலடி கொடுத்துள்ளது. உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் நடக்கும் நேரத்தில் வீணாக நெருக்கடி கொடுப்பதாக குற்றம்சாட்டியுள்ளது.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில், இந்தியா - இங்கிலாந்து அணிகள் மோதிய லீக் ஆட்டம் சமனிலையில் முடிவடைந்தது. இதில், இரு அணிகளும் 338 ஓட்டங்கள் எடுத்திருந்தன. இந்த ஆட்டத்தில், இங்கிலாந்து வீரர் இயன்பெல் 17 ஓட்டங்கள் எடுத்திருந்த போது, யுவராஜ் பந்தில், எல்.பி.டபிள்யூ கொடுக்க நடுவர் பில்லி பவுடன் மறுத்தார். இதையடுத்து நடுவரின் தீர்ப்பை எதிர்த்து இந்திய அணித்தலைவர் தோனி மேன்முறையீடு செய்தார். ஆனால், நீதி கிடைக்கவில்லை. பின்னர் நிருபர்களிடம் பேசிய தோனி, 'களநடுவரின் தீர்ப்புக்கு எதிராக வீரர்கள் மேன்முறையீடு செய்யும் தொழில் நுட்பமும் தவறு செய்கின்றது' என்றார்.

இதற்குச் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் பொது முகாமையாளர் டேவ் ரிச்சர்ட்சன் எதிர்ப்பு தெரிவித்தார். இந்த முறையின் மீது தோனி குற்றம் சுமத்தும் முன், அதன் விதிமுறைகளை நன்கு தெரிந்து கொள்ள வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

ஐ.சி.சி.யின் இந்தக் கருத்துக்கு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இது குறித்து ஐ.சி.சி தலைமை நிர்வாகி ஹாரூன் லார்கத்துக்கு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை செயலர் சீனிவாசன் எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:

களநடுவரின் தீர்ப்புக்கு எதிராக வீரர்கள் மேன்முறையீடு செய்யும் முறையில் உள்ள குறையைத் தான் தோனி சுட்டிக் காட்டினார். இதனை விமர்சிக்கும் உரிமை ரிச்சர்ட்சனுக்கு இல்லை. ஆட்டம் முடிந்த பின்னர் ஒருவர் கூறிய கருத்தை ஐ.சி.சி பிரதிநிதி வீணாக விமர்சித்துள்ளார். இது உலகக் கிண்ணத் தொடர் நடக்கும் நேரத்தில், அந்த வீரருக்கு நெருக்கடி கொடுப்பதற்குச் சமம். இவரது செயலை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கண்டிக்கிறது. எதிர்காலத்தில் இவ்வாறு நடந்து கொள்ளக் கூடாது என இவருக்கு அறிவுறுத்த வேண்டும்- என்றுள்ளது. (15)



**பரிசுக் கூப்பன்களை எமது முகவர்களிடம் வைக்கப்பட்டுள்ள அதற்கான பெட்டியில் சேர்க்கலாம்**

துர்க்கா புத்தகசாலை
சுன்னாகம்.

ரூபன் பல்பொருள்
அளவெட்டி.

இணுவில் பத்திரிகை
முகவர்
இணுவில்.

இந்திரா பல்பொருள்
வாணிபம்
வேலணை.

அம்பாள் பல்பொருள் வாணிபம்
புங்குடு தீவு.

கந்தசாமி கடை
காரைநகர்.

சிறிமுருகன் களஞ்சியம்
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை

மலர் கடை
இளவாலை.

நகுலேந்திரன் பல்பொருள்
வாணிபம்.
முழங்காவில்.

அன்பரசன் புத்தகசாலை
ஒட்டுசுட்டான்.

மதுரா ரெயிலர் கடை
நாச்சிக்குடாச் சந்தி
முன்பாக, நாச்சிக்குடா.

உதயன் அலுவலகம்
கரடிப்போக்குச் சந்தி.

சூரியா பார்மஸி.
அச்சுவேலி.

கிருபா போட்டோ
மல்லாகம்.

**பருத்தித்துறையில்**

கனன் போட்டோ
கவிதா ரேடர்ஸ்

**நெல்லியடியில்**

மொடோன் ஸ்ரோர்ஸ்
ராஜலக்சுமி புத்தகசாலை
சதா பொன்ஸ்

**மந்திகையில்**

நாவலர் புத்தகசாலை

**உடுப்பிட்டியில்**

ரஜினி பீடா

**வல்வெட்டியில்**

கலைச்சோலை பான்சி கவுஸ்

**தென்மராட்சியில்**

அருள்நாயகி புத்தகசாலை

மணியம் ஸ்ரோர்ஸ்
ஸ்ரீ கருணா மல்ரி சொப்
கஜனன் மல்ரி சேர்விஸ் சென்ரர்
அல்லாரை ஆர்.டி.
உதயன் காரியாலயம்
சிறீராம் மல்ரி சென்ரர்

**கிளிநொச்சியில்**

பிள்ளையார் புத்தகசாலை
அறிவுமதி புத்தகசாலை
சோமசுந்தரம் மல்ரி சென்ரர்
புவனேஸ்வரி புத்தகசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி பெற்றே தீரவேண்டும்

**- வெற்றோரி**



அகமதாபாத், மார்ச் 4

சிம்பாப்வே அணிக்கு எதிரான லீக் ஆட்டத்தில் கட்டாயம் வெற்றி பெற வேண்டும். இவ்வாறு நியூஸிலாந்து அணியின் தலைவர் வெற்றோரி தெரிவித்துள்ளார்.

கென்யாவுக்கு எதிரான உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் லீக் ஆட்டத்தில் 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி கண்ட நியூசிலாந்து அணி, 'நடப்புச் சாம்பியன்' ஆஸ்திரேலியாவிடம் தோல்வி அடைந்தது. இந்த நிலையில் இன்று அகமதாபாத்தில் நடக்கும் முக்கியமான ஆட்டத்தில் சிம்பாப்வே அணியைச் சந்திக்கின்றது.

இது குறித்து நியூசிலாந்து அணியின் தலைவர் வெற்றோரி தெரிவித்தமை வருமாறு:

சிம்பாப்வே அணிக்கு எதிரான ஆட்டம் மிகவும் முக்கியமானது. இதில் கட்டாயம் வெற்றி பெற வேண்டும். ஏனெனில், தொடரின் ஆரம்பக் கட்டங்களில் தோல்வி அடையும் பட்சத்தில், அடுத்து வரும் போட்டிகளில் அதிக நெருக்கடி ஏற்படும். கடந்த போட்டிகளில் சிம்பாப்வே வீரர்கள் சிறப்பாகச் செயல்பட்டுள்ளனர். எனவே அவர்களைக் குறைத்து மதிப்பிடக் கூடாது. போட்டியில் நிச்சயம் நெருக்கடி கொடுப்பார்கள்.

எதிரணியின் பலம், பலவீனத்தைப் பொறுத்து ஒவ்வொரு ஆட்டத்திலும், ஒவ்வொரு விதமான திட்டத்துடன் களமிறங்கி வருகிறோம். சிம்பாப்வே அணியில் திறமையான பந்து வீச்சாளர்கள் போதுமானளவுக்கு உள்ளனர். பிறிஸ், அனுபவ சுழற்பந்து வீச்சாளர். முன்வரிசை துடுப்பாட்ட வீரர்களை விரைவில் ஆட்டமிழக்கச்செய்யும் திறமை இவரிடம் உள்ளது. எனவே இவரது பந்து வீச்சை மிகுந்த கவனமுடன் எதிர்கொள்ள வேண்டும்.

சிம்பாப்வே அணிக்கு எதிராக இரண்டு சுழற்பந்து வீச்சாளர்களுடன் களமிறங்கத் திட்டமிட்டுள்ளோம். நதன் மெக்கலம் சுழல்பந்து வீச்சு மற்றும் துடுப்பாட்டத்தில் சிறப்பாகச் செயற்பட்டு வருவது மகிழ்ச்சி அளிக்கிறது. காயத்தில் இருந்து மீண்டுள்ள கையில் மில்ஸ், இந்த ஆட்டத்தில் களமிறங்க வாய்ப்பு உள்ளது- என்றார். (15)

## அடுத்த வர்ணப் படத்தில் ஹட்றிக் நாயகன் மலிங்க. எப்போது வரும்? இணைந்திருங்கள் உதயனுடன்...





அந்தநாள் ஞாபகங்கள்: பாகிஸ்தான் அணியின் முன்னைநாள் வீரர்களான வக்கார் யுனிஸ், வசீம் அக்ரம் ஆகியோர் இணைந்தபோது....

## இன்றைய ஆட்டங்கள்

**அகமதாபாத் மு.ப. 9.30**

நியூஸிலாந்து – சிம்பாப்வே



**ஆர்.பிரேமதாச பி.ப. 2.30**

பங்களாதேஷ் – மே.தீவுகள்




### தினமொரு பரிசுப் போட்டி

இலங்கை - ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான நாளைய (05.03.2011) ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி எது?

..............................................

பெயர் : ..............................................

தே.அ.இல : ..............................................

முகவரி : ..............................................

..............................................

இந்தக் கேள்விக்கான விடையை இந்தக் கூப்பனில் எழுதி நாளை (05.03.2011) பிற்பகல் 2 மணிக்கு முன் தினமொரு பரிசு, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குத் தபாலிலோ அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியிலோ சேர்க்கவும்.

2ஆம் பரிசு காத்திருங்கள்

கம்ப்யூட்டர் ருடே வழங்கும்

தினமும் வெல்லும் ஒருவருக்கு ஒரு வருடத்துக்கான கம்ப்யூட்டர் ருடே இலவச சந்தா

UTHAYAN IT ISLAND
CFICT
GATEWAY CENTRE
JAFFNA

வழங்கும் 4½ லட்சம் ரூபா பெறுமதியான பரிசுக் கூப்பன்கள்

48 பேருக்கு தலா 9 ஆயிரம் ரூபா பெறுமதியானவை

### மாபெரும் காலிறுதிப் போட்டி

காலிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெறும் அணிகள் எவை?

1. .................... 5. ....................
2. .................... 6. ....................
3. .................... 7. ....................
4. .................... 8. ....................

பெயர் : ..............................................

தே.அ.இல. : ..............................................

முகவரி : ..............................................

..............................................

போட்டி முடிவுத் திகதி
10.03.2011

மற்றும்
மாபெரும் காலிறுதிப் போட்டி

1ஆம் பரிசு

தொகையை முடிந்தால் கற்பனை செய்துபாருங்கள்

இறுதிப் போட்டிக்கான சிறப்பு பரிசு

EUROSTAR
Live your Life
CONSUMER ELECTRONICS, HOME & KITCHEN APPLIANCE

வழங்கும் 32' TV LCD



### மாபெரும் இறுதிப் போட்டி

உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?

..............................................

போட்டியின் தொடர் ஆட்ட நாயகன் யார்?

..............................................

பெயர் : ..............................................

தே.அ.இல. : ..............................................

முகவரி : ..............................................

..............................................

போட்டி முடிவுத் திகதி
15.03.2011

மாபெரும் இறுதிப் போட்டி 10 ஆறுதல் பரிசுகள்

அள்ளுவதற்கு தயாராகுங்கள்

**SINGER PLUS**
STANLY ROAD
JAFFA. வழங்கும்
EIG BEATER

**SINGER**
HOSPITAL ROAD
JAFFA. வழங்கும்
FAN

**SINGER PLUS**
CHUNNAKAM. வழங்கும்
FAN

**SINGER PLUS**
NELLIYADDY. வழங்கும்
FAN

**SINGER PLUS**
CHAVAKACHERI.
TOSTER

**PC SOLUTION**
KASTUTIYAR ROAD
JAFFNA. வழங்கும்
COLOUR PRINTER

**PC POWER UNIT**
LUXAN PLAZA
KASTHURIYAR ROAD. வழங்கும்
Rs. 5000 GIFT VOUCHER

**BARANABAS**
247, Stanly Road, Jaffna. வழங்கும்
SINSUNG DVD PLAYER

**சரவணா ரெக்ஸ்**
770, 772, கே.கே.எஸ் வீதி,
(துட்டாதெருச் சந்தி யாழ்ப்பாணம்.
Rs. 5000 GIFT VOUCHER

**கிருபா லேணர்ஸ்**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Rs. 5000 GIFT VOUCHER

### போட்டி விதிகள்

ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. தே.அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் தே.அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம். உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்களோ அவர்களது குடும்பத்தவர்களோ போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது. முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அனைத்து முடிவுகளும் ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி உதயனில் அறிவிக்கப்படும். சகல போட்டிகளுக்குமான பெயர்களை இடது மேல் மூலையில் குறிப்பிட்டு, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியிலோ சேர்க்கவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெற்பேலியில் ஐந்தாவது மயானம் அமைப்பதற்கு மக்கள் எதிர்ப்பு

தென்மராட்சி, மார்ச்.04

தென்மராட்சி கிழக்கு கெற்பேலி கிராமத்தில் ஐந்தாவது மயானம் அமைக்க அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

கெற்பேலி கிழக்கு பகுதி மக்களுக்கென சம்பாவெளி மயானமும் மேற்குப் பகுதி மக்களுக்கென மயாங்காடு மயானமும், வடக்குப் பகுதி மக்களுக்கு ஈச்சங்காடு மயானமும், தெற்குப்பகுதி மக்களுக்கு கடற்கரை மயானமும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த 1996 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 வரை கடற்கரை மயானம் அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்திருந்ததால் அப்பகுதி மக்களுக்கென வேறு இடத்தில் 1994ஆம் ஆண்டு அரசினால் குடியேற்றத் திட்டக் காணியொன்று தற்காலிகமாக மயானமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது.

தற்போது கடற்கரை மயானத்தைப் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டதையடுத்து இக் காணியில் குடியமர்வதற் கான ஏற்பாடுகள் முன்னர் காணி கிடைத்தவரால் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

அத்துடன் ஏற்கனவே அரசினால் காணிகள் வழங்கப்பட்டவர்கள் தமது காணிகளில் குடியிருப்புக்களை அமைத்துக் குடியிருக்கின்றனர்.

மயானம் இருந்த காணியை (அரை ஏக்கர்) அடைக்கவேண்டாம் என கெற்பேலி தெற்கு மக்களும், குடியிருப்பு பகுதியில் மயானம் அமைக்கவேண்டாமென குடியிருப்பாளர்கள் கடும் வாதங்களில் ஈடுபட்டனர்.

இந்த விடயம் கிராம அலுவலர் ஊடாக பிரதேச செயலகத்துக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-207)

# தென்மராட்சிப் பிரதேசத்தில் 19 பேருக்கு உதவித் தொகை

தென்மராட்சி, மார்ச்.04

தென்மராட்சி பிரதேசத்தில் சுயதொழில் உதவிகோரி விண்ணப்பித்தவர்களில் 19 பேருக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் சுயதொழிலுக்கான உதவிப் பொருள்களும், உதவித் தொகைகளும் நேற்று வழங்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் 8பேருக்கு தையல் இயந்திரங்களும், 11 பேருக்கு சலூன், வியாபாரம்,வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகள் திருத்தம், கோழி வளர்ப்பு, மோட்டார் சைக்கிள் திருத்தம், மிதி வண்டி திருத்தம் ஆகியவற்றுக்கு உதவு தொகைகளும் பிரதேச செயலர், உதவிப் பிரதேச செயலர் ஆகியோரால் வழங்கப்பட்டன.

ச. கவிதா- நுணாவில் மேற்கு, ஜெ. இந்திரவதனா- மந்துவில் கிழக்கு, க. யோகதர்சினி - தவசிகுளம், அ. கவிதா- கச்சாய் வடக்கு, மு. சிவசோதிமலர் - சரசாலை தெற்கு, ந. பொனிஸ்ரா- கெருடாவில் , க. இந்திராணி, சரசாலை தெற்கு, க.நிஷாந்தி, இடைக்குறிச்சி ஆகியோருக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. (த-207)

# இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்யப்படாத அழகு சாதனப் பொருள்கள் விற்பனைக்குத் தடை

இலங்கை மருத்துவ அதிகார சபையில் பதிவு செய்யப்படாத சகல அழகு சாதனங்களின் விற்பனையையும் தடைசெய்வதற்கு அதிகாரசபை தீர்மானித்துள்ளது.

தரமற்ற சில அழகுசாதனங்களைப் பயன்படுத்துவதால் புற்றுநோய் ஏற்படும் சாத்தியங்கள் உள்ளதாகப் பொது மக்கள் பல முறைப்பாடுகளைத் தெரிவித்திருப்பதாக அதிகார சபையின் பணிப்பாளர் டாக்டர் ஹேமந்த பெத்தரகம தெரிவித்தார்.

பெருந்தொகையாக உற்பத்தி செய்யப்படும் பல்வேறு அழகுசாதனப் பொருள்கள் சந்தையில் வலம் வருகின்றன. இவற்றில் அடங்கியுள்ள இரசாயனங்கள் மனித சருமத்துக்கு ஊறு விளைவிக்கக் கூடியவை.

எனவே, அத்தகைய அழகு சாதனங்கள் மருத்துவ அதிகார சபையின் இரசாயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் அனுமதிச் சான்றிதழ் வழங்கப்படும்.

அத்துடன் அவற்றின் கொள்கலன்களில் அல்லது பக்கற்றுகளில் அடங்கியுள்ள மூலக்கூறுகள், உற்பத்தித் திகதி, காலா வதியாகும் திகதி ஆகியவை குறிக்கப்படல் வேண்டும்.

மரக்கறி, பழச்சாறுகள் ஆகியவற்றில் இருந்து தயாரிக்கப்படுவதாக விளம்பரம் செய்யப்படும் சில அழகு சாதனங்களில் இரசாயனக்கலப்பே உள்ளது. அவை மனித சருமத்துக்கு உகந்தவையல்ல என்று கூறினார். (ம-5)

# இடம்பெயர்ந்த 21, 000 பேர் வாக்களிக்க முடியாமல் போகலாம்

## பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச்.04

செட்டிகுளம் நலன்புரி நிலையத்திலுள்ள 18,000 இடம்பெயர் மக்களுக்கும் புத்தளம் மாவட்டத்திலுள்ள 3,000 இடம்பெயர் மக்களுக்கும் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்காமல் போகலாமென நீதியானதும் நியாயமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (பவ்ரல்) தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணையாளர் மற்றும் அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் கலந்துகொண்ட கூட்டத்தின்போது இது உறுதிப்படுத்தப்பட்டதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராய்ச்சி கூறினார்.

தேர்தல் ஆணையாளர் இந்த மக்களின் வாக்களிக்கும் உரிமையை உறுதி செய்வதற்கான ஏற்பாடு, உள்ளூராட்சிமன்ற தேர்தல்கள் தொடர்பான சட்டங்களில் இல்லையென இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதாகவும் ரோஹன ஹெட்டியாராய்ச்சி தெரிவித்தார். (ம)

## மஹோற்சவத் திருவிழா

சுதுமலை ஸ்ரீவிசாலாட்சி சமேத விஸ்வநாத சுவாமி தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 9ஆம் திகதி புதன்கிழ்மை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

தேர்த்திருவிழா 18ஆம்திகதி வெள்ளிக்கிழமையும், தீர்த்தத் திருவிழா மறுநாள் சனிக்கிழமையும் நடைபெறும். (ற-115)

ஜயவிரு JAYAVIRU

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 552
சீட்டிழுப்பு திகதி: 02.03.2011

வெற்றி எழுத்து: V
வெற்றி இலக்கங்கள்: 26 46 51 56

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரு. 16,955,667.20 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரு. 1,000,000/- | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரு. 50,000/- | 10 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரு. 2,000/- | 234 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரு. 1,000/- | 473 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரு. 100/- | 11581 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரு. 40/- | 6714 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரு. 20/- | 167062 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரு. 20/- | 26761 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரு. 7,744,120.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி அவசர : 2470662, 2470663
தொலைநகல்: 4607000, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

தற்போது புதன் மற்றும் சனிக்கிழமைகளில் மாற்றமில்லை

# விஞ்ஞான தினமும் கண்காட்சியும்

யாழ்ப்பாணம், மார்ச் 4

தீவக கல்வி வலய விஞ்ஞான தினமும் கண்காட்சியும் நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு வேலணை மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் ஜீ.வி. இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளராக ப. விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் சு. திஸநாயகம்பிள்ளையும் கலந்துகொள்வர். (த-207)

# மெய்கண்டான் மாதாவின் மேன்மைநிறை வாழ்த்துக்கள்



வைத்திய கலாநிதி ஞானச்சந்திரமூர்த்தி காந்திஜி
(இருதய சத்திர சிகிச்சை நிபுணர்)

எமது மகாவித்தியாலய பழைய மாணவரும் நலன்விரும்பியுமான ஓய்வுபெற்ற ஆங்கில ஆசான் திருவாளர் சி. ஞானச்சந்திரமூர்த்தியின் கனிஷ்ட புத்திரருமான வைத்திய கலாநிதி ஞா. காந்திஜி இருதய சத்திரசிகிச்சை முறையில் சாதனைபுரிந்ததையிட்டுப் பெருமையும் பேருவகையும் அடைவதுடன் அவர் மேலும் பல சாதனைகளைப் புரிய வழக்கம்பரை முத்துமாரியம்மனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

பண்ணாகம்,
சுழிபுரம். (சி/576561)

பண்ணாகம் மெய்கண்டான்
மாகவித்தியாலய சமூகம்.

# எழுவை தீவு பாடசாலைகளுக்கு உதவி

யாழ்ப்பாணம், மார்ச் 4

எழுவை தீவில் இயங்கிவரும் இரண்டு பாடசாலைகளுக்கும் உள்ளூர் தேவைகளைப் பூர்த்தி செய்ய வசதியாக மகளிர் அபிவிருத்தி நிலையம் சைக்கிள்களை வழங்கியுள்ளது.

எழுவைதீவு றோ.வித்தியாலயம், எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கே தலா ஒவ்வொரு சைக்கிள்களும் வழங்கப்பட்டுள்ளன.

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் சரோஜா சிவசந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாடசாலைகளின் பிரதிநிதிகள், கிராம அலுவலர்கள் கலந்து கொண்டனர். (த-10)

# மரண அறிவித்தல்

திருமதி குணரத்தினம் அன்னலட்சுமி
(ஓய்வுபெற்ற தாதி உத்தியோகத்தர்) (ராசம்)

சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குணரத்தினம் அன்னலட்சுமி நேற்று (03.03. 2011) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் குணரத்தினத்தின் அன்பு மனைவியும், நிசாந்தன், துஷ்யந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2011) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்துமாயனத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொற்றொழிலாளர் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

தகவல்
ஆ. குணரத்தினம்-கணவர் (பப்பா) (999)

கணக்காய்வு கணக்குப் பதிவு சேவை

தனியார் வியாபார நிறுவனங்களின் Accounts, Auditing, VAT, EPF, ETF, Income Tax கணிப்பீட்டு சேவைகள் முறைப்படி செய்துதரப்படும்.

தொடர்பு: 0779359254

# அகவை 58 இல் ஓய்வு பெறும் திருமதி காந்திமதி நாகராசா



- பகுதித்தலைவர் யா/ யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
- ஆரம்பக்கல்வி:- யா/ கரம்பொன் சிவகுருநாத வித்தியாலயம்.
- இடைநிலைக் கல்வி:- யா/ கரம்பொன் சிறிய புஸ்ப கன்னியர் மடம்.
- முதல் நியமனப் பாடசாலை:- யா/ நாரந்தனை றோ.க. த.க பாடசாலை.
- இறுதியாக சேவையாற்றிய பாடசாலை:- யா/ யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
- மொத்த சேவைக் காலம்:- 32 வருடங்கள்.

எமது பாடசாலையில் 17 வருடங்களாக அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய முதுநிலை ஆசிரியராக ஆரம்பப்பிரிவு மாணவர்களின் கல்வித்தரத்தை, மகிழ்ச்சிகரமான கற்பித்தலை முன்னெடுப்பதற்கான தரமான கல்வியை மாணவர்களுக்குப் போதித்து அதில் பல அனுபவங்களைப் பகிர்ந்துகொண்ட ஆசிரியை அவர்களின் ஓய்வுகாலம் சீரும் சிறப்புடனும் மிளிர இதய பூர்வமாக வாழ்த்துகின்றோம். யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.
(சி/576559)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## கிழக்கை வாட்டும் மூன்றாம் கால மழை

கிழக்கு மாகாணத்திலும், வட மத்திய மாகாணத்திலும் மீண்டும் பெருமழை பெய்யத் தொடங்கியுள்ளது. அதனால் அங்குள்ள பெரிய நீர்ப்பாசனக் குளங்களை மற்றொரு முறை திறந்துவிடவேண்டிய நிலை உருவாகி உள்ளதாக நேற்று நண்பகலில் சம்பந்தப்பட்ட தரப்புகள் தகவல் தெரிவித்தன.

மழை தொடர்ந்தால் சொற்ப கால இடைவெளியில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் வட மத்திய மாகாணத்தின் பல பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் மீண்டும் வெள்ளத்தால் பாதிப்புறக் கூடிய நிலைமை உருவாகும் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கின் பெரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றான கந்தளாய் குளத்தின் நான்கு பிரதான கதவுகளைத் திறந்துவிட வேண்டிய தேவை தோன்றிஉள்ளதாக நீர்ப்பாசனப் பகுதியினர் அறிவித்துள்ளனர். வழமையான நீர்மட்டம் உயர்ந்துள்ளதால் குளக்கட்டுகளின் துரிசுகள் திறந்து விடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் கிழக்கிலும் வட மத்திய மாகாணத்திலும் பல பிரதேசங்கள் நீரில் மூழ்கின. இலட்சக் கணக்கான மக்கள் தமது வீடு வாசல்களை விட்டு வேறு இடங்களுக்கு இடம் பெயர நேர்ந்தது. பிரதான வீதிகள் பல உட்பட பெரும் எண்ணிக்கையான பகுதிகளில் போக்குவரத்துத் தடைப்பட்டது.

இடம்பெயர்ந்த மக்களுக்கான உணவுப் பொருள்களை - பொதிகளை - விமானத்தில் இருந்து போட வேண்டிய தேவை உண்டானது. அந்த வேளை நிவாரணப் பணிகள் வழமையான வேகத்திலும் திருப்திகரமாகவும் மேற்கொள்ளப்படவில்லை என்று பாதிக்கப்பட்ட தரப்புகளில் இருந்து முறைப்பாடுகள் பெரும் எண்ணிக்கையில் குவிந்ததும் குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மக்களின் வாழ்க்கை இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு முன்னரே இயல்பு நிலைக்குத் திரும்பியது. பட்டகாலிலே படும், கெட்டகுடியே கெடும் என்ற முதுமொழியை நூறு வீதம் மெய்ப்பிப்பதுபோன்று, வருண பகவான் மீண்டும் கிழக்கு மாகாண மக்களை, விவசாயிகளை சோதிக்கத் தொடங்கியுள்ளான். மூன்றாம் கால மழை தொடர்ச்சியாகப் பெய்கிறது.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலிருந்து கிடைத்த தகவல்களின் பிரகாரம் சராசரி கணிசமான மழை வீழ்ச்சி கடந்த மூன்று நாள்களாகக் கிடைத்துள்ளது. அந்த நிலை தொடர்ந்தால் தாழ்ந்த பிரதேசங்கள் மட்டுமன்றி மேட்டு நிலப் பகுதிகளும் மீண்டும் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் உண்டாகலாம் என்று அஞ்சப்படுகிறது.

கடந்த இரண்டு மாதங்கள் அடுத்தடுத்து உண்டான பாதிப்புக்களின் போது மக்களுக்கு நிவாரண உதவிகள் உரிய நேரத்திலும் தேவையான அளவிலும் கிடைக்கவில்லை என்று குறை தெரிவிக்கப்பட்டது. அரச அதிகாரிகள் போதிய அக்கறை காட்டவில்லை என்றும் குற்றஞ்சாட்டப்பட்டது.

இயற்கை மீண்டும் சோதிக்கத்தொடங்கிவிட்டதால், அதனால் உண்டாகும் இழப்புக்களை அரசு எவ்வாறு ஈடுசெய்யப்போகிறது என்ற கேள்வி பெரிதாக எழுந்து நிற்கிறது.

வெள்ளத்தினால் சேதமடைந்த வீதிகள், நீர்ப்பாசன வாய்க்கால்கள், குளக்கட்டுக்களை திருத்தும் பணிகளில் பாதிக்கப்பட்ட மக்களை ஈடுபடுத்தி அவர்களுக்கு நாளாந்தக் கொடுப்பனவாக 500 ரூபா வழங்குவது என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்தப்போவதாக அரசு அறிவித்திருந்தது.

நான்கு மாதங்களுக்கு இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கென 400 மில்லியன் ரூபாவை பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஒதுக்கியிருந்தது.

அந்த உதவித் திட்டமும் இப்போது - மீண்டும் மூன்றாவது தடவையாக பெய்யும் மழையினால் நடைமுறையாகும் வாய்ப்பில்லை. மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 143,000 ஏக்கர் வயல் நிலத்தில் சாகுபடி செய்யப்பட்ட நெற்பயிர்கள் நாசமாகின. (ஏனைய மாவட்டங்களின் நெற்செய்கை பாதிப்புக் குறித்த புள்ளி விவரங்கள் கிடைக்கவில்லை) இது அந்த மாவட்டத்தின் நெற்செய்கைப் பரப்பில் 95 சதவீதமாகும்.

இதேபோன்று, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் நெற்செய்கை பெரியளவில் அழிந்து மக்கள் பாதிக்கப்பட்டனர். அங்கும் மேற்குறிப்பிடப்பட்ட திட்டத்தினை நடைமுறைப்படுத்த முடியாதவாறு 'மூன்றாம் கால' மழையும் அது விளைவித்துள்ள நாசங்களும் பெரும் இடர்களைத் தோற்றுவித்துள்ளன.

கிழக்கு மாகாண மக்களுக்கு, விவசாயிகளுக்கு இயற்கை தரும் சோதனையும் அதன் பாதிப்புக்களும் அவர்களுக்கு வாழ்க்கையிலே வெறுப்பூட்டுவனவாக அமைந்துள்ளன. சோதனை மேல் சோதனை போதுமடா சாமி என்று வேதனைப்படும் நிலை. அவர்களின் வாழ்வாதாரங்களைத் தூக்கி விட அரசு புதிய திட்டங்களை வகுத்துச் செயற்படவேண்டும்.

மாவட்ட வேறுபாடின்றி இயற்கையால் மீண்டும் மீண்டும் சோதிக்கப்படும் மக்களுக்கு உதவும் பணிகளில் பிரதேச, இன வேறுபாடுகள் தலைதூக்காது இருக்க அரசு பார்த்துக்கொள்ள வேண்டும்.

சாதாரண காலங்களில் வழமையான செயற்பாடுகளில் அதிகாரிகளும் அரசும் பாகுபாடு காட்டும் போக்கு பெரிய அளவில் இந்த நாட்டின் சாபக்கேடு. நாட்டு மக்கள் அனைவரும் சமமாக மதிக்கப்பட்டு ஆற்றப்படவேண்டிய அலுவல்கள் அவ்வாறு நடைபெறுவதில்லை; நடத்தப்படுவதில்லை.

மழையால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண மக்களுக்கு உதவும் திட்டங்களும் செயற்பாடுகளும் நேர்சீர் மற்றும் சமத்துவம் பேணுபவையாக அமையவேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு பிரதேச, இன வேறு பாடின்றி உதவவேண்டும். மக்கள் இடர்ப்படும் காலத்தில் மேற்கொள்ளப்படும் பணிகள், மனிதநேயத்தை அடிப்படையாகக் கொண்டு ஆற்றப்படவேண்டும் அது [illegible]குமா?

# கனேடிய விசா பெறுவதற்கு நேரடியாக விண்ணப்பிக்கலாம்

## விளம்பரங்களை நம்பி ஏமாறாதீர்

கொழும்பு, மார்ச் 4

கனேடிய விசா பெற்றுத்தருவதாகச் சில தனிப்பட்ட நபர்கள் அல்லது நிறுவனங்கள் வெளியிடும் விளம்பரங்களைக்கண்டு ஏமாறவேண்டாம் என்று கொழும்பிலுள்ள கனேடிய தூதரகம் எச்சரிக்கை விடுத் துள்ளது.

கனடாவுக்கான விசா பெற்றுத்தருவதாக சில நாணயமற்ற தனி நபர்களும் நிறுவனங்களும் விளம்பரங்கள் வெளியிடுவதாக வும் இவைகளை நம்பி ஏமாறவேண்டாம் என்றும் கனேடியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த வகையில் இலங்கையர்கள் குறித்த நபர்களுக்கு பெரும் தொகைப் பணத்தை வழங்கி ஏமாற்றம் அடைந்துள்ளதாகவும் இவ்வாறு மக்கள் ஏமாற்றப்பட்டிருப்பது கவலையளிப்பதாகவும் தூதரகம் தெரிவித்துள்ளது.

விசா வழங்குவதற்கென ஸ்தானிகரகத்தில் விசேடமாக அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். கனடாவில் வேலை பெற்று தருவதாக அல்லது தொழில் பயிற்சி பெறுவதற்காக பணம் செலுத்து வதானது கனேடிய விசாவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதமாக மாட்டாது என்று தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வசதியற்ற மக்களிடம் பணம் பெற்றுக் கொண்டு பொய்யான நம்பிக்கைகளை அவர்கள் மத்தியில் ஏற்படுத்துவதனால் இந்த நாணயமற்ற நபர்கள் கனடாவின் கௌரவத்துக்கு பாதகம் செய்கிறார்கள். இதனைத் தவிர்ப்பதற்கு நம்மால் ஆன முயற்சிகளை எடுத்துவருகின்றோம் என்று அந்த அதிகாரி மேலும் கூறினார்.

விசா எடுக்கவிரும்புகிறவர்கள் அலு வலக நேரத்தில் கனேடிய விசா வழங்கும் பிரிவில் நேரடியாக விண்ணப்பம் செய்யலாம். இடை நிலைத் தரகர்களில் தங்கியிருக்க வேண்டியதில்லை.

கொழும்பு- 7/51 ஏ, தர்மபால மாவத்தையில் இந்த அலுவலகம் அமைந்துள்ளது என்று அவர் கூறினார். (ப)

# பொருள்களின் விலை விவரத்தை காட்சிப்படுத்தல் நேற்று முதல் அமுல்

கொழும்பு, மார்ச் 4

இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் யாவும் நேற்று மார்ச் 3 ஆம் திகதி முதல் தாம் விளம்பரப்படுத்தும் அனைத்துப் பொருள்களின் விலைகளையும் காட்சிப் படுத்துவது அவசியமாகும்.

நுகர்வுப்பொருள் அதிகார சபை சட்டத்தின் கீழ் இது கட்டாயமாக்கப்பட்டுள் ளது என்று வர்த்தக அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்த சட்டத்துக்கு அமைவாக நுகர்வுப் பொருள்களின் விலைகளை இந்த ஊடகங்கள் வெளிப்படுத்துகின்றனவா என்பது கண்காணிக்கப்படும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

நுகர்வுப் பொருள்களை விளம்பரப் படுத்துவோர் அனைவரும் அப்பொருள்களின் சில்லறை விலைகளையும் காட்சிப் படுத்தியாக வேண்டும். இல்லையெனில் அபராதம் விதிக்கப்படுவார்கள்.

இந்த சட்ட விதிகள் முதலில் பெப்ரவரி முதலாம் திகதியே அமுலுக்கு வரவிருந்தது. விள்ம்பரத்தொழில் பிரிவினர் கேட்டுக் கொண்டதன்பேரில் ஒருமாத கால சலுகை வழங்கப்பட்டது. எனவே நேற்றைய தினம் முதல் இந்தச் சட்டவிதிகள் அமுலுக்குவருவதாக அறிவிக் கப்பட் டுள்ளது.

(ப)

## ஆன்மீக சஞ்சிகைகளுக்கு ஆதரவு நல்குவோம்

ஆன்மீக நூல்கள், மக்களை வழிப்படுத்தும் திசைகாட்டிகள்.

ஈழத்தில் இந்து சமயம் சார்ந்த ஆன்மீக சஞ்சிகைகளுள் காலத்தால் முந்தியது இந்து சாதனம். 1889 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை தனது இருப்பைப் பதிவு செய்து வருகிறது. இன்னும் பல சஞ்சிகைகள் தோன்றி மறைந்துள்ளன. சில வெளிவந்த வண்ணம் உள்ளன.

இந்து சமயச் சஞ்சிகைகள் எதிர்நோக்கும் மிகப் பிரதானமான பிரச்சினை விநியோகம் சார்ந்ததாகவே இருக்கிறது. விநியோகத்துக்கெனச் சீரான வலையமைப்பு இல்லாத நிலை, சில நூற்றுக்கணக்கான பிரதிகளின் விற்பனையுடன் இவற்றை எல்லைப் படுத்தி விடுகின்றது.


எமது சூழலில் கோயில்கள் எனப்படுபவை வழிபாட்டிடங்கள் என்பதற்கு அப்பால் மனிதத்தை வழிப்படுத்தும் மகோன்னதத்தையும். மேற்கொள்ளவேண்டும். இத்தகு சீர்மியத்துக்கு ஆன்மீக நூல்களும் துணை செய்யும்.

வசதியுள்ள ஆலயங்களில் ஆன்மீக நூலகங்களை அமைப்பது பயனுடையது. பிரபலமான ஆலயங்களில் ஆன்மீகப் புத்தகசாலைகள் காணப்படுகின்றன. ஆயினும் ஈழத்தின் இந்து சமயச் சஞ்சிகைகளை அவற்றில் பெறமுடிவதில்லை.

இந்து சமயச் சஞ்சிகைகளைப் பரவலாக்குவதற்கு ஒரு வலைத்தளம் ஏற்படுத்தப்பட வேண்டும். வசதிபடைத்த ஆலயங்களின் பரிபாலகர்கள் இந்த விடயத்தில் கவனமெடுத்து உரிய நூல்களையும் சஞ்சிகைகளையும் தமது ஆலய அடியவர்கள் பெற்றுக் கொள்வதற்கு வகை செய்யமுடியும்.

அண்மையில் ஒரு பிரபல அம்மன் ஆலயப் புத்தக நிலையத்தைக் கண்ணுற்றபோது தமது ஆலயம் சார்ந்த வெளியீடுகளை மாத்திரமே அவர்கள் விற்பனைக்கு வைத்திருந்தமையைக் காண முடிந்தது. இந்து சாதனம், ஞானச் சுடர் முதலிய ஈழத்துச் சஞ்சிகைகளைக் கூடக் காண முடியவில்லை.

ஆன்மீக சஞ்சிகைகளுக்கான வாசகர் வட்டம் மிகக் குறுகியது என்ற குற்றச்சாட்டை அசட்டை செய்ய இயலாது. சஞ்சிகைளின் உருவம், உள்ளடக்கம் பற்றி மீள்நோக்குகை செய்து ஆன்மீக வாசகரை ஈர்க்கவேண்டிய பொறுப்பும் சஞ்சிகை வெளியீட்டாளர்களின் பக்கத்தில் உள்ளது. ஆயினும் எமது மண்ணில் வெளிவரும் ஆன்மீகச் சஞ்சிகைகளை உரிய தடத்தில் பயணிக்கச் செய்து பலனை வழங்க உதவ வேண்டிய தார்மீக பொறுப்பு ஆலயப் பரிபாலகர்களிடமும் உள்ளது.




இந்த நிலையில் பாடசாலைகளின் பங்கு பற்றியும் பிரஸ்தாபிக்கவேண்டும்.

தரமான உள்ளீட்டின் மூலம் நூலகத்துக்கான சஞ்சிகைத் தேவைகளை நிறைவேற்றுகையில் முக்கியமான ஆன்மீகச் சஞ்சிகைகளை மாணவர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கும் பாடசாலை நிர்வாகத்தினர் முன்வரவேண்டும்.

எமது பிரதேசத்துக்கோயில்களும் பாடசாலைகளும் சஞ்சிகைகளைப் பெற்றுப் பலனடைந்தால் மிகு சைவத்துறை விளக்கமுறும் அல்லவா?

ச.லலீசன், விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரியகலாசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள் குடியமர்ந்தோரின் விவரம்கோர ஜனாதிபதி செயலகத்தால் விண்ணப்பம்

## யாழ். அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம்,மார்ச்.4

யாழ்.மாவட்டத்தில் மீள்குடியமர்ந்த குடும்பங்களின் விவரங்களை பதிவு செய்து கொள்வதற்கு ஜனாதிபதி செயலகத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தத் தகவலை யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வன்னியில் இருந்து மீள் குடியமர்ந்த குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்த விண்ணப்பங்களின் தரவுகள் அமைந்துள்ளன. அவை மாவட்டச் செயலகத்துக்கு கடந்த வாரம் அனுப்பப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் யாவும் பிரதேச செயலர்கள் ஊடாக கிராம உத்தியோகத்தர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

விவரங்கள் திரட்டும் பணிகளில் கிராம உத்தியோகத்தர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் பணிகளுக்காக ஜனாதிபதி செயலகத்தால் 2 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இதே வேளை, இராணுவத்தினர் மேற்கொள்ளும் குடும்பப் பதிவுகளுக்கும் மாவட்டச் செயலகத்துக்கும் எந்த வித தொடர்பும் இல்லை. அது பாதுகாப்பு தொடர்பான விடயம். அவை பற்றி எமக்கு எதுவும் தெரியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-9)

# காசநோய் தினத்தையொட்டி தேசிய மட்டத்தில் போட்டிகள்

யாழ்ப்பாணம்,மார்ச் 4

உலக காசநோய் தினத்தை முன்னிட்டு தேசிய மட்டத்திலான கட்டுரைப் போட்டியும், ஓவியப் போட்டியும் நடத்தப்படவுள்ளன.

இந்தப் போட்டிகளுக்கு பிரிவு ஒன்றில் 10 தொடக்கம் 14 வயதுக்குட்பட்டவர்களும் பிரிவு-2 இல் 15 தொடக்கம் 19 வயதுக்குட்படபட்டவர்களும் பிரிவு-3 இல் 19 வயதுக்கு மேற்பட்டவர்களும் பங்குபற்ற முடியும்.

கட்டுரைப்போட்டிக்கு 1500 சொற்களைக் கொண்ட கட்டுரையும், ஓவியப் போட்டிக்கு 17X23 அளவினை உடைய ஓவியமாகவும் இருத்தல் வேண்டும்.

தகுதியுடையவர்கள் பிறந்த திகதி மற்றும் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் ''பொறுப்பதிகாரி, மார்புநோய் சிகிச்சை நிலையம், யாழ்ப்பாணம்'' எனும் முகவரிக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னர் ஆக்கங்களை அனுப்பி வைக்குமாறு யாழ். மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி டாக்டர் சி.எஸ். யமுனாணந்தா அறிவித்துள்ளார்.(ம-313)

# இன்னொருவரது நெல் வயலில் இரவோடு இரவாக அறுவடை

சங்கானை, மார்ச் 4

அறுவடைக்குத் தயாராக இருந்த நெற்கதிர்கள் இனந் தெரியாதோரால் இரவிரவாக அறுவடை செய்யப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

சங்கானையில் கடந்த செவ்வாய்க்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சங்கானை, கரைச்சி இந்து மயானத்துக்கு அண்மையாக உள்ள 30 பரப்பு வயல் காணியிலேயே இந்த அறுவடைஇடம் பெற்றுள்ளது.

முதல் நாள் தனது வயற் காணியைப் பார்யிட்டவர் மறுநாள் சென்று பார்த்தபோது இந்த நிலைமை கண்டு அதிர்ச்சியடைந்தார்.

இந்தச் செயலில் ஈடுபட்ட விசமிகளால் சொந்தக்காரர் பெரும் நஷ்டம் அடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ம)

# சாவகச்சேரியில் நாளை கட்டடத் திறப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 3

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் நிர்மாணிக்கப்பட்ட நுணாவில் பொது நூல் நிலைய மாடிக் கட்டடமும்,சாவகச்சேரி பஸ் நிலையக் கட்டடமும் நாளை சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளன.

மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறு தொழில் அபிவிருத்தி முயற்சி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டு இந்தக் கட்டடங்களைத் திறந்து வைக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-207)

## வழிகாட்டல்...



பாசிக் நிறுவனத்தால் மீன் பதனிடும் பயிற்சி நெறி பருத்தித்துறை தும்பளை கரையோரப் பகுதியில் அண்மையில் ஆரம்பமானது. ஜப்பானைச் சேர்ந்த பயிற்சியாளர் பயிற்சிகளை வழங்கினார். (236)

# நெடுந்தீவுக்கு அத்துமீறி வந்த இந்திய இழுவைப் படகுகள்

## 20 லட்சம் பெறுமதியான வலைகள் சேதம்

நெடுந்தீவு,மார்ச் 4

நெடுந்தீவு கடற்பரப்பில் கடந்த செவ்வாய்க்கிழமை அத்துமீறிப் பிரவேசித்த இந்திய இழுவைப் படகுகள், நெடுந்தீவு பகுதி மீனவர்களின் 20 லட்சம் ரூபா பெறுமதியான வலைகளை வெட்டிச் சேதப்படுத்தியுள்ளன.

நெடுந்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசத் தலைவர் இ.அமிர்தலிங்கம் இந்தத் தகவலைத் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்:-

வழமையாக இந்திய இழுவைப் படகுகள் நெடுந்தீவுக் கடற்பகுதிக்கு திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாள்களிலேயே தொழிலுக்கு வருகின்றன.

ஆயினும் செவ்வாய்க்கிழமை எமது மீனவர்களின் வலைகளைச் சேதப்படுத்தும் நோக்குடனேயே பெருமளவில் திரண்டு வந்துள்ளன என்று எண்ணத்தோன்றுகிறது.

இந்திய மீனவர்களின் படகுகள் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து எமது மீனவர்களின் வலைகளை அடிக்கடி சேதப்படுத்திச் செல்வதுடன் இந்தப் பகுதியில் உள்ள மீன் வளங்களையும் சூறையாடுகின்றனர்.

இலங்கை, இந்திய அரசுகள் இந்தச் சம்பவங்கள் தொடர்பாக ஒரு சுமுகமான தீர்வை ஏற்படுத்த முயற்சித்துக் வருகின்றன.

இந்த நிலையில் இந்திய மீனவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை வலைகளை வெட்டிச் சேதப்படுத்தியது ஒரு மோசமான செயல். இது போன்ற நடவடிக்கைகளால் நெடுந்தீவு மீனவர்கள் எதிர்காலத்தில் தொழில் செய்ய முடியாத நிலை உருவாகலாம்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது விடயத்தில் உடன் நடவடிக்கை எடுத்து உரிய தீர்வை ஏற்படுத்த வேண்டும் என்று மீனவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர் என்று குறிப்பிட்டார். (ம-11)

# சைக்கிள்களைத் திருடியவர் சுன்னாகத்தில் பிடிபட்டார்

வலி வடக்கு, பெப் 4

சுன்னாகம் பகுதியில் இடம் பெற்ற பல்வேறு சையிக்கிள் திருட்டுக்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் கையும் களவுமாக பிடிக்கப்பட்டார்.

சுன்னாகம் இலங்கை வங்கிக்கு முன்னால் விடப்பட்டடிருந்த சையிக்கிளைத் திருட முற்பட்ட சமயம் இவர் வங்கி ஊழியர்கள் மற்றும் பொது மக்களினால் பிடிக்கப்பட்டு சுன்னாகம் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

பகல் வேளை ஒருவர் சைக்கிளை வங்கி முன் நிறுத்திவிட்டு வங்கியில் தமது கடமைகளை நிறைவேற்றச் சென்ற வேளையில் அவரது சைக்கிளை திருட முற்பட்டபோதே இவ்வாறு பிடிபட்டார்.

சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளைத் தொடர்ந்து அவரிடம் இருந்து 22 சைக்கிள்கள் மீட்கப்பட்டது.

ஏற்கனவே திருடப்பட்டு விற்பனை செய்யப்பட்ட விவரங்களின் அடிப்படையில் சைக்கிள்களை மீட்கும் நடவடிக்கைகளையும் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

சந்தேக நபர் இருபாலையைச் சேர்ந்த சுமார் 25 வயது மதிக்கத்தக்க இளைஞராவார். இவரிடம் இருந்து பலர் சைக்கிள்களை கொள்வனவு செய்துள்ளனர் என்றும்தெரியவந்துள்ளது.

சந்தேகநபரை பொலிஸார் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர். (ம-86)

# கோப்பாயில் சிசு மீட்பு; சந்தேக நபருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், பெப் 4

கோப்பாயில் குழந்தையைப் பிரசவித்து வீட்டுவளவுக்குள் புதைத்த தாகக் கூறப்படுகின்ற சம்பவத் துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவரையும் எதிர் வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.மாவட்ட நீதிவான். ஏ.ஏ. ஆனந்தராஜா உத்தரவிட்டார்.

கடந்த 24 ஆம் திகதி கோப்பாய் வடக்கில் உள்ள வீடொன்றில் வளவில் பிரசவித்த சிசுவை அவர்களது வளவில் புதைத்ததாக சிசுவின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பிரசவித்த தாயாரும் சிசுவைப் புதைத்ததாக சந்தேகிக்கப்படும் வீட்டின் உரிமையாளரும் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது யாழ்.மாவட்ட நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா சந்தேக நபர்கள் இரு வரையும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். ( ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவிலுள்ள முருகைக் கற்களில் சிமெந்து உற்பத்திக்கான வாய்ப்புகள்

## புவிச் சரிதவியல் திணைக்களப் பணிப்பாளர் தகவல்

நெடுந்தீவு, மார்ச் 4

நெடுந்தீவில் காணப்படும் முருகைக் கற்களைப் பயன்படுத்தி சிமெந்து உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்புகள் உள்ளன.

புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகப் பணிப்பாளர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகப் பணிப்பாளர் எல்.பீரிஸ், பிரதி முகாமையாளர் ரி.மயூரன் ஆகியோர் நெடுந்தீவுக்கு வருகை தந்து இங்கு இடம்பெறும் மணல் அகழ்வு மற்றும் கல் அகழ்வு தொடர்பாகப் பார்வையிட்டனர்.

இதேவேளை முருகைக் கல்லில் இருந்து சிமெந்து தயாரிப்பதற்குரிய வாய்ப்புத் தொடர்பாகவும் ஆராய்ந்தனர்.

இது தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்கென முருகைக் கற்களைக் கொழும்புக்கு எடுத்துச் சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, முருகைக் கற்கள் அகழப்பட்டமையால் ஏற்பட்டுள்ள அழிவுகள் தொடர்பாகவும் உரிய பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று அவர்கள் பார்வையிட்டனர்.

(ம-111)

# 'நேர்ப்' திட்டத்தின் கீழ் மேலும் 2000 வீடுகள் அமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 4

வடக்கு - கிழக்கு வீடுகள் மீள் நிர்மாணத் திட்டத்தின் (நேர்ப்) 5 ஆம் கட்டத்தில் 2 ஆயிரத்து 606 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன என்று திட்டத்தின் யாழ். மாவட்ட பிரதிப்பணிப்பாளர் த.சாம்சன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

உலக வங்கியின் நிதியுதவியுடன் வடக்கு - கிழக்கில் 2004 ஆம் ஆண்டு முதல் 'நேர்ப்' திட்டத்தில் வீடுகள் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

13 ஆயிரத்து 350 வீடுகள் அமைக்கும் திட்டத்தில் இதுவரை 9 ஆயிரத்து 11 வீடுகள் பூர்த்தியடைந்து பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தில்இதுவரை நான்கு கட்டங்கள் பூர்த்தியடைந்துள்ளன. தற்போது 5 ஆம் கட்டப் பணிகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.

பெரும்பாலும் இந்தக் கட்டப் பணிகள் ஏப்ரல் மாத இறுதிக்குள் பூர்த்தியாகும். இந்தப் பயனாளிகளுக்கு முதற் கட்டக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-9)

# கல், மண் அகழ்வுக்கு நெடுந்தீவில் தடை

நெடுந்தீவு மார்ச் 4

நெடுந்தீவில் கல், மண் என்பன அகழ்ந்தெடுப்பதற்கான தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவுக்கு வருகை தந்திருந்த புவிச்சரிதவியல், அளவை, சுரங்கங்கள் பணியகத்தின் அதிகாரிகள் இதை அறிவித்துள்ளனர்.

அனுமதியின்றி இவ்வாறு கல், மண் என்பவற்றை அகழ்ந்தெடுப்பது குற்றம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கல் அகழ்வதற்கென நெடுந்தீவுப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியகத்தின் அதிகாரியிடம் விண்ணப்பித்துள்ளது.

அது குறித்துப் பரிசீலனை செய்து இனிவரும் காலங்களில் அனுமதி வழங்குவது குறித்துத் தீர்மானிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-111)


# வடக்கின் மீட்சித் திட்டத்தில் பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கீடு

பருத்தித்துறை மார்ச் 4

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்திலுள்ள மூன்று பாடசாலைகளுக்கு வகுப்பறைக் கட்டடங்கள் அமைப்பதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கு இரண்டு மாடி வகுப்பறைக் கட்டடத்துக்காக 19.6 மில்லியன் ரூபாவும், மாணிக்கவாசகர் வித்தியாலயத்துக்கு இரண்டு மாடி வகுப்பறைத் கட்டடத்துக்காக 8.6 மில்லின் ரூபாவும் நகுலேஸ்வரர் வித்தியாலயத்துக்கு 8.24 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன. (ம-190)

## பயிற்சியளிப்பு...



மாணவர்களிடையே வாசிப்புத்திறனை மேம்படுத்தல் தொடர்பான கருத்தரங்கு ஒன்று பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு நேற்று முன்தினம் யாழ்.பொது நூலக சிறுவர் பகுதியில் இடம்பெற்றது. சிங்கப்பூரில் இருந்து வருகை தந்த பயிற்றுவிப்பாளர்களில் ஒருவரான சூசைன் காகிதத்தில் ஆக்கம்செய்வது தொடர்பாக விளக்கமளிக்கிறார். (311)

# செஞ்சிலுவைச்சங்க தொண்டர் விவரம் கோரல்

யாழ்ப்பாணம்,மார்ச்.4

இலங்கை செஞ்சிலுவைச் சங்க சண்டிலிப்பாய்ப் பிரிவின் தொண்டர்களைக் கௌரவிப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 1998 ஆம் ஆண்டு முதல் தொண்டர்களாகக் கடமையாற்றுபவர்கள் தமது பெயர் விவரங்களை எதிர்வரும் 8ஆம் திகதிக்கு முதல் சண் டிலிப்பாய்ப் பிரிவு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு பிரதித் தலைவர் என். இலங்கேஸ்வரன் அறிவித்துள்ளார். (9)

# நீர்வேலி கோப்பாயில் அடிக்கடி மின் தடை

யாழ்ப்பாணம்,மார்ச்.4

நீர்வேலி, கோப்பாய் பிரதேசங்களில் மின்சாரம் அடிக்கடி தடைப்படுவதாகப் பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மின்சாரம், இரவு வேளைகளிலேயே கூடுதலாகத் தடைப்படுகின்றது.

இரவில் மின்சாரம் தடைப்படுவதால் இந்தப் பிரதேசங்கள் இருளில் முழ்கிக் காணப்படுகின்றன.

திடீரெனத் தடைப்படும் இந்த மின்சாரத்தால் இரவில் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

இந்தப் பகுதிகளில் மின் விநியோகம் தடைப்படுவதால் இரவில் வீதியால் பயணம் செய்யும் மக்களும் சிரமம் அடைவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

(ம-26)

# தொழில் திணைக்களத்துக்கு பண்ணையில் நிரந்தரக் கட்டடம்

யாழ்ப்பாணம்,மார்ச் 4

தொழில் திணைக்களத்தின் யாழ். அலுவலகத்துக்குப் பண்ணை யில் நிரந்தரக் கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கான பணிகள் இந்த சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் ஆரம்பிக்கப்படலாம் என்று தொழில் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தக் கட்டடத்தை அமைப்பதற்குரிய நிதி கடந்த ஆண்டிலேயே ஒதுக்கப்பட்டது.

ஆனால் கட்டடம் அமைக்கும் பணிகளில் தாமதம் ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

கட்டடத் திணைக்களத்திடம் இதற்குரிய பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

யாழ் தொழில் திணைக்களத்துக்கு நிரந்தக் கட்டடம் ஒன்று இல்லாமையால் இவ் அலுவலகம் வீரசிங்கம் மண்டபக் கட்டடத்தின் மேல்மாடித் தொகுதியிலேயே செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(ம-26)

# வலி.கிழக்கு மத்தியஸ்தர் சபையில் ஒரே வருடத்தில் 700 பிணக்குகளுக்கு தீர்வு

அச்சுவேலி, மார்ச் 4

வலி. கிழக்குப் பிரதேச மத்தியஸ்தர் சபை ஒருவருட காலத்தில் 700 இற்கு மேற்பட்ட பிணக்குகளை தீர்த்துவைத்துள்ளது.

சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட பிணக்குகளில் நான்கு பிணக்குகள் மட்டுமே நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று மத்தியஸ்தர் சபையின் தலைவர் இ.மயில்வாகனம் தெரிவித்தார்.

வலி. கிழக்கு பிரதேச மத்தியஸ்தர் சபையின் செயற்பாடுகள் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஞாயிற்றுக்கிழமைகள் தோறும்பிணக்குகளை நல்லிணக்கத்துடன் சமரசம் செய்வதற்கான அமர்வுகள் நடைபெறுகின்றன.

ஒருவருட காலப் பகுதியில் மத்தியஸ்தர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 800 பிணக்குகளில் 700 இற்கு மேற்பட்ட பிணக்குகள் சமரசமான முறையில் தீர்த்து வைக்கப்பட்டுள்ளதாகவும் இதுவரை நான்கு பிணக்குகளே சமரசம் செய்யமுடியாமல் நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்வதற்காக மத்தியஸ்தர் சபையினால் அனுமதிவழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வாராந்தம் 15 பிணக்குகள் வரையில் வலி. கிழக்கு மத்தியஸ்தர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு வருவாதாகவும் சபையின் தலைவர் தெரிவித்தார்.

வலி. கிழக்கு பிரதேசத்தில் வகிப்பவர்கள் தமது பிணக்குகள், பிரச்சினைகளை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் செயற்படும் மத்தியஸ்தர் சபையிடம் சமர்ப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

கோப்பாய், அச்சுவேலி பொலிஸ் நிலையங்களில் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகளும் சபைக்கு எடுத்துச் செல்லுமாறு வழிப்படுத்தப்பட்டு வருவதாகவும் 40 வருடங்களுக்கு மேல் தீர்க்கப்படாமல் இழுபறியில் இருந்து வந்த பிணக்குகளும் சபை மூலம் சமரசமாகத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளதாகவும் சபைத் தலைவர் தெரிவித்தார். (ம-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ.150 மில்லியன் செலவில் பொதுச் சந்தைகள் விசுவமடு, மாங்குளத்தில் நவீனமாக அமையும்

கிளிநொச்சி, மார்ச் 4

முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தத்தின்போது சேதமடைந்த விசுவமடு பொதுச் சந்தை, மாங்குளம் பொதுச் சந்தை ஆகியன மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் 150 மில்லியன் ரூபா செலவில் நவீனமான முறையில் அமைக்கப்படவிருக்கின்றன.

இதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ள புதுக்குடியிருப்புப் பிரதேச சபைச் செயலாளர் அ.ஆனந்தகுமார் சந்தைக்கட்டடத்துக்கான முன் மொழிவுகளை முல்லைத்தீவு அரசாங்க அதிபரிடம் சமர்ப்பித்துள்ளார்.

விஸ்வமடுவில் இயங்கி வந்த பொதுச்சந்தை யுத்தம் காரணமாகப் பாவிக்க முடியாதவாறு சேதமடைந்துள்ளதால் அந்தப் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்கள் குறிப்பாக விவசாயிகள் தங்கள் தேவைகளை நிறைவேற்ற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

புதுக்குடியிருப்புப் பிரதேச சபைச் செயலாளர் எடுத்துக் கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்து அந்தப் பகுதி மக்களின் பங்களிப்புடன் தற்காலிகமான சந்தையொன்று அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றது. ஆனால் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் இந்தச் சந்தை அமையாததால் மக்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகிறார்கள்.

எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டும் மக்களினதும் விவசாயிகளினதும் தேவைகளை இலகுவில் பூர்த்திசெய்யும் வகையிலும் நவீனமான முறையில் சந்தைக் கட்டடத்தை அமைப்பதற்கான நடவடிக்கையை எடுத்துள்ள பிரதேச செயலர் சுமார் 70 மில்லியன் ரூபா செலவில் அமைப்பதற்குத் திட்டமிடப்பட் டுள்ள சந்தைக்கான நிதியை முல்லைத்தீவு அரச அதிபரிடம் கோரியுள்ளார்.

இதேவேளை, தற்போதைய சூழ்நிலைக்குஏற்றவாறு மாங்குளத்திலும்நவீனமான முறையில் புதிய சந்தை அமைக்க வேண்டிய கட்டாய தேவை ஏற்பட்டுள்ளது.

முப்பது வருடகாலப் போருக்குப்பின் ஏற்பட்ட சமாதான காலத்தைத் தொடர்ந்து மாங்குளப் பிரதேசம் பல துறைகளிலும் வளர்ச்சி அடைந்து வருவதுடன், மக்கள் நடமாட்டமும் அதிகரித்து வருகின்றது. இரு இன மக்களும் சந்திக்கும் முக்கிய இடமாக விளங்கும் மாங்குளத்தில் நவீன முறையில் 80 மில்லியன் ரூபா செலவில் சந்தை அமைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ள புதுக்குடியிருப்புப் பிரதேச சபைச் செயலாளர் சந்தைக் கட்டடத்துக்கான மதிப்பீட்டைத் தயாரித்து அதற்கான முன்மொழிவை முல்லைத்தீவு அரச அதிபருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

அரச அதிபரின் அங்கீகாரமும் நிதியும் கிடைத்ததும் சந்தைக் கட்டடத்துக்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

(க-115)

## வினாத்தாள் செயலமர்வு

கிளிநொச்சி,மார்ச் 4

கிளிநொச்சி மாவட்டத்தின் 1ஏபி,1சி தரங்களிலுள்ள பாடசாலைகளின் அதிபர்களுக்கும் க.பொ.த. உயர்தர பொறுப்பாசிரியர்களுக்ளுக்கான புதிய பாடத்திட்டத்துக்கு அமைவான வினாத்தாள் அமைப்புத் தொடர்பான செயலமர்வு கடந்த 23 ஆம் திகதி கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

கிளிநொச்சிக் கல்வி வலய கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப்பணிப்பாளர் க.முருகவேல் தலைமையில் இடம்பெற்ற இந்தச் செயலமர்வில் தமிழ் பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி பி.மதுரநாயகம், சமூகக்கல்விப் பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பூ.திருக்குமார், வர்த்தகப் பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் தி.சிவரூபன் ஆகியோர் தமது துறைசார்ந்த பாடங்களில் க.பொ.த.உயர்தர வினாத்தாளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பற்றியும் அவற்றின் கட்டமைப்புப் பற்றியும் கலந்துரையாடினர். பாடசாலை அதிபர்களிடம் புதியமாதிரிவினாத்தாள்கள்அடங்கிய கையேடுகளும் வழங்கப்பட்டன.

(க-405)

# பக்தர்களின் பல லட்சம் ரூபா பெறுமதியான நகை பணம் திருக்கேதீஸ்வரத்தில் திருட்டு

மன்னார், மார்.04

மன்னார் திருக்கேதீஸ்வர சிவராத்திரி தினத்தில் பக்தர்களின் பல லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள், கையடக்கத்தொலைபேசிகள் களவாடப்பட்டுள்ளதாகத் திருக்கேதீஸ்வரத்தில் சிவராத்திரிக் கடமைகளுக்காக அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பலவந்தமாகத் தங்க நகைகள் அறுத்தெடுக்கப்பட்டுள்ளதாகவும் பல பக்தர்களது ஆபரணங்கள் அறுத்தெடுக்கப்பட்டபோது காயத்துக்குள்ளாகியதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பலபேரின் கைப்பைகளும் திருடர்களால் களவாடப்பட்டுள்ளன. இதனால் கையடக்கத் தொலைபேசி, தேசிய அடையாள அட்டை, பணம் ஆகியனவும் பறிபோயுள்ளன.

இருப்பினும் திருட்டில் ஈடுபட்ட பலர் கையும் களவுமாக மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர். பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட அவர்கள் விசாரணைக்காக மன்னார் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளனர்.

நாட்டில் அமைதியான சூழ்நிலை நிலவுகின்ற நிலையில், நாட்டின் பல பாகங்களிலிருந்தும் இம்முறை பல லட்சக்கணக்கான பக்தர்கள் சிவராத்திரிக்காக திருக்கேதீஸ்வரத்துக்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம)




## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்: 14.09.1929
மறைவு: 05.02.2011

அமரர் ஏரம்பமூர்த்தி அன்னலட்சுமி

கடந்த 05.02.2011 வியாழக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குல விளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் இன்று (03.03.2011) வியாழக்கிழமையும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை மறுதினம் (05.03.2011) சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு எமது இல்லத்திலும் நடைபெறும். அன்னாரது வீட்டுக்கிருத்தியக் கிரியைகளிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மகள் - திருமதி நவீனராஜா செல்வராணி
முருகன் கோயில் வீதி,சங்கரத்தை.

(49,23,21)

## கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயப் பொங்கல் விழாவின் போது வாணிபம் மேற்கொள்ளும் வணிகர்களுக்கான அறிவித்தல்

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் எதிர்வரும் 19.03.2011 சனிக்கிழமை வழமைபோல் நடைபெறவுள்ளது.

இத்தினத்தில் வியாபாரம் மேற்கொள்ளும் வணிகர்களுக்கான வியாபார நிலைய ஏலவிற்பனை 06.03.2011 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

ஆலய பரிபாலன சபை.

## யா/அராலி முருகமூர்த்தி வித்தியாசாலை வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி

தலைவர்: திருமதி ஜெ.தருமராசா அவர்கள் (அதிபர்)

காலம்: இன்று (04.03.2011)
வெள்ளிக்கிழமை பி.ப.1.30 மணி

இடம்: பாடசாலை மைதானம்

பிரதம விருந்தினர்
திரு.துரை எங்கரசு
(கோட்டக் கல்விப் பணிப்பாளர், சங்கானை)

சிறப்பு விருந்தினர்
திரு.ஜெ.கதிர்காமநாதன்
(கிராம சேவையாளர், அராலி மத்தி)

கௌரவ விருந்தினர்கள்
திருமதி த.பரமேஸ்வரி அம்மா
(ஓய்வுபெற்ற அதிபர்)
திரு.வ.கிருஷ்ணராசா
(சமுர்த்தி உத்தியோகத்தர், அராலி மத்தி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை. (39-23-19) பாடசாலைச் சமூகம்.

(080)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
சின்னையா தர்மலிங்கம்

தோற்றம்
29.05.1932

மறைவு
13.02.2010

திதி. 04.03.2011

அகிலத்தில் ஒளிவீசி வாழ்ந்து
ஆண்டவன் நிழலடி சேர்ந்தீரே
ஆண்டொன்று ஆகியும்
உம் நினைவை மறந்ததில்லை ஐயா,
ஆறாத துயரோடு வாழ்கின்றோம்.

கொம்மந்தறை,
வல்வெட்டித்துறை.
0776141907 (23-19-43) குடும்பத்தினர்.

## கடை வாடகைக்குண்டு

K.K.S. Road H.S.B.C, DFCC வங்கி அருகில் 13 அடி அகலம், 35 அடி நீளம் உடைய விஸ்தீரணம் கொண்ட கடை வாடகைக்குண்டு.
தொடர்பு:-0770262486
0776110859

## வேலையாள்கள் தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் (பெண்கள்) தேவை.
நேரில் வரவும்.

லைடன் புடைவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி, (பஸ்நிலையம் முன்பாக,)
யாழ்ப்பாணம். தொ.பே. 021 2222381 (19-43)

## வாடகைக்குண்டு

இல.115, 04ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தில் 5 அறைகள் 2 வரவேற்பறைகள், வாகனத்தரிப்பிட வசதிகொண்ட வீடும், பற்றிக்வீதியில் 8 அறைகள் வாகனத் தரிப்பிட வசதிகொண்ட 2 மாடி கட்டடமும் (நிறுவனங்களுக்கு உகந்தது) வாடகைக்குண்டு.
தொடர்பு:- 021-5100184
(மு.ப 8.30 மணி முதல் மாலை 6.30 மணிவரை தொடர்புகொள்ளவும்)

## காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டை மேற்கு, திருஞானசம்பந்தர் வீதியில் சித்தியடி வைரவர் ஆலயம் முன்பாக 08 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. அமைதியான, பாதுகாப்பான சூழலில் புளியமரங்கள், பனைமரங்களுடன் நல்ல தண்ணீர்க் கிணற்றுவசதியுடன் காணி அமைந்துள்ளது.
தொடர்பு:-0776030617

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் செல்லத்துரை
தனேந்திரகுமாரன்
(கான இசைமணி ரங்கன்)



பிறப்பு 15 . 10 . 1948
இறப்பு 10 . 03 . 2005

ஆண்டுகள் ஆறு சென்றாலும்
ஆறாது எங்கள் உள்ளம்

16/2, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (43 -19- 23)

என்றும் உங்கள்
நினைவுகளோடு வாழும்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாமதமாகும் சாதாரணதர முடிவுகள்; விரக்தியில் தவிக்கும் மாணவர்கள்

கிளிநொச்சி, மார்ச் 4

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பிரபல பாடசாலைகளில் இருந்து 2009 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் க.பொ.த சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு இதுவரை பரீட்சைப் பெறுபேறுகள் கிடைக்கவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் சம்பந்தப்பட்ட மாணவர்கள் க.பொ.த உயர் தரத்தில் உரிய பாடத்துறைத் தெரிவை மேற்கொண்டு கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாமல் இருப்பதாக மாணவர்களின் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

2009 ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக்குடியமர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது டிசெம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றுகின்றனர் என்பதை வெளிப்படுத்துவதற்கு விசேட ஏற்பாட்டின் பேரில் புதிய சுட்டிலக்கத் தொடரில் கிளிநொச்சியில் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டது.

இந்த வகையில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் பலருக்கு உரிய முறையில் பரீட்சைப் பெறுபேறுகள் இன்றுவரை கிடைக்கவில்லையெனக் கூறப்படுகின்றது. பரீட்சைப் பெறுபேற்றை எதிர்பார்த்த நிலையில் கிளிநொச்சி இந்து மகாவித்தியாலயம், முழங்காவில் மகாவித்தியாலயம், ஜெயபுரம் மகாவித்தியாலயம் ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்கள் உள்ளனர்.

இந்த மாணவர்கள் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருக்கும் போது 2009 க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்கு விண்ணப்பித்திருந்தனர் எனவும் அவர்கள் கிளிநொச்சியில் பரீட்சைக்குத் தோற்றினர் எனவும் விசேட ஏற்பாட்டில் அவர்களுக்கான சுட்டிலக்கங்கள் மாற்றப்பட்டு வழங்கப்பட்டதாகவும் புதிய சுட்டிலக்கத்தில் பரீட்சைக்குத் தோற்றியமையினால் தான் பெறுபேறு இதுவரையும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பல்வேறு பாதிப்புக்களுக்கு மத்தியில் எதிர் நீச்சல் போட்டுப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் பரீட்சை முடிவை எதிர்பார்த்தும், உயர் கல்வியை உரிய முறையில் தொடரமுடியாமலும் விரக்தியடைந்த நிலையில் காத்திருப்பதாகக் கவலை தெரிவிக்கின்றனர். (க-115)

## வாகன பயிலுநர் அட்டை வழங்கப்படாததால் அனுமதிப் பத்திரம் பெறுவதில் சிரமம்

கிளிநொச்சி,மார்ச் 4

கிளிநொச்சி மாவட்டத்தில் தனியார் சாரதிப் பயிற்றுவிப்பாளர்கள் ஊடாக விண்ணப்பித்துப் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு இதுவரை பயிலுநர் அட்டை (எல்போட்) வழங்கப்படாததால் அவர்கள் சிரமங்களுக்கு ஆளாகுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்காகப் பலர் கிளிநொச்சி செயலகத்தின் ஊடாகவும் தனியார் சாரதிப் பயிற்றுவிப்பாளர்கள் மூலமாகவும் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துப் பரீட்சையும் எழுதினர். இதில் ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் தனியார் பயிற்றுவிப்பாளர்கள் மூலமாகத் தோற்றிய 903 பேரில் 736 பேர் சித்தியடைந்துள்ளனர். ஆனால் இவர்களுக்கு இதுவரை பயிலுநர் அட்டை வழங்கப்படவில்லை. இதனால் இவர்கள் அடுத்த கட்டமாக நடைபெறவிருக்கும் வாகனங்களை ஓட்டிக் காண்பிக்கும் பரீட்சைக்குத் தோற்ற முடியாத நிலையில் உள்ளனர்.

இது தொடர்பாக இவர்கள் கிளிநொச்சிச் செயலகத்துடன் தொடர்பு கொண்டபோது இதற்குப் பொறுப்பான அலுவலர் உரிய ஆவணங்கள் யாவற்றுடனும் கொழும்புக்குச் சென்றுள்ளதாகவும் அவர் திரும்பி வந்த பின்னரே பயிலுநர் அட்டைகள் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் பரீட்சை முடிவுகள் வெளிவந்து ஒரு வார காலத்தினுள் இந்த அட்டைகள் வழங்கப்படுவதே வழக்கமாகும். கிளிநொச்சிச் செயலகத்தின் அசமந்தப் போக்கினால் தாம் பாதிக்கப்படுவதாகப் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை செயலகம் ஊடாக விண்ணப்பித்துப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கு இந்த அட்டைகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-06)

### மன்னாரில் சுற்றுலா...



பயனுள்ள முயற்சி: மன்னார் மாவட்ட சுற்றுலாப் பிரதேசங்கள் அடங்கிய தொகுப்பு நூலின் முதற்பிரதி வடமாகாண சபையின் திட்டமிடல் பிரதிப் பிரதமசெயலாளர் இ.உமாகாந்தனால் ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறியிடம் வழங்கப்படுகின்றது. (க)

## வைத்தியசாலைகளில் மருத்துவர் பற்றாக்குறை

கிளிநொச்சி,மார்ச் 4

கிளிநொச்சி மாவட்டத்தில் கிராமப்புற வைத்தியசாலைகளில் நிரந்தர மருத்துவர்கள் நியமிக்கப்படாமையால் கிராம மக்கள் மிகுந்த சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக வன்னேரிக்குளம், முழங்காவில், வட்டக்கச்சி, தருமபுரம் ஆகிய கிராமப்புற வைத்தியசாலைகளே அதிக பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

பல இடர்களுக்கு மத்தியில் மீளக்குடியேறியுள்ள இந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வைத்திய வசதிகளுமின்றிச் சிரமங்களுக்கு முகம் கொடுப்பதாகப் பலரும் வேதனையுடன் தெரிவிக்கின்றனர். (க)

## கிளி. 50 வீட்டுத் திட்டத்தில் மேலும் 06 குழாய்க் கிணறுகள்

கிளிநொச்சி, மார்ச் 4

கிளிநொச்சி மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் 50 வீட்டுத்திட்டப் பயனாளிகளின் பயன்பாட்டுக்கு மேலும் 6 குழாய்க் கிணறுகள் அமைக்கப்படவுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக்குடியேறிய மக்களின் நன்மை கருதி தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் அறிவியல் நகரில் பல மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இந்த 50 வீட்டுத் திட்டம் தற்போது பூர்த்தியடையும் நிலையில் உள்ளது. அரசுக்குச் சொந்தமான காணியில் தலா மூன்றேகால் லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் வீடுகளுக்கான பயனாளிகள் ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்டு வீடுகளை அமைப்பதற்கான பணமும் படிப்படியாக வழங்கப்பட்டது.

ஆனால் இந்த வீடுகள் அமைந்துள்ள இடத்தில் இருக்கும் இரு கிணறுகளின் மூலம் இங்குள்ளவர்களுக்குக் குடிதண்ணீர் வழங்க முடியாமல் உள்ளதால் மேலும் ஆறு குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கு வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் அனுமதி வழங்கியுள்ளார். இதைத் தொடர்ந்து இந்த மேலதிகக் கிணறுகளை அமைப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்பொழுது தேசிய நீர் வழங்கல் சபை மூலம் பல லட்சம் ரூபா செலவில் ஆறு குழாய்க் கிணறுகளை அமைத்துக் கொடுக்கவென முதற்கட்டமாக மண்வளம் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (க-115)

# வவுனியா உள்ளூராட்சித் தேர்தலில் இம்முறை புதிய நடைமுறைகள்

வவுனியா, மார்ச் 4

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலின்போது வவுனியா மாவட்டத்தில் சில முக்கியமான நடைமுறைகள் கடைப்பிடிக்கப்பட இருப்பதாகத் தெரியவந்துள்ளது.

இதில் தாம் சார்ந்த நிறுவனத்தின் அடையாள அட்டைகளுடன் வரும் தேர்தல் ஒன்றுக்கான மக்கள் அமைப்பு (பவ்ரல்) தேர்தல் வன்செயல்களை அவதானிக்கும் நடுநிலையம் (சி.எம்.ஈ.வி) ஆகியவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகளை மட்டும் தேர்தல் அவதானிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவது முக்கியமானதாகும்.

அத்துடன் வாக்களிப்பின் போது வாக்களிப்பு நிலையமொன்றில் ஒரு வேட்பாளரை மட்டும் அனுமதிப்பதுடன் அவர் சிறிது நேரம் மட்டுமே உரையாடுவதற்கு அனுமதி வழங்கப்படும். மேலும் புதிதாக வழங்கப்படும் தற்காலிக அடையாள அட்டைகள் வவுனியா உதவித் தேர்தல் ஆணையாளரின் கையொப்பத்துடன் மட்டுமே வழங்கப்படும் அத்துடன் முன்னைய தேர்தல்களின் போது தேர்தல் திணைக்களத்தாலும், ஆட்பதிவுத் திணைக்களத்தாலும் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளுக்கு புதிய ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டு உதவித்தேர்தல் ஆணையாளரின் கையொப்பம் இடப்பட்டிருக்கும். இவற்றை வழங்கப்பட்ட பட்டியலுடன் ஒப்பிட்டுப் பட்டியலில் பெயரும், முகவரியும் இருந்தால் மட்டுமே வாக்களிக்க அனுமதிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (க-501)

# சமுதாய மீளமைப்புத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சியில் பல்வேறு அபிவிருத்திகள்

நாவற்குழி,மார்ச் 4

வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (நிக்கொர்ட்)கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் பல கட்டடங்கள் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளன.

மிருகவள உற்பத்திகள் மற்றும் சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் அலுவலகம் சுமார் 8மில்லியன் ரூபா செலவில் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிலுள்ள சங்கத்தார் வயல் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக் கட்டடம் சுமார் இரண்டு மில்லியன் ரூபா செலவிலும், கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்கான இரண்டு அலுவலகக் கட்டடங்கள் இரண்டரை மில்லியன் ரூபா செலவிலும் புனர்நிர்மாணம் [illegible] படவுள்ளன.

இதைவிட பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிலுள்ள 5 பொதுமண்டபங்கள் சுமார் 7 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

அத்துடன் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 06 பொதுமண்டபங்களும் 3 பொதுக் கிணறுகளும் சுமார் ஏழரை மில்லியன் ரூபா செலவிலும், கரைச்சிப் பிர[illegible] மில்லியன் ரூபா செலவிலும் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 6 பொதுமண்டபங்கள் மற்றும் 3 மீன் சந்தைக்குரிய கட்டடங்கள் சுமார் ஐந்தரை மில்லியன் ரூபா செலவிலும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கும் இறுதித் திகதி இம் மாதம் 11 ஆம் திகதி காலை 10மணி வரை ஆகும். இந்தக் கேள்விப் பத்திரங்கள் தொடர்பான மேலதிகத்தகவல்களை "மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர், நிக்கொர்ட் திட்டம், கச்சேரி, கிளிநொச்சி எனும் முகவரியில் பெறலாம். மேலதிக தகவல்களை 024-324 8282 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ kili.mul@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரியுடனோ தொடர்பு கொண்டு பெற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச பொறிமுறையின் அதிகார பலம்மிக்க சபையை ஆட்சிபுரியும் வாய்ப்பு மலையக மக்களுக்கு உண்டு

## தொ. தே. மு. பொதுச் செயலாளர் திலகராஜ் தெரிவிப்பு

நுவரெலியா,மார்ச்.4

சுதந்திரத்துக்குப் பின்னர் வாக்குரிமை பறிக்கப்பட்ட நிலையில் நாடற்றவர்களாக இருந்த மலையக மக்கள் இந்த நாட்டில் நடைபெறும் எந்தவொரு தேர்தலிலும் வேட்பாளர்களாகக் களமிறங்கும் உரிமையைக் கொண்டிருக்கின்றனர். அரச பொறிமுறையின் அதிகாரபலம்மிக்க சபையை ஆட்சிபுரியும் வாய்ப்பு மலையக மக்களுக்கு உண்டு.

- எனத் தொழிலாளர் தேசிய முன்னணியின் பொதுச் செயலாளர் எம்.திலகராஜ் தெரிவித்துள்ளார்.

அம்பகமுவை பிரதேச சபைக்குக் கீழாக வரும் சாமிமலைப் பிரதேசத்தில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் சார்பில் மலையகக் கூட்டமைப்பில் களமிறங்கும் இளம் வேட்பாளர் கே.சுரேஸ் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் தெரிவித்துள்ளார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

அதேநேரம் அரச பொறிமுறையின் அதிகாரம்மிக்க சபையொன்றை ஆட்சி செய்யும் வாய்ப்பு மலையகப் பகுதிகளில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் ஊடாகவே மலையக மக்களுக்குக் கிடைகின்றது. இதற்கு முன்னரும் உறுதிப்படுத்தப்பட்ட இந்த வாய்ப்பினை இந்த முறையும் மலையக அரசியலமைப்புக்கள் தனித்து நின்று நிலைநிறுத்தும் முயற்சியாகவே மலையகக் கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது

உள்ளூராட்சிச் சபைகளே சமூகத்தின் அடித்தட்டு மக்களை அரசியல் தளத்துக்குக் கொண்டுவரும் வாய்ப்பினை வழங்குகின்றன. ஆனால் மலையக மக்களை அடக்கி யாள நினைக்கும் எதேச் சதிகாரத் தலைமைகள் இந்த வாய்ப்பினையும் அடமானம் வைக்கும் அரசியல் நடவடிக் கைகளிலேயே ஈடுபடுகின் றன.

ஆனால் மலையகக் கூட்டமைப்பின் ஊடாகத் தொழிலாளர் தேசிய சங்கமும், தொழிலாளர் தேசிய முன்னணியும் தொழிலாளர்கள் முதல் பட்டதாரிகள் வரை தோட்டப் புறங்களை உள்வாங்கக்கூடிய வகையில் வேட்பாளர்களை களமிறக்கியுள்ளன.

இளம் தோட் டக் குழுத் தலைவர்கள், பட்டதாரி, மருத்துவ தாதி, ஊடகவியலாளர், சமூக அரசியல் ஏற்பாட்டாளர்கள், சமூக சேவையாளர் கள், ஆசிரியர்கள் எனப் பலரை நாம் தெரிவு செய்திருக்கின்றோம்- என்றார். (ளி)

# வீதி மூடப்பட்டதால் மக்கள் பாதிப்பு

பசறை - மடுகஸ்தலாவை வீதி கடந்த 15 நாள்களாக மூடப்பட்டிருப்பதால் அங்குள்ள நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

கடந்த மாதம் பெய்த அடை மழையின் போது இந்த வீதியில் பாறாங்கல் சரிந்து விழுந்ததால் வீதியூடான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டது. பாறாங்கல் விழுந்து 15 நாள்கள் கடந்துவிட்ட நிலையிலும் கல் உடைத்து அகற்றப்படவில்லை.

இந்த வீதியை மக்கள் பாவனைக்கு திறந்துவிட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை எனப் பிரதேச வாசிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மடுகஸ்தலாவைப் பகுதியைச் சேர்ந்த சுமார் 1,600 பேர் தினமும் இந்த வீதியூடாகப் பயணிப்பதால், வீதியை விரைவில் பாவனைக்கு விடுமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (204)

# அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் கியூதோட்ட சிறுவர் பராமரிப்பு நிலையம்

நுவரெலியா,மார்ச்.4

தோட்டப் பகுதிகளைச் சேர்ந்த சிறுவர்கள்தமது இளமைக் காலத்தை அடிமைத்தன மாகக் கழிக்க வேண்டிய நிலையி லுள்ளனர்.

தோட்டப் பகுதிகளைச் சேர்ந்த தாய்மார் தொழிலுக்குச் செல்லும்போது தமது குழந்தைகளை தோட்டத்திலுள்ள சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் ஒப்படைத்து விட்டுச் செல்கின்றனர்.

ஆனால் பெரும்பாலான தோட்டப்பகுதி சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் எவ்விதமான அடிப்படை வசதிகளுமில்லாத நிலை காணப்படுகின்றது.

இவ்வாறனதொரு சிறுவர் பராமரிப்பு நிலையமே பொகவந்தலாவை கியூ கீழ்ப் பிரிவு தோட்டத்திலுள்ள சிறுவர் பராமரிப்பு நிலையம்.

இங்கிருக்கும் குழந்தைகளின் சுகாதாரம், வளர்ச்சி என்பவற்றைக் கருத்திற் கொண்டு தோட்ட நிர்வாகம் இந்தச் சிறுவர் பராமரிப்பு நிலையத்தை சகல வசதிகளுடன் கூடிய சிறுவர் பராமரிப்பு நிலையமாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ளி)

# தாயை பஸ் நிலையத்தில் விட்டு மகள் தலைமறைவு

தாயொருவரை அவரது மகள் கண்டி குட்ஷெட் பஸ் நிலையத்தில் அநாதரவாக விட்டுவிட்டுத் தலைமறைவாகிய சம்பவம் அண்மையில் நடந்தது. அநாதரவாக விடப்பட்ட அந்தத் தாய் திக்குத் தெரியாமல் நீண்டநேரமாக பரிதவித்தார். இதைக்கண்ட ஒருவர் கண்டி பொலிஸ் நிலையத்துக்குத் தெரிவித்ததையடுத்து, அங்கு விரைந்த பொலிஸார் தாயைப் பொறுப்பேற்றனர்.

அந்த மூதாட்டி கூறிய தகவல்களின்படி அவர் அம்பிட்டிய பிரதேசவாசியெனவும் ஐந்து பிள்ளைகளின் தாயெனவும் தெரியவந்துள்ளது. கண்டி மக்ளிர், சிறுவர் பாதுகாப்புச் செயலணியின் பொறுப்பதிகாரி திருமதி ஜானகி குமாரியின் தலைமையிலான பொலிஸ் குழு இந்தத் தாயைப் பராமரித்து வருவதுடன், வயோதிபர் மடத்தில் அவரை ஒப்படைக்கவும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

SHAMROCK
ஈச்சமோட்டை,யாழ்.
2013 A/L 2012
*C/MATHS
G.கண்ணன்,B.Sc.
*PHY:-
S.SASI,B.Sc.(Edu)
*CHE:-M.A.றோஜன்
B.Sc(Hons)
*BIO:-
R.குமாரநந்தன்,B.Sc.
*GEN.ENGLISH:-
G.RANGIT
M.KINGSTON
*Gr 1 முதல் O/L வரை
*ENG . MEDIUM
-6 TO 11
*புலமைப் பரிசில் 5

# காலாவதியான திரிபோஷா பைக்கற்றுக்கள் விநியோகம்

கண்டி,மார்ச்.4

கண்டி, மெனிக்ஹின்ன குன்னேபான பிரதேசத்திலுள்ள தாய்மார்களுக்கு காலாவதியான திரிபோஷா பைக்கற்றுக்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் திரிபோஷா மாவை உண்ட குழந்தைகள் சுகவீனமுற்றதாகவும் தாய்மார்கள் தெரிவிக்கின்றனர். (204)

# கொடக்காவெல பிரதேச சபைக்கு தமிழரைத் தெரியக் கோரிக்கை

இரத்தினபுரி,மார்ச்4

கொடக்காவெல பிரதேச தமிழ் மக்கள் தமது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற வேண்டுமாயின் இந்தப் பிரதேச சபைக்குத் தமிழ் உறுப்பினரொருவரைத் தெரிவு செய்ய வேண்டும் - என இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி.சொய்சா தெரிவித்துள்ளார்.

அண்மையில் இறக்குவானையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

தேர்தலில் வெற்றிபெறும் வேட்பாளர்கள் தோட்டப்பகுதி மக்களின் அடிப்படை வசதிகளை நிறைவேற்ற வேண்டும்.

இறக்குவானை தேர்தல் தொகுதியை கடந்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 20 ஆயிரம் வாக்குகளால் கைப்பற்றியது.

இறக்குவானை பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யத் தமிழ்த் தலைவர் ஒருவரை நியமிக்க அரசியல்வாதிகள் முயற்சிக்கவில்லை.

கொடக்காவெல பிரதேசசபை உறுப்பினராகத் தமிழர் ஒருவர் வரவேண்டும். அப்போதுதான் தமிழ் மக்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும்- என்றார்.

T.V.S Scooty விற்பனைக்குண்டு

நல்ல நிலையிலுள்ள 2350Km ஓடிய T.V.S STREAK Model, NPVK தொடர் உடைய T.V.S Scooty விற்பனைக்குண்டு.
தொடர்பு:-இல 75 மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம்.
T.P-024 567 1233
(ந.ப 12.00-5.00 பி.ப வரை தொடர்பு கொள்ளவும்).

ஆசிரியர்கள் தேவை

பிரபல தனியார் கல்வி நிலையம் ஒன்றுக்குப் பின்வரும் பாடங்களுக்கு ஆசிரியர்கள் தேவை
தரம்-6-8 தமிழ், இந்துசமயம்,வரலாறு, ஆங்கிலம்,புவியியல்
தரம்-9-11 தமிழ்,இந்து சமயம்,ஆங்கிலம், புவியியல்
தரம்-4,5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு கற்பிக்கக் கூடிய ஆசிரியர்
தொடர்புகளுக்கு: 0777728994
(ஆண்,பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்).
(39-22-23)




M.A, M.COM, M.sc, M.BA PG.Dip.
காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)

மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டுக்கான (மார்கழி மாதம் பரீட்சை எடுப்பவர்களுக்கான) பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
MA இல் வரலாறு, பொருளியல், அரசியல் விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம்,சமயமும் தத்துவமும், பொது நிர்வாகம், சமூகவியல், Journalism & Mass Communication ஆகிய பாடங்களில் ஒன்றினைத் தெரிவுசெய்யமுடியும்.
★M.Com இல் வங்கியியல், கூட்டுறவு, வர்த்தகம் ஆகியவற்றில் ஒன்றினை தெரிவு செய்யமுடியும்.
★PG.Dip. இல் ஒரு வருட கற்கை நெறியாக Journalism & Mass Communication Management, Marketing Management, Hospital Management, N.G.O. Management, Computer Application ஆகிய பாடங்களில் ஒன்றினைத் தெரிவுசெய்ய முடியும்.
பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
குறிப்பு:
1.வைகாசி மாதப் பரீட்சைக்கு பதிவினை மேற்கொண்டவர்களுக்கான பரீட்சை விண்ணப்பங்கள் பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டுள்ளன. பரீட்சை விண்ணப்ப முடிவு திகதி : 10.03.2011
2. பரீட்சை விண்ணப்பங்களை அலுவலகத்தில் பெற்று விண்ணப்பிக்கவும்.
★ பரீட்சைகள் யாவும் புதிய உயர் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள பரீட்சை மண்டபத்தில் நடைபெறும்.
யாழ்.இணைப்பாளர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம். புதிய உயர் கல்லூரி
தொ.பே: 021 222 8148 (48,19,23) ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புக் கிராம மக்களுக்கு காணி உறுதிகள் வழங்க ஏற்பாடு

## மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் தெரிவிப்பு

கடந்தகால யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து மீள்குடியேறி வருகின்ற மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட எல்லைப்புறத் தமிழ் மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளுக்கு காணி உறுதிகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ள தாக மீள்குடியேற்றப் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

இந்தப் பகுதிக்கு திடீர் பயணத்தினை மேற்கொண்ட பிரதியமைச்சர் அந்தப்பகுதி மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே இதனைத் தெரிவித்துள்ளார்.


தாம் நீண்டகாலமாக இந்தப் பகுதியில் குடியேறி விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்ற போதிலும், இதுவரையில் தமது காணிகளுக்கான உறுதிகள் வழங்கப்படவில்லையென அந்தப் பகுதி மக்கள் தெரிவித்திருந்தனர். தமது பகுதிகளில் வெளியிடங்களிலிருந்து மாடுகளை கொண்டு வந்து மேய்ச்சலுக்கு விடுவதால் பயிர்கள் அழிவதாகவும் பிரதியமைச்சரிடம் மக்கள் தெரிவித்திருந்தனர். இதனைக் கவனத்திற் கொண்ட மீள்குடியேற்றப் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், மக்களின் வாழ்விடப் பகுதிகளில் மாடுகளை மேயவிடும் உரிமையாளருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென உறுதியளித்துள்ளார். காணி உறுதி இல்லாதவர்களுக்கு காணி உறுதிகளை வழங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (204)

## ஆதிபராசக்தியின் மாலை நீள்கிறது

மட்டக்களப்பு,மார்ச்.4

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடியில் சுனாமியினால், யுத்தத்தினால், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட தாய், தந்தையை இழந்த சிறார்களை பராமரிக்கும் சக்தி இல்லத்திலுள்ள மேல்மருவத்தூர் அன்னை ஆதி பராசக்தி ஆலயத்தில் ஆதி பராசக்திக்கு பக்தர்களால் அணிவிக்கப்பட்ட இரண்டு அடி நீளமான மாலைகள் அனைத்தும் நாளுக்கு நாள் நீண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (204)

## கட்டடங்கள் பாதிப்பு...



திருகோணமலை, வில்கம்விகாரப் பகுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை அதிகாலை காட்டு யானைகளின் தொல்லையினால் பழைமை வாய்ந்த தொல்பொருள் ஆராய்ச்சி நிலையத்திற்குச் சொந்தமான கட்டடங்கள் பல சேதமடைந்துள்ளன.

# திருமலையில் கைத்தொழிற் பேட்டை

திருகோணமலை,மார்ச்.4

இலங்கையில் வெளிநாட்டு முதலீடுகள் அதிகரித்தவண்ணம் உள்ளதால், இதனை மேலும் அதிகரிக்கச் செய்யும் வகையில் சகல உட்கட்டுமான வசதிகளுடன் கூடிய பெரிய கைத்தொழிற் பேட்டையொன்று திருகோணமலையில் அமைக்கப்படவுள்ளது.

இதற்கென 97 சதுரக் கிலோமீற்றர் நிலப்பரப்பு ஒதுக்கப்பட்டு திருகோணமலை, சம்பூரில் இந்தக் கைத்தொழில் பேட்டை அமைக்கப்படவுள்ளது. (204)

# புல்மோட்டை முஸ்லிம் வித்தியாலயத்துக்கு வாத்திய உபகரணங்கள் கையளிப்பு

திருகோணமலை,மார்ச்.4

கிழக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.அன்வர் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து 75 ஆயிரம் ரூபாவை புல்மோட்டை முஸ்லிம் மகாவித்தியாலயத்திற்கு வாத்திய உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக ஒதுக்கியிருந்தார்.

திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர் கிறிஸ்டி முருகுப்பிள்ளை இந்தநிதி மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வாத்திய உபகரணங்களை புல்மோட்டை முஸ்லிம் வித்தியாலய ஆசிரியர் அசனாலெப்பையிடம் கடந்த செவ்வாய்க்கிழமை கையளித்துள்ளார். (204)

# தற்காலிக அ.அட்டைக்கு இலவசப் புகைப்படங்கள்

## கபே அமைப்பு வழங்குகின்றது

மட்டக்களப்பு,மார்ச்.4

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்களிக்க உள்ளவர்களுக்கு தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு தற்காலிக அடையாள அட்டை வழங்குவதற்கான புகைப்படங்களை கபே எனப்படும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் இலவசமாக எடுத்து வழங்கி வருகின்றது.

காத்தான்குடி மற்றும் ஏறாவூர், ஓட்டமாவடி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள கிராம உத்தியோகத்தர்கள் ஊடாகத் தற்காலிக அடையாள அட்டைகளுக்கான இலவசப் புகைப்படங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இலவசப் புகைப்படங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ், காத்தான்குடி, ஏறாவூர் பிரதேச செயலாளர் பிரிவுகளில் புகைப்படங்கள் வழங்கும் நடவடிக்கை நிறைவுபெற்றுள்ளதாகக் கபே அமைப்பின் கிழக்கு மாகாண இணைப்பாளர் திருமதி சுகுலா குமாரி தெரிவித்துள்ளார். (204)

# கடற்கரை அளவுகளில் மாறுபாடு; சிங்கள அமைப்பு ஆர்ப்பாட்டம்

திருகோணமலை,மார்ச்.4

திருகோணமலை மாவட்டத்தில் கடற்கரையோரத்தில் குடியிருப்பவர்களை அங்கிருந்து வெளியேற்றும் முயற்சியில் கடற்படையினர் ஈடுபட்டு வருகின்றனர் என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இதனொரு அங்கமாக கரையோரப் பகுதிகள் யாவும் அளந்து அடையாளமிடப்பட்டு வருகின்றது.

இந்தநிலையில், சில இடங்களில் 60 மீற்றர்களும் சில இடங்களில் 80 மீற்றர்களும் என மாறுபட்ட அளவுகள் அடையாளப்படுத்தப்படுகின்றன.

இதனைக் கண்டிக்கும் முகமாக திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜயசேகர தலைமையில் கிழக்கு சிங்கள அமைப்பு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளது.

திருகோணமலை நகர மத்தியில் அமைக்கப்பட்டுள்ள மணிக்கூட்டுக் கோபுரத்தின் முன்றலில் நேற்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. (204)

# கடந்த நாடாளுமன்ற தேர்தலில் விட்ட தவறை சம்மாந்துறை மக்கள் இனியும் விடக்கூடாது!

## மு.கா. பிரதிநிதி தெரிவிப்பு

அம்பாறை,மார்ச்.4

சம்மாந்துறை மக்கள் கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது, அரசின் அதிகாரத்தை தன்வசம் வைத்திருப்பவர்கள் என்று தம்மைத்தாமே கூறியவர்களை ஏற்றுக்கொண்டமை ஏமாற்றத்தைத் தருவதாக அமைந்தது. இது நல்லதொரு படிப்பினையாகும்.

இந்த வரலாற்றுத் தவறை மீண்டும் ஒரு முறை செய்யக் கூடாது.

- இவ்வாறு சம்மாந்துறைப் பிரதேச சபைத் தேர்தல் தொடர்பான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் போது வேட்பாளர் ஏ.எச்.எம். புவாத் தெரிவித்துள்ளார்.

இவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடந்த நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் வென்றால் அமைச்சர், தோற்றால் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற கோஷத்துடன் நமது சிறுபான்மையினருக்குச் சொந்தமான நாடாளுமன்ற ஆசனத்தைத் தானும் பெறாது மற்றவர்களையும் பெறவிடாது பேரினவாதிகளுக்குக் கூட்டிக்கொடுத்துவிட்டு கையைப் பிசைந்து கொண்டிருந்தனர் எமது அரசியல் வாதிகள். இது நமது மிக அண்மைக்கால வரலாறு.

இந்த நிலைமையால், சம்மாந்துறை மக்கள் புத்திக் கூர்மை குறைந்த அரசியல் அப்பாவிகளாக நமது அயல் கிராமத்தவர்களால் எள்ளி நகையாடப்பட்டமை நமது இளைஞர்களுக்கு வெட்க உணர்ச்சியை தரவில்லை என்றால் அது நமது அழிவுக்கு மேலும் வழி வகுக்கவே செய்யும்.

மக்களைத் தொடர்ந்தும் தம் வழிக்குக் கொண்டு வரலாம் என்ற அபார நம்பிக்கையோடு அத்தகைய அரசியல்வாதிகள் மீண்டும் பிரதேச சபைத் தேர்தலில் களம் இறங்கியுள்ளார்கள். இவ்வாறு தனது தாய் மண்ணை மாற்றானுக்கு விலை கூறி விற்க கங்கணம் கட்டிக் கொண்டு களம் இறங்கியவர்களுக்கு நாம் தகுந்த பதிலடி கொடுக்காமல் இருக்க முடியாது.

புதிய அரசியல் யதார்த்தத்தை மக்களிடம் கொண்டு வந்தவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம். நடக்க முடியாது என்று சொன்னவற்றை நடத்திக் காட்டி எதிரிகளின் ஏமாற்று வித்தைகளை ஓரம் கட்டியுள்ளார்.

இத்தகைய சாணக்கியமும், நேர்மையும் தூய்மையும் கொண்ட ஓர் அரசியல் தலைவரின் கரங்களைப் பலப்படுத்த வேண்டியது நமது கடமையாகும் என்றார்.(204)

# புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

திருகோணமலை,மார்ச்.4

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு வாகனங்கள் செல்ல முடியாதவாறு குண்டும் குழியுமாகக் காணப்பட்ட திருகோணமலை, வவுனியா ஏ - 12 வீதியின் புனரமைப்பு பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இந்த வீதியைப் புனரமைப்பதற்கான நடவடிக்கையை அவசரமாக வீதி அபிவிருத்தித் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

இந்த வீதியில் மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதியில் கிரவல் போடப்பட்டும் மக்கள் நடமாட்டமுள்ள பகுதியில் தார் போடப்பட்டும் வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கெற் வீரர்களுக்கு அபகீர்த்தி ஏற்படுத்திய குற்றச்சாட்டு தொடர்பாக விசாரணை நடத்துக

## அரசிடம் ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 4

இலங்கை அணி வீரர்கள் பணத்திற்காகத்தான் பாகிஸ்தான் அணியுடன் நடைபெற்ற போட்டியில் தோல்வியைத் தழுவினர் என்று தேசிய தொலைக்காட்சி ஒன்று குற்றம் சுமத்தியுள்ளமையை ஐ.தே.கட்சி வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக அரசு உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். குறித்த விடயம் தொடர்பில் இலங்கைக் கிரிக்கெற் அணி வீரர்களிடம் அரசு கவலை தெரிவிக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது குறித்துக் கட்சியின் பொதுச் செயலாளர் ... அத்தநாயக்க விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு-

எமது அணி வீரர்கள் நேர்மையாகவும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்டதன் காரணமாகத்தான் இலங்கை அணி இன்று முதல்தர அணிகளுள் ஒன்றாகத் திகழ்கின்றது.

இலங்கைக் கிரிக்கெற் அணி வீரர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர், பணத்துக்காகப் போட்டியைத் திசை திருப்பினர் போன்ற எதுவித குற்றச்சாட்டுக்களையும் உலகத்தில் எவரும் இதுவரை முன்வைக்கவில்லை.

எமது வீரர்கள் உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ விளையாடும்போது கண்ணியமாக நடந்து கொள்வார்கள். இதுவரை அவர்களுக்கு எதிராக எதுவித ஒழுங்குப் பிரச்சினைளும் கூட எழுந்ததில்லை.

வீரர்கள் மீது தேசியத் தொலைக்காட்சி ஒன்று இவ்வாறானதொரு குற்றச்சாட்டை முன்வைத்துள்ளமை அணி வீரர்கள் இவ்வளவு காலமும் கட்டிக்காத்த நற்பெயருக்குக் களங்கம் விளைவித்துள்ளது. அத்துடன், வீரர்களுக்கு உளவியல் ரீதியிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

அரச தொலைக்காட்சியொன்றே வீரர்கள் மீது இவ்வாறானதொரு குற்றச்சாட்டை முன்வைத்து கிரிக்கெற் வீரர்களுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளது என்பது சுட்டிக்காட்டத்தக்கதொன்றாகும். அரசு உடனடியாக இந்த விடயத்தில் தலையிட்டு விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என நாம் வலியுறுத்துகின்றோம்.- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## பாதிக்கப்பட்டோருக்கு உதவி...



மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட முறக்கெட்டாஞ்சேனை கிராம மக்களுக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை எகெட் கரிட்டாஸ் நிறுவனத்தினால் சமையல் பாத்திரங்கள் வழங்கப்பட்டன. நிறுவனத்தின் பணிப்பாளர் அருட்தந்தை சிறிதரன் சில்வஸ்ட்டர் இந்தச் சமையல் பாத்திரங்களை மக்களுக்கு வழங்குகின்றார். (204)

# போலிக் கடவுச் சீட்டில் பிரான்ஸ் செல்ல முற்பட்ட பாகிஸ்தான் பிரஜை கைது

கொழும்பு, மார்ச் 4

போலிக் கடவுச்சீட்டுடன் இலங்கையிலிருந்து பிரான்ஸுக்குச் செல்ல முயன்ற பாகிஸ்தான் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் காலை இலங்கையிலிருந்து பிரான்ஸுக்குப் புறப்படுவதற்காக வந்திருந்த பயணி ஒருவர் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியதைத் தொடர்ந்து விமான நிலைய அதிகாரிகளால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார்.

அதன்போது அவர் வைத்திருந்த கடவுச்சீட்டு போலியானது என்று தெரியவந்துள்ளது.

அதையடுத்து அவர் சந்தேகத்தின் பேரில் குடிவரவு மற்றும் குடியகழ்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது அவர் ஒரு பாகிஸ்தானியர் என்பது தெரிய வந்துள்ளது. (சி)

# கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட இலங்கையர் குவைத்தில் சாவு

கொழும்பு, மார்ச் 4

குவைத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கி இலங்கையர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். இதுதொடர்பில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

குவைத்தில் ஜலீப் சூயுக் என்னும் இடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை அரபு ஆசிய குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோசமான சண்டையில் இலங்கையைச் சேர்ந்த 30 வயதான ஒருவர் பலியாகியுள்ளார். அத்துடன், மூவர் காயமடைந்துள்ளனர் என இலங்கை வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. இந்தச் சம்பவம் குறித்துத் தகவல் கிடைத்ததும் பொலிஸாரும் மருத்துவ உத விக் குழுவினரும் சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்தபோது, பாதிக்கப்பட்டவர்கள் ஏற்கனவே வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுவிட்டனர்.

இவர்களை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோது ஒருவர் உயிரிழந்துவிட்டார். இவரது கழுத்தில் இரண்டு முறை கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டிருந் தது எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் 8 பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இதில் கத்தியால் குத்தியதாகக் கூறப்படும் நபரும் அடங்குகின்றார் எனத் தெரியவருகிறது. (சி)

# பொலிஸாருக்கு லஞ்சம் வழங்கிய இருவருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

கொழும்பு, மார்ச் 4

களுத்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு 75 ஆயிரம் ரூபா இலஞ்சம் கொடுக்க முயற்சித்தனர் என்ற சந்தேகத்தின்பேரில் வழக்குத் தொடரப்பட்டிருந்த இருவர் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து இரண்டு ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் தலா 5,000 ரூபா அபராதமும் விதித்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிவான் சுனில் பெரேரா தீர்ப்பளித்துள்ளார்.

ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதான நபரொருவருக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடராமல் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடருமாறு கோரியே இவர்கள் பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு லஞ்சம் கொடுக்க முயன்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (204-5)

# நீண்டகாலமாகக் கசிப்பு விற்பனை; சந்தேகநபர் பொலிஸாரால் கைது

கொழும்பு,மார்ச் 4

நீண்டகாலமாகக் கசிப்பு உற்பத்தி, விற்பனையில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவரை ஹப்புத்தளை பொலிஸார் கைது செய்து பண்டாரவளை நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

ஹப்புத்தளை செல்பன் தோட்டத்தைச் சேர்ந்த சந்தேகநபர் தொடர்பில் தோட்ட மக்கள் வழங்கிய தகவலொன்றின் பேரில் ஹப்புத்தளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரியங்கர குமார உள்ளிட்ட குழுவினர் அண்மையில் தோட்டத்தைச்சுற்றிவளைத்து இவரைக் கைது செய்துள்ளனர். கைது செய் யப்பட்ட சந்தேக நபரை பண்டார வளை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

இது தொடர்பான வழக்கு விசாரணையின்போது குற்றத்தை ஒப்புக்கொண்ட சந்தேக நபருக்கு ரூபா 20 ஆயிரத்தைத் தண்டப்பணமாகச் செலுத்துமாறு பண்டாரவளை நீதிமன்ற நீதிவான் அநுர விக்கிரமசிங்க உத்தரவிட்டார். தண்டப் பணம் செலுத்திய பின்னர் சந்தேகநபர் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டார். (சி)

# வாக்காளர் அட்டைகள் விநியோகம்

கொழும்பு, மார்ச் 4

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் நேற்று முதல் விநியோகிக்கப்படுகின்றன எனத் தபால்மா அதிபர் எம்.கே.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

குறித்த வாக்காளர் அட்டைகள் கடந்த செவ்வாய்க்கிழமை அனைத்துத் தெரிவத்தாட்சி அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அட்டைகளை விநியோகிக்கும் நடவடிக்கைகள் எதிர்வரும் 10 ஆம் திகதி நிறைவடையும். (சி)

# செல்போன் தொடர்புகள் மூலம் இளைஞனிடம் ரூபா ஒன்றரை லட்சம் சுருட்டிய பெண் கைது

கொழும்பு, மார்ச் 4

செல்போன் உரையாடல்கள் மூலம் இளைஞர் ஒருவரை மயக்கி அவரிடமிருந்து சுமார் ஒன்றரை லட்சம் ரூபாவைச் சுருட்டினார் என்ற சந்தேகத்தின் பேரில் திருமணமான இளம் பெண்ணொருவரை அநுராதபுரம் தலைமையகப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இது குறித்துக் கூறப்பட்டவை வருமாறு:-

பலாங்கொடை போம்புவ பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞரும் மேற்படி பெண்ணும் செல்போன் தொடர்புகள் மூலம் அறிமுகமாகியுள்ளனர். பின்னர் இருவருக்குமான உரையாடல் தொடர்புகள் நெருக்கமடைந்துள்ளன.

இளைஞர் தனது வலையில் வீழ்ந்து விட்டதை பெண் உணர்ந்துகொண்டார். இந்த நிலையில் கடந்த செவ்வாய்க் கிழமை இளைஞருடன் தொடர்பு கொண்டு தனக்கு வீட்டில் பெரும் பிரச்சினையொன்று ஏற்பட்டுள்ளது என்றும் அவசரமாக இரண்டு லட்சம் ரூபா பணம் தேவைப்படுகின்றது என்றும் கூறியுள்ளார்.

எப்படியாவது பணத்தைத் திரட்டிக் கொண்டு அநுராதபுரத்திற்கு வருமாறு மன்றாடியுள்ளார்.

மேற்படி பெண்ணின் மீது மயக்கம் கொண்ட இளைஞர் தனது தாயின் நகைகளைத் திருடிக்கொண்டுவந்து அவற்றை அநுராதபுரத்திலுள்ள வங்கியொன்றில் அடகு வைத்து சுமார் ஒன்றரை லட்சம் ரூபாவைப் பெற்றுத் தனது காதலியிடம் கொடுத்துள்ளார்.

பணத்தைப் பெற்றுக்கொண்ட பெண் அதை வீட்டில் கொடுத்துவிட்டு சில நிமிடங்களில் திரும்பி வருவதாகக் கூறிவிட்டுச் சென்றுள்ளார். இளைஞரும் அவருக்காகக் காத்திருந்தார். காதலி வரவில்லை. செல்போனும் இயங்கவில்லை.

சந்தேகம்கொண்ட இளைஞர் அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். பொலிஸாரின் அறிவுறுத்தலுக்கமைய ஒருவாறு பெண்ணை செல்போனில் பிடித்துள்ளார்.

அவர் கேட்ட பணத்தில் மிகுதி 50,000 ரூபா தயார் என்றும் வந்து அதனைப் பெற்றுக் கொள்ளுமாறும் இளைஞர் தெரிவித்துள்ளார். பணத்தை வாங்குவதற்காக ஆவலுடன் வந்த பெண் பொலிஸாரின் வலையில் சிக்கினார்.

இராணுவச் சிப்பாயின் மனைவியான இவர் கொடுத்திருந்த பெயரும் முகவரியும் போலியானவை என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளன. நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட இவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (204-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நவாலி சென்.பீற்றர்ஸ் றோ.க.த.க. பாடசாலையில் இடம்பெற்ற கால்கோள் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமக் கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.மாதவகுமார் உரையாற்றுகிறார். அருகில் பாடசாலை அதிபர் ஏ.ஜெகதீஸ்வரன் மற்றும் விருந்தினர்கள் அமர்ந்திருக்கின்றனர். (த–555)

# வறியவருக்கு மட்டுமன்றி வசதியானோருக்கும் பாடசாலைகளின் மாணவர் விடுதிகள் உதவின

யாழ்ப்பாணம்,மார்ச் 4

1940களில் கன்னங்கரவால் நாடு தழுவிய ரீதியில் இலவசக் கல்வியை முன்னெடுக்க விடுதிகளுடன் கூடிய மகாவித்தியாலயங்கள் அமைக்கப்பட்டன. வறிய மாணவர்கள் மட்டுமன்றி வசதி படைத்த மாணவர்களுக்கும் கூட அவர்களது வீடுகளில் கல்விச் சாதகமற்ற சூழல் இருப்பின் அது கற்றலுக்கு இடையூறாக இருக்கும். இந்தப் பின்னணியில்தான் விடுதியுடன் பாடசாலைகள் ஏற்படுத்தப்பட்டன என வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை கூறினார்.

யாழ்.இந்துக் கல்லூரி விடுதி நூற்றாண்டு விழா கல்லூரி அதிபர் வீ.கணேசராசா தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது. பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை விடுதி தொடர்பான தனது அனுபவங்கள் குறித்துப் பேசும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

1950களில் நான் இங்கு வந்தேன். என்னுடன் வேலணையில் இருந்து ஏழு அல்லது எட்டுப் பேர்கள் கல்லூரி விடுதிக்கு வருவார்கள். 1,700 மாணவர்கள் படித்தனர். இதில் 300 மாணவர்கள் விடுதியில் இருந்தோம். மூன்று விடுதிகள் இருந்தன.

அப்போது அதிபராக இருந்தவர் கே.வி.சுப்பிரமணியம். படிக்கும் ஒவ்வொரு பிள்ளைகளினதும் குணாதிசயங்களைப் புரிந்தவர். நாங்கள் சிறு குற்றங்களுக்கும் அடிவாங்கியதுண்டு.

கனகரத்தினம், கார்த்திகேசு இவர்கள் இருவரும் எமது வகுப்பாசிரியர்கள். அவர்கள் தேர்தலில் போட்டியிட்டனர். கூட்டத்திற்கு என்.எம்.பெரேரா வருவதாக இருந்தது. நாங்கள் மூவர் எமது படுக்கைகளில் தலையணையை வைத்துப் போர்த்துவிட்டு மதில் பாய்ந்துவிட்டோம். அடுத்த நாள் காலை கோப்பி குடித்துவிட்டு வரும்படி கே.வி.எஸ். கூறியிருந்தார். கோப்பியைக் குடித்து விட்டுச் சென்றபோது அடிவிழுந்தது. உயர் வகுப்பில் படித்த போதும் அடிவாங்கியவர்கள் நாங்கள். எனது குணாதிசயங்களை அறியாதவர்கள் என்னை மாணவத் தலைவராகவும் வைத்து விட்டனர்.

உணவைப் பொறுத்தவரை மிகவும் சிறப்பாக இருக்கும். மாணவரின் நிலைமைகளைத் தெரிந்து கொண்டு அரிசிபோடும் அளவுக்கு அறிந்து வைத்திருப்பார்கள். இது போன்று விடுதிக் கால அனுபவங்கள் எல்லோருக்குமே உன்னதமானதாகவும் சந்தோஷம் தருவதாகவும் அமையும். இந்துக் கல்லூரியின் வாழ்க்கையில் சுப்பிரமணியத்தின் வாழ்க்கையும் இல்லாமல் இல்லை - என்றார். (த-7)

# மாணவர் விடுதி அனுபவம் மறக்க முடியாதது

## ஆறு திருமுருகன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 4

இந்துப் பண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பாதுகாக்கும் இந்துக் கல்லூரியின் விடுதிச் சிறப்பையும், உணவின் தரத்தையும் பேசாதவர்கள் கிடையாது. அந்த அளவிற்கு விடுதிச் சாப்பாடு விசேடமான ஓர் அம்சமாக இருந்து வந்துள்ளது. நான் படித்த காலத்தில், இந்தியாவைச் சேர்ந்தவர்களும் தென் பகுதியைச் சேர்ந்தவரும் இங்கு சமையலாளர்களாக இருந்துள்ளனர். என்று தெரிவித்தார் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன்.

யாழ். இந்துவின் விடுதி நூற்றாண்டு விழாவில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

முஸ்லிம் மாணவர்கள் கூட விடுதியில் இருந்துள்ளனர். எனினும் என்றுமே சைவ உணவுப் பண்பாடு காக்கப்பட்டது. அதன் சுவை சொல்லும் தரமன்று ஒறேற்றர் சுப்பிரமணியம் விடுதிப் பொறுப்பாளராக இருந்து மிகவும் சிறந்த முறையில் செயற்பட்டுள்ளார். ஆசிரியர்களுக்கு சிறப்புப் பட்டங்கள் வழங்குவது போன்ற பலதரப்பட்ட சம்பவங்களால் மாணவர்களிடத்தில் மகிழ்ச்சியே தென்படும். ஒரு தடவை மாணவர்களிடத்தில் கண்டிப்பாக இருந்தமைக்காக விடுதி ஆசிரியரின் காரை எடுத்து மறைவில் வைத்துவிட்டார்கள்.

இன்று யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா வித்தியாலயம், ஸ்கந்தவரோதயக் கல்லூரிகள் தோன்றக் காரணமாக இருந்ததே இந்துக் கல்லூரிதான் - இந்த விடுதியின் வரலாறுகளை முழுமையாகத் தெரிந்து கொள்ள முடியாத சூழலிலும் பேராசிரியர் குகபாலன் முழு முயற்சி செய்து ஒரு சிறந்த ஆவணமாக இந்த நூலை வெளியிட்டுள்ளார்.

கொழும்பு றோயல் கல்லூரியில் உள்ளது போன்று ஆவணக் காப்பகம் இங்கும் அமைக்கப்பட வேண்டும். ஒரு முறை செல்வநாயகம் அவர்களது மகன் பாடசாலைக்குச் செல்லவில்லை. அது குறித்து செல்வநாயகம் ஒரு நாள் கல்லூரிக்கு எழுதிய கடிதம் இன்றும் அவர்களது ஆவணக் காப்பகத்தில் உள்ளது. அப்படி சிறந்த பொக் கிஷங்களை யாழ். இந்துக் கல்லூரியும் பாதுகாக்கக் கூடியதாக ஆவணக்காப்பகம் ஒன்றை அமைக்க முன்வர வேண்டும் என்றார். (த-7)

# இருதரப்பும் பாதிப்புறாமல் பிணக்குகளை சமரசம் செய்பவர்களே மத்தியஸ்தர்கள்

அச்சுவேலி,மார்ச் 4

மத்தியஸ்தர் சபைகளின் உறுப்பினர்கள், சபைக்குச் சமர்ப்பிக்கப்படும் பிணக்குகளை சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பாதிப்புக்கள் ஏற்படாத வகையில் சமரசம் செய்து இணக்கப்பாட்டுக்குக் கொண்டுவரும் நடுவர்களாகச் செயற்படவேண்டும்.

அவர்கள் நடுநிலையாளர்களாகவும் சமூகத்தவருக்கு வழிகாட்டிகளாகவும் திகழவேண்டும்.

- இவ்வாறு கூறினார் இணைப்பாளர் ப.சனாதன சர்மா.

யாழ்.மாவட்ட மத்தியஸ்தர் சபைகளின் உறுப்பினர்களுக்கு யாழ்.மிலேனியம் ஹோட்டலில் நடைபெறும் மூன்றுநாள் கருத்தரங்கில் ஆரம்ப நிகழ்வுகளில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

மக்கள் மத்தியில் ஏற்படும் பிணக்குகளைச் சமரசம் செய்து நல்லெண்ணத்தோடு கூடிய இணக்கப்பாட்டுக்குக் கொண்டு வருவதற்கு ஏதுவாகவே பிரதேசச் செயலர் பிரிவு ரீதியாக மத்தியஸ்தர் சபைகள் உருவாக்கப்பட்டுச் செயற்பட்டு வருகின்றன.

மத்தியஸ்தர் சபைகளின் செயற்பாடுகள் மூலம் மக்கள் மத்தியில் விட்டுக்கொடுப்பு, இணக்கப்பாடு, புரிந்துணர்வு என்பனவற்றின் அடிப்படையில் பிணக்குகளுக்குத் தீர்வு காணப்படுவதற்கு பிரதேச வாரியாக வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதனை உரியமுறையில் பயன்படுத்தி மக்கள் தம்மிடையே ஏற்படும் பிரச்சினைகளை - பிணக்குகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

மத்தியஸ்தர் சபைகளின் செயற்பாடுகள் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் முன்னெடுக்கப் படவேண்டும். மத்தியஸ்தர் சபைகளின் உறுப்பினர்கள் தீர்ப்புக் கூறுபவர்களாக இல்லாமல் நடுநிலையாளர்களாக, பிணக்குகளை சமரசம் செய்பவர்களாகச் செயற்படவேண்டும். வழிகாட்டுபவர்களாகவும் முன்னோடிகளாகவும் பக்கச் சார்பு இல்லாதவர்களாகவும் சமூகத்தால் மதிக்கப்படுபவர்களாகவும் திகழ வேண்டும்.

மத்தியஸ்தர் சபைகள் தீர்ப்புக் கூறும் சபைகள் அல்ல. மத்தியஸ்தர் சபைகளின் உறுப்பினர்கள் நீதவான்கள் அல்லர் என்பதைக் கருத்திற்கொண்டு செயற்படவேண்டும்.

பிணக்குகளுக்கு இரண்டு தரப்பினரின் சம்மதத்தோடு கூடிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தி பகைமை உணர்வு இன்றி அவர்கள் தொடர்ந்து நல்லுறவுடன் வாழ்வதற்கு வகை செய்ய வேண்டும் - என்றார். (த-11)

# குடும்ப நல சேவையாளருக்கு கௌரவம்

யாழ்ப்பாணம்,மார்ச் 4

அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட தாய் சேய் நல சேவையின் சிறந்த சேவையாளர் போட்டியில் யாழ். மாவட்டத்தில் குடும்ப நல சேவையாளர்களாகக் கடமையாற்றும் இருவர் மூன்றாம் இடங்களைப் பெற்றமைக்காக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்ற நிறுவனத் தலைவர்களின் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் சான்றிதழ் வழங்கி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டுள்ளார்கள்.

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் சிரேஷ்ட குடும்பநல உத்தியோகத்தராகச் சேவையாற்றும் திருமதி புஸ்பராணி வெற்றிவேலு, ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் குடும்பநல உத்தியோகத்தராகக் கடமை புரியும் செல்வி பத்மினி அம்பலவாணர் ஆகியோரே இவ்வாறு கௌரவிக்கப்பட்டவர்கள் ஆவர். (த-300)

# கிருஷ்ணர் பிறப்பு

வடமராட்சி,மார்ச்.4

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் 176ஆவது பிறந்த தினம் எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சுவாமி சித்ரூபானந்தா தலைமையில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 6 மணிக்கு மங்கள ஆராத்தியும் பகல் 12 மணிக்கு விசேட பூஜையும் இடம்பெறும்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி, யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, கரவெட்டி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, பருத்தித்துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி ஆகிய கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (த-236)

# ஓய்வூதியர்கள் நம்பிக்கை நிதிய கூட்டம்

வடமராட்சி,மார்ச் 4

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு பகிரங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தின் முதலாவது ஆண்டுப் பொதுக் கூட்டம் பிரிவுத் தலைவரும் இளைப்பாறிய நீதிபதியுமான பா.சுப்பிரமணியம் தலைமையில் எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் கலந்து கொள்வார். நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு பகிரங்க சேவை ஓய்வூதியர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு அதன் செயலாளர் எஸ்.சிவலிங்கம் கேட்டுள்ளார். (த-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
கடனுதவி, நிதி உதவி பெற மேற்கொண்ட முயற்சிகளில் பலன் கிட்டும். கணவன் மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். நோய் உபாதைகள் நீங்கி தெம்பு, உற்சாகம் பெறுவீர்கள். அயலார் அனுசரணையாக இருப்பர். சக ஊழியர் ஒருவரை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைப்பீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம்.

**இடபம்:**
இறை வழிபாடுகளில் நாட்டம் செல்லும். பயணங்களால் அலைச்சல் இருக்கலாம். குடும்பத்தினருடன் அல்லது நண்பர்களுடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். சில விடயங்களில் சிரமங்களைத் தவிர்க்க மற்றவர்களின் யோசனை கேட்டு செயற்படுவீர்கள். நீங்கள் செல்லும் இடத்தில் உங்களுக்குப் பிடிக்காத ஒருவரைச் சந்திக்கலாம்.

**மிதுனம்:**
சந்திராஷ்டமம் தொடங்குவதால் சில காரியங்களை சிரமத்தின் மத்தியில் செய்து முடிப்பீர்கள். குடும்பத்தில் ஒருவரை மாற்றி ஒருவர் குறை கூறிகொண்டிருக்க வேண்டாம். உதவி கேட்டு தொந்தரவுகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் அளவாகப் பழகுங்கள்.

**கடகம்:**
செவி குளிரும் செய்திகளைக் கேட்கலாம். எந்த விடயத்தையும் தாமதமின்றி, சுறுசுறுப்பாக ச் செய்து முடிப்பீர்கள். உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். உங்களிடம் வாக்குக் கொடுத்த உறவினர்கள் அதைக் காப்பாற்றிப் பெருமை சேர்ப்பர். நண்பர்கள் வட்டம் விரிவடையும்

**சிங்கம்:**
வழக்கத்திற்கு மாறாகக் கடும் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். கைவிட்டுப் போனதாக நினைத்த காரியம் மீண்டும் கைகூடலாம். உங்களுக்காக நண்பர்கள் அல்லது உறவினர்கள் சிலர் செலவு செய்யலாம். பிள்ளைகள் கல்வி விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். நீண்டநாள் நண்பர்களைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்கலாம்.

**கன்னி:**
பெண்கள், குழந்தைகள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். மற்றொருவரை நம்பி ஒப்படைத்த வேலை முடியாமல், அவற்றை நீங்களே செய்யலாம். தொழில் இழப்புகளைத் தவிர்க்க கவனமாகச் செயற்பட வேண்டும். சிறிய வேலை ஒன்றுக்கு பெரிய அளவில் அலட்டிக் கொள்வீர்கள்.

**துலாம்:**
பிடிவாதமாக செயற்பட்டு நினைத்த காரியங்களை முடிப்பீர்கள். புதிய பொறுப்புகள் உங்களைத் தேடி வரும். கடன் மிகுதிகளைக் கண்டிப்புடன் கேட்டு வாங்குவீர்கள். அரசியல் தொடர்புடையவர்கள் புதியவர்களின் நட்பைப் பெறலாம். தண்டச் செலவுகளைச் சந்திக்கலாம். நீண்ட தூரப் பயணங்கள் செல்லும் சூழ்நிலை உருவாகலாம்.

**விருச்சிகம்:**
தொழில் ரீதியான நெருக்கடிகள் குறைந்து நிம்மதி பெறும் நாள். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். விருந்து, விசேட நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். நண்பர்கள் வழியில் மனதிற்கு இனிய உதவிகள் கிடைக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றிப் பெருமை அடைவீர்கள். அடமானமாக வைத்த பொன், பொருள்களை மீட்கலாம்.

**தனுசு:**
சில பிரச்சினைகளை நினைத்து அதிக அளவில் பயம் கொள்வீர்கள். உங்களுக்கு முன்பாகப் பாராட்டிப் பேசிய சிலர் மறைமுகமாக விமர்சிக்கலாம். வெளிவட்டாரத் தொடர்புகளை விரிவுபடுத்திக் கொள்வீர்கள். வரவேண்டிய பணவரவுகளை எதிர்பார்த்து சில செலவுகளைச் செய்வீர்கள். பொருள்களை மறதியாக வைத்து விட்டுத் தேடலாம்.

**மகரம்:**
பல நாள்களாக மனதில் நினைத்திருந்த எண்ணங்கள் நிறைவேறும். உங்களுக்குப் பிடித்தமான பொருள் ஒன்றை உறவினர்கள் கொடுக்கலாம். தந்தை வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். குடும்பத்தினர் சிலரின் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளால் எரிச்சல் அடையலாம்.

**கும்பம்:**
சோதனைகளை சாதனைகளாக மாற்றிக் காட்டும் நாள். சோர்வு, சோம்பலால் சில வேலைகளை நாளை செய்யலாம் எனத் தள்ளி வைப்பீர்கள். இழப்புகளைத் தவிர்க்க எதிலும் பொறுமை, நிதானம் அவசியம். நீண்ட நாள்களாக தொலைபேசியில் மட்டும் பேசிக் கொண்டிருந்த ஒருவரை நேரில் சந்திக்கலாம்.

**மீனம்:**
கடனாக்க் கொடுத்த பணம் வரலாம். காலையில் செய்ய நினைத்த வேலை ஒன்றை மாலையில் செய்வீர்கள். நண்பர்கள் விடயங்களில் தலையிட்டு அவர்களுக்கு உதவுவீர்கள். உங்களுக்காகவோ, குடும்பத்தினருக்காகவோ சில பொருள்களை வாங்குவீர்கள். மற்றவர்களுக்காக சில விடயங்களில் விட்டுக் கொடுத்துச் செல்வீர்கள்.

# ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இடம்பிடிக்குமா இந்தியா...?

இலங்கைப் பிரச்சினை சார்பில் இந்தியா இரண்டு பரிமாணங்களைக் கொண்டுள்ளது. அதில் ஓர் அம்சம் அறிவியல் சார்ந்த அணுகுமுறை. மற்றையது ஓர் அரசியல் தீர்வினைக் கோருவது. அண்மையில் இடம்பெற்ற மீனவர் பிரச்சினையை அது அப்படியே அணுகியது.

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறிப் பிரவேசித்தமைக்காகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட இந்திய மீனவர்களைக் கடந்த வாரம் விடுவித்ததன் மூலம் அப்பிரச்சினையின் தீவிரம் தணிக்கப்பட்டுள்ளது. இப்போதுதான் இலங்கையின் மீன்பிடிக்கான ஈர்ப்பு நன்கு புரிந்துகொள்ளக் கூடியதாகவுள்ளது.

இலங்கையில் யுத்தம் நடைபெற்ற காலப் பகுதியில் கடந்த பல தசாப்தங்களாக வடபிராந்தியக் கடற்பரப்பில் இராணுவத்தினரால் ஆழ்கடல் மீன்பிடி தடை செய்யப்பட்டிருந்தது. இது இந்திய மீனவர்களுக்கு அப்பகுதியில் மீன்பிடியை மேற்கொள்வதில் ஆர்வத்தை வளர்த்து அங்கு அவர்களின் நடமாட்டத்தை அதிகரிக்க வைத்தது.

எது எவ்வாறாயினும் இரு தரப்புகளும் இணைந்த கரையோர ரோந்து நடவடிக்கைகளைத் தொழில்நுட்ப ரீதியாகச் செயற்படுத்துவதன் மூலமாக இவ்விதமான அத்துமீறல்களையும் அவற்றால் விளையும் பிரச்சினைகளையும் தீர்த்துக்கொள்ள முடியும்.

இதனைக் கருத்திற்கொண்டே 2006 ஆம் ஆண்டில் இந்தோ-சிலோன் இணைப்புக்குழு அமைக்கப்பட்டது.

ஆயினும் அது பின்னர் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அத்தவறு இப்பொழுதுதான் சீர்செய்யப்படுகின்றது. இலங்கை குறித்த இந்தியாவின் அரசியல் தீர்வு என்பது பெரும்பாலும் புரிந்துகொள்வதற்குக் கடினமான ஒன்றாகவேயுள்ளது. யுத்தம் முடிவடைந்த பின்னர் அரசியல் பிரச்சினைகள் மீண்டும் வாதத்திற்குரிய விடயமாக முன்னணியில் உள்ளன. அத்துடன் இந்தியாவினது பிரச்சினைகளும் பல்வேறு கோணங்களில் நோக்கப்படுகின்றன.

### இந்திய அரசியல் எதிர்வாதங்கள்

இந்தியா ஆறு கோடிக்கும் அதிகமான தமிழ் மக்களின் தாயகமாக விளங்குகின்றது. அன்றியும் தென் இந்தியாவில் வாழும் தமிழர்களிடையே இலங்கையில் நிலவும் அரசியல் பிரச்சினைகள் குறித்தும் அம்மக்களின் நலன் குறித்தும் பொதுவான ஆர்வமும் அக்கறையும் இருப்பது சகஜமே.

இந்தியாவும் குறிப்பாகத் தமிழர் நலனில் அக்கறை கொண்டிருந்தது. எனினும் அக்கருத்து புலிகள் அரசியல் நடவடிக்கைகளில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியதும் குறைவடைந்தது.

ராஜீவ்காந்தியின் அரசியல் படுகொலையைத் தொடர்ந்து ஏற்கனவே இருந்த அனுதாபமும் மழுங்கடிக்கப்பட்டது. எவ்வாறாயினும் அரசியல் எதிர்வாதங்கள் மாற்றமடைந்துவிட்டன.

தற்பொழுது பிரச்சினையைத் தீர்த்து வைத்தால் புலிகள் அதன் பயனாளிகளாக இருக்கக் கூடும் என்ற பயமேதுமின்றி ஓர் அரசியல் தீர்வுக்காகப் பரிந்து பேசுவது சாதகமானதே. தமிழீழ விடுதலைப்புலிகளை அழிப்பதில் இலங்கைக்குப் புலனாய்வுத் தகவல்களைப் பரிமாறுதல், விசேடமாக வடக்கில் அவர்களது கடல்மார்க்க நடமாட்டங்களுக்குத் தடையினை அமுல்படுத்தல், சர்வதேச ரீதியான ஆதரவினைப் பெற்றுக் கொள்ளுதல் போன்ற வழிமுறைகள் மூலம் உதவிகளை மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் இந்தியா வழங்கியது.

2009 ஆம் ஆண்டில் யுத்த இறுதிக்கட்டத்தில் இந்தியா, தேர்தல் சுற்று நடவடிக்கைகளின் மத்தியிலும் கடுமையான உள்நாட்டு அரசியல் அழுத்தங்களுக்கு மத்தியிலும் சண்டையினை ஒரு நிறுத்தத்துக்குக் கொண்டுவரவேண்டிய நிலையில் இருந்தது. ஆனால் அது எவ்வித உணர்வலைகளையும் இந்த விடயத்தில் காட்டிக் கொள்ளவில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்டதும் இலங்கையில் இந்தியாவின் நிறுவனங்கள் செயற்படுவதற்கு ஏற்ற வசதிகள் ஏற்படுத்திச் கொடுக்கப்படும் என்று இலங்கை அரசு தனது உயர் மட்டக்குழுக்கள் ஊடாக இந்தியாவுக்கு உறுதிமொழிகள் வழங்கியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதுமட்டுமன்றி பல்வேறுவகையான வளங்களை ஏற்படுத்திக்கொடுத்தல் போன்ற உறுதி மொழிகளையும் இந்திய அரசுக்கு வழங்கியுள்ளதாகவும் நம்பப்படுகிறது.

இந்த விடயம் மத்தியில் உள்ள இந்திய அரசால் தென்பகுதியிலுள்ள அதன் மாநில அணிகளுக்குத் தெரியவந்ததைத் தொடர்ந்து, அது ஒரு மோசமான அரசியல் நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது.

இந்த நிலையானது தற்பொழுது தமிழ் நாட்டின் முதலமைச்சராகப் பதவி வகுக்கும் கருணாநிதி மற்றும் எதிர்க்கட்சித் தலைவி ஜெயலலிதா போன்றோர்க்கு எதிராகத் தமிழ் நாட்டில் உள்ள சிறிய கட்சிகளுக்கும் அதன் அடிவருடிகளுக்கும் இச் சிரேஷ்ட அரசியல்வாதிகளை மேடைகளில் வைத்து சாடக்கூடிய பிரசாரத் தீனியாக விளங்குகின்றது.

அடுத்த மாதம் வரவிருக்கும் தமிழகத் தேர்தலில் முதலமைச்சருக்குத் தோல்வி என்பதுடன் அவரது நீண்டகால அரசியல் தொழிலுக்கு முடிவுகட்டுவதாகவும் இது அமையலாம்.

### உலக அரங்கில் இந்தியாவின் பங்கு

ஏனைய நாடுகளில் தலையீடு செய்வதில்லை என்பது இந்தியாவுக்குள்ள அடுத்த பிரச்சினை.

வெளிநாடுகள் இலங்கையில் அரசியல் ரீதியாகத் தலையிடுவதை இந்தியா விரும்பவில்லை. பிராந்தியத்தில் சக்திமிகுந்த நாடாக வலுவடைந்து வரும் இந்தியாவின் பங்கு உலக அரங்கில் விரிவடைந்து செல்கிறது.

இந்நிலையில் இலங்கை போன்ற நாடுகளில் வெளியார் யாரும் தனது பின்புறத்தால் நுழைவதை அது விரும்பவில்லை.

**ஜெகன்**

இருந்தும் தீர்வுகாணப்படாத அரசியல் பிரச்சினைகள், மனிதநேயம் மற்றும் மனித உரிமைகள் குறித்த விடயங்கள் பற்றி ஏனைய நாடுகளுக்கு அங்குள்ள புலம்பெயர் வாழ் இலங்கைத் தமிழ் சமூகத்தினர் நியாயபூர்வமான கோரிக்கைகளை விடுத்து வருகின்றனர். இதனால் அந்த நாடுகளால் இலங்கை மீதான அழுத்தங்கள் தொடர்ந்து வருகின்றன. அத்துடன் தத்தமது அக்கறைகள் குறித்து இந்தியாவின் கவனத்துக்கும் அவை கொண்டுவந்துள்ளன.

இப்பொழுது ஐ.நாவின் பாதுகாப்புச்சபையில் ஒரு நிரந்தர ஆசனத்தைப் பெறும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ள இந்தியா, இலங்கை மீது ஒரு தீர்வுக்கான அழுத்தத்தைக் கொடுக்கத் தயங்குமாயின், அது ஐ.நாவில் நிரந்தர ஆசனத்தைப் பெறுவதற்கு என்ன உரிமை அல்லது நற்சான்று உள்ளது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலையும் செய்யும் காதல்



கோப்பாயில் மீட்கப்பட்ட சிசுவின் சடலம்.

காதல் என்பது இருமனிதர்கள் சந்தித்துக் கொள்ளும் தருணத்தில் மூளைக்குள் மின்னி மறையும் உணர்வுதான். அது ஆண், பெண்ணுக்கு இடைப்பட்டதாகவோ அல்லது இரு ஓரினப் பாலினருக்கு இடைப்பட்டதாகவோ அமைந்துவிடுகின்றது. மின்னி மறையும் நொடியில் ஏற்படுத்தப்படும் ஈர்ப்பின் ஆழத்திலேயும், நலன்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு காதல் வயப்படும் நபர்களிடம் இருக்கும் சாதகத் தன்மைகளிலேயுமே அந்தக் காதலின் புனிதத் தன்மை இருக்கிறது. அதன் நிலைத்திருப்பும், உண்மைத் தன்மையும் அடங்கியிருக்கின்றன.

ஆனால் அண்மைக்காலமாக யாழ்ப்பாணப் பத்திரிகைகள் வெளியிடும் காதல் தொடர்பான செய்திகள் அதிர்ச்சி தருவனவாயுள்ளன. தொடர்ச்சியாகப் பிறந்த சூடு ஆறும் முன்னேயே அழகான சிசுக்கள் தெருக்களில் எறியப்படுகின்றன. பற்றைக்காடுகளுக்குள் உரப்பைகளில் சுற்றிப் போடப்படுகின்றன. வீட்டுக் கோடிகளில் புதைக்கப்படுகின்றன. இந்த நிலைமை நல்ல பண்பாடுமிக்க சமூகமொன்றுக்கு விழுந்த சாபக்கேடாகவும் நோக்கப்பட வேண்டும்.

கடந்த ஆண்டு வெளியான யாழ்ப்பாணப் பெண்கள் பற்றிய தரவு அறிக்கையொன்றில் 250 இற்கும் மேற்பட்ட பெண்கள் தந்தையின் பெயர் தெரியாத குழந்தைகளை வைத்திருப்பவர்களாக இருக்கின்றனர் எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கைகளில் வெளியிடும் தகவல்களைவிட சட்டவிரோதமான முறையில் கருக்கலைப்பில் ஈடுபடும் திருமணமாகாத இளம் பெண்களின் தொகை பல மடங்காக அதிகரித்து வருகிறது. பெரும்பாலும் உயர்தரப் பாடசாலைகளில் கல்வி கற்கும் சிறுவர் நிலையைக் கடக்காத பெண் பிள்ளைகளே இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது கவலையளிக்கின்றது.

இக் கவலையளிக்கும் செய்திகளில் இருந்துதான் யாழ்ப்பாணத்தில் காதல் பிறக்கும் தருணங்கள் பற்றிச் சிந்திக்க வைத்தது. இன்றைய இளைஞர், யுவதிகளின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகிவிட்ட கைத்தொலைபேசி, Face Book போன்றன எல்லா எல்லைகளையும் கடந்து உறவைப்பேண வைக்கிறது. அந்த உறவு கர்ப்பப்பைவரை ஊடுருவி அதனை நிரப்பிவிட்டுத் தப்பித்துக்கொள்ளும் வரை நிலைத்திருக்கும் வகையில் பின்னப்படுகிறது, பிணைப்பில் ஈடுபடுகிறது என்பதே இங்குள்ள சோகம். இதற்கு அதிவேகமாகப் பரவிக் கொள்ளும் காதல் காய்ச்சல்தான் பிரதான காரணம்.

யாழ்ப்பாணத்து நகர்ப்புறங்களிலும் உள்ளகப் பகுதிகளிலும் இருக்கும் வர்த்தக நிலையங்கள், நிறுவனங்கள் போன்றன அதிகளவில் பெண் உழைப்பாளர்களை நம்பியே வாழ்கின்றன. அந்த நிலையங்களில் பொருள் விற்கப்படுகிறதோ இல்லையோ பெண் உடலங்கள் இலகுவாக விற்கப்பட்டுவிடுகின்றன.

வணிகமயப்பட்டுப் போன கல்வி, சாதாரணதரம் படிக்கும் பிள்ளையைக்கூட நகரம் நோக்கி இழுக்கிறது. இந்த ஈர்ப்புக்கள் முகம் முன்தெரியா, பின்தெரியா நபர்களோடு தொடர்பினை உருவாக்கி வருகிறது. இதில் பல நன்மைகள் இருப்பினும் கட்டுரையின் பிரதான கருப்பொருளுக்கு அமைவான காரணிகளும் இருக்கின்றன. தனியார் கல்வி நிலையங்களில் வேலியே பயிரை மேயும் சந்தர்ப்பங்கள் நிறையவே உள்ளன. மாணவியையே காதலித்துத் திருமணம் செய்து பிரச்சினைப்படும் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அதுபோல் பேருந்து நடத்துநர்கள் மீதும் இந்தக் குற்றங்கள் சுமத்தப்படுவது தவிர்க்க முடியாததாகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் காதலின் கலைக்களஞ்சியமாக மாறிவிட்டது போலவே காட்சியளிக்கிறது. முதலாம் வருட மாணவர் தொடக்கம் முதுநிலை விரிவுரையாளர்கள்வரை புரியும் லீலைகள் யாழ்ப்பாணத்து மக்கள் அறியாத செய்தியல்ல. பல்லினப் பண்பாடுகளுடன் வரும் ஆண்களும் பெண்களும் பெரும் கற்பனைகளோடும் கனவுகளோடும் உள்நுழைகின்றனர். இடைக்காலத்தில் தொற்றிக்கொள்ளும் காதல் மயக்கம் கொஞ்ச நாள்களுக்குள்ளேயே தோலுக்கானதாகவும், தசைக்கானதாகவும் மாறிவிடுகிறது. வெறும்பொழுது போக்குக்காகவும் சுகங்களுக்காகவும் காதல் வயப்படுகின்றனர். 4 வருடமும் ஒரே காதல் சோடியாய் எங்கும் திரிபவர்கள் பல்கலைக் கழகத்தைவிட்டு வெளியேறியவுடன் வேறொருவரை நலன்களின் அடிப்படையில் திருமணம் செய்துகொள்கின்றனர்.

## ஜெரா

ஆனாலும் பல்கலைக்கழகச் சூழலிலும், தமிழ்ச் சமூகத்திலும் கற்பு என்பது பிரதான ஒழுக்கப்பண்பாகவே பேசப்படுகிறது. பேருந்துகளிலும், பேருந்து நிலையங்களிலும் காதல்படும் பாட்டை வார்த்தைகளால் சொல்லிவிட முடியாது. பேருந்தின் பின் இருக்கைகளின் முன் இருக்கும் இருக்கைகளில் பின்பக்கம் பெரும்பாலும் கைத்தொலைபேசி இலக்கங்கள் பொறிக்கப்படாமல் இருப்பதேயில்லை.

பேருந்துக்குள் நிற்கும் சில இளைஞர்-யுவதிகள் பயணச் சிட்டைகளையும் நாணயத் தாள்களையும் காதலைப் பரிமாறிக்கொள்ளும் ஊடகமாகவே கையாளுகின்றனர். இந்தத் தொடர்புகளால் உருவாகும் பிணைப்பின் உச்சத்தில் இளைஞர்களும் யுவதிகளும் நடந்து கொள்ளும் முறைகள் பஸ்ஸினுள் பயணிப்பவர்களைக் கூடக் கவனிக்காத அளவுக்குச் சென்றுவிடுகிறது. அந்த லீலைகள் அவர்களின் பெற்றோருக்குச் சமமானவர்களையோ, கற்பித்த ஆசிரியரையோ, மதிப்பதில்லை. பேருந்து நிலையம் பற்றிச் சொல்லவே தேவையில்லை.

யாழ்ப்பாண பெருநகரத்தில் அடிக்கடி ஒழுங்குபடுத்தப்படும் களியாட்டங்களும் நிகழ்ச்சிகளும் அதிகமாக மேய்ந்தது பெண் உடலங்களைத்தான். நிகழ்வு முடிந்து மறுநாள் காலை அந்த இடத்தைப் போய்ப் பார்த்தால் அங்குள்ள மறைவான இடங்களில் அதிகமாகச் சிதறிக்கிடப்பவை ஆணுறைகளும் உள்ளாடைகளும்தான்.

இந்தக் கட்டுக் கடங்காச் சுய கட்டுப்பாட்டு மீறல்கள்தான் நம் இடங்களைச் சிசுக்களை எறியும் குப்பை மேடுகளாக மாறவைக்கின்றன.

காதல் என்பது ஓர் உணர்வு. அது தவறாகப் பேசுவதற்கு அருவருப்பான ஒன்றில்லை. தமது சமூகப் பெறுமதியையும் அதன் உயர்தரமான பண்பாட்டையும் கவனத்திலெடுத்து காதலைக் காதலிக்க வேண்டும். இல்லையேல் அநாதைச் சிசுக்களின் எண்ணிக்கையும் தந்தை தெரியாத பிள்ளைகளுடன் இளம் தாய்மார்களது எண்ணிக்கையும் யாழ்ப்பாணத்தில் அதிகரிப்பது தவிர்க்க முடியாததாகிவிடும்.

# அந்தப் பறவைகள்



முற்காலத்தில் அமெரிக்காவிலுள்ள ஒரு நூல் நிலையத்திற்கு இளைஞர் ஒருவர் போய் ஒரு புத்தகத்தை எடுத்து ''லிலியன்தால்-என்ற ஜெர்மனியர் ஒரு பெரிய காற்றாடியிலே ஏறி ஆகாயத்தில் பறந்தார்'' என்ற கதையைப் படித்தார்.

படித்துவிட்டு வந்து அதைப்பற்றியே யோசனை செய்து தன்னுடைய சகோதரனிடமும் கூறினார். அதன் பின் இரண்டு பேரும் சேர்ந்து புதுசா ஒரு முயற்சியிலே ஈடுபட்டார்கள். அதனுடைய விளைவுதான் ஆகாயவிமானம்.

ரைட் சகோதரர்கள் இரண்டு பேரும் அதிகம் படித்தவர்கள் இல்லை. ஆனால் சின்ன வயதிலிருந்தே அவர்கள் இறந்து போன மிருகங்களின் எலும்புகளைப் பொறுக்கிக் கொண்டுபோய் உரத் தொழிற்சாலையிலே கொடுத்துவிட்டு காசு வாங்குவார்கள். அதற்குப் பின்னர் ஒரு அச்சகத்தை ஏற்படுத்தி தினசரி பத்திரிகை வெளியிடுவதற்கு முயற்சி செய்தார்கள்.அது ஒன்றும் சரியாக வரவில்லை. பிறகு சைக்கிள் திருத்தும் கடை ஒன்று நடத்தினார்கள். இப்படியெல்லாம் அவர்கள் செய்தாலும் அவர்களது ஆசைகளெல்லாம் ஆகாயத்தில் பறக்க வேண்டும் என்பதுதான்.

அடிக்கடி ஒரு மலையடிவாரத்துக்குப் போய் இரண்டு பேரும் அண்ணாந்து படுத்துக் கொண்டு ஆகாயத்தில் வட்டமிடுகின்ற பருந்துகளையும் பிற பறவைகளையும் பார்த்துக் கொண்டே இருப்பார்கள்.

முதலில் ஒரு கிளைடர் தயாரித்துச் சோதனை செய்து பார்த்தார்கள்.கொஞ்சக் காலம் கழித்து அதில் ஒரு இயந்திரத்தினைத் தயார் செய்து பொருத்தினார்கள்.1903 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 17 ஆம் திகதி,அந்தநாள் உலக வரலாற்றில் ஒரு முக்கியமான நாள்.அன்றைக்குத்தான் ரைட்சகோதரர்கள் கனவு நனவாகியது.உலகத்தின் முதல் விமானம் பறந்த நாள்.

அவர்களது விமானம் அன்று 12 விநாடிகள் பறந்தது.100 அடி தூரந்தான் போனது.இருந்தாலும் அது ஒரு பெரிய சாதனைதான். இந்தச் சாதனையைப் பார்த்து மற்றவர்களெல்லாம் ஆச்சரியப்பட்டார்கள்.ஆனால் அந்தச் சகோதரர்கள் கொஞ்சம் கூடப் பெருமிதப்படாமல் தாம் எதிர்பார்த்தது நடந்தது. இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? என்ற மாதரி நடந்து கொண்டார்கள்.

அவர்கள் விளம்பரம் படிப்பது இல்லை. பத்திரிகை நிருபர்களிடம் பேசுவது இல்லை.இவற்றிலெல்லாம் அவர்களுக்கு விருப்பமில்லை.


பறவைகளில் கிளிகள் மட்டும்தான் பேசுகின்றன. ஆனால் அவையும் அதிக உயரம் பறப்பதில்லை'' என்று ஒரு தடவை கூறினார்கள். அவர்கள் இருவரும் மிகவும் அடக்கமாக இருப்பார்கள். தற்பெருமையே அவர்களிடம் இல்லை. அவர்களில் மூத்தவர் ஆர்வில் ரைட். இளையவர் வில்பர் ரைட்.இளையவர் ஒரு தடவை தன்னுடைய காற்சட்டைப் பையில் இருந்து கைக்குட்டையை எடுத்திருக்கிறார். அப்போது ஒரு சிவப்பு ரிபன் கீழே விழுந்தது. பக்கத்திலே நின்ற அவரது தங்கை ''அது என்ன?'' என்று கேட்டாள். அதற்கு இவர் ''ஓ இதுவா....சொல்ல மறந்துவிட்டேன்... பிரெஞ்சுக்காரர் இன்றைக்கு எனக்குக் கொடுத்த கௌரவப்பட்டம் இது!''என்று மிகவும் சாதாரணமாகச் சொன்னார்.

ஆகாயத்திலே பறக்கிற விமானத்தைக் கண்டு பிடித்தவர்கள் எவ்வளவு அடக்கமாக இருக்கிறார்கள் என்பதை நினைக்கும் போது ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

ஒருத்தர் மிகவும் பெருமையாக ''ஹெலிகொப்டரை நான்தான் கண்டு பிடித்தேன்!'' என்றார்.''அது எப்படி?'' என்று கேட்டதற்கு ''ஆகாயத்திலே பறந்து வந்த விமானத்தை முதலில் நான்தான் கண்டுபிடித்து மற்றவர்களிடம் கூறினேன். அதன் பின்னர்தான் எல்லோரும் ஓடிவந்து அண்ணாந்து பார்த்தார்கள்''என்றார் பெருமையாக!

கோ.சுவாமிநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 2011 இன் இணையத் தேடல்

கணினிப் பயன்பாட்டுப் பிரிவில் இப்போது இணையத் தேடல்களுக்குத்தான் கடும்போட்டி நிலவுகிறது. இந்தப் போட்டியில் பயனாளர்களின் மனதில் என்ன எதிர்பார்ப்பு உள்ளது என ஓர் ஆய்வு நடத்தப்பட்டது. எந்த இணையத் தேடல் 2011 ஆம் ஆண்டில் மக்களிடையே பிரபலமாகும் என்று கணக்கெடுக்கப்பட்டது. அதில் கிடைத்த விவரங்களைப் பார்க்கும்முன் சென்ற சில மாதங்களில் ஒவ்வொரு இணையத் தேடல்களும் தங்களை எந்தப் பயன்பாட்டில் நிலைநிறுத்தப் புதிய வசதிகளைத் தந்து மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன என்று பார்க்கலாம்.

கூகுள் குரோம்: இணையத் தேடலின் வேகம், கூடுதல் புதிய வசதிகள், புதிய பதிப்புகளை விரைவில் கொண்டு வருதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தி வருகிறது.

இன்டர்நெட் எக்ஸ்புளோரர்: இப்போதைய இணைய வரையறைகளை உள்ளடக்கி இயங்குவதற்குத் தன்னை முழுமையாகத் தயார் செய்துள்ளது. வேகத்தைக் கூட்டுவதிலும் ஆர்வம் காட்டுவதுடன் பயனாளர்கள் இலகுவாகக் கையாளும் விடயத்திலும் அக்கறை காட்டுகிறது.

மொஸில்லா பயர்பொக்ஸ்: பயனாளர்கள் கையாளும்முறை முழுமையாக மாற்றப்படுகிறது. புதிய பதிப்புக்களை உடனுக்குடன் கொண்டு வருகிறது.

ஒப்பிரா: புதிய ஜாவா ஸ்கிரிப்ட் எஞ்சின் அடிப்படையில் வேகமாக இயங்கும் வண்ணம் மாற்றப்பட்டுள்ளது.

சபாரி: புதிய வசதிகளும் மென்பொருள்களும் தரப்பட்டுள்ளன.

இந்த மாற்றங்கள் அடிப்படையில் மக்கள் மனதில் வெற்றி பெற இருப்பதாக உள்ள இணையத்தேடல் எது என்று பார்ப்போமா?

1.கூகுள் குரோம் 47.27% (1,032 வாக்குகள்)
2.இன்டர்நெட் எக்ஸ்புளோரர் 7.97% (174 வாக்குகள்)
3.மொஸில்லா பயர்பொக்ஸ் 36.92% (806)
4.ஒப்பிரா 6.6% (144)
5.சபாரி 0.92% (20)
6.மற்றவை 0.32% (7)

இந்த அடிப்படையை மக்கள் அதிக எண்ணிக்கையில் பயன்படுத்தும் இணையத் தேடல்களின் கணிப்பாக எடுத்துக் கொள்ளக் கூடாது. இணையத் தேடல்களின் மாற்றம் குறித்த செய்திகள், சோதனைத் தொகுப்புகளின் புதிய வசதிகள் எப்படி மக்கள் மனதில் இடம்பெற்றுள்ளன என்ற கணக்கினைக் காட்டுவதாகவே எண்ண வேண்டும். இதுவும் வாரா வாரம் மாறலாம்.

# ஒரு நோயாளிக்கு இரண்டு இதயங்கள்; அமெரிக்காவில் மருத்துவச் சாதனை

மருத்துவ வரலாற்றில் மிக அரிதான சத்திர சிகிச்சை ஒன்றை அமெரிக்க வைத்தியர்கள் அண்மையில் வெற்றிகரமாக முடித்தனர்.

நோயாளி ஒருவருக்கு மேலதிகமாக இன்னொரு இதயத்தினைப் பொருத்தியே அவர்கள் இச்சாதனையைப் புரிந்தனர். சென்டியாகோ தோர்டன் என்ற மருத்துவமனையிலேயே இச் சத்திர சிகிச்சை இடம்பெற்றது.

டைசன் ஸ்மித் என்ற 36 வயதான நபருக்குச் சாதாரண இதயத்தின் அருகில் வலது பக்கத்தில் இன்னோர் இதயம் சத்திர சிகிச்சை மூலம் பொருத்தப்பட்டுள்ளது. இதயத்தின் இடது இதயவறை, புது இதயத்துடன் சத்திரசிகிச்சையின் மூலம் இணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பிராணவாயு ஏற்றம் பெற்ற குருதி பழைய இதயத்திலிருந்து புதிய இதயத்துக்குப் பாய்ச்சப்படும்.

இதன் பிறகு புதிய இடது இதயக் கீழறையிலிருந்து குருதியானது பெருநாடியின் மூலம் உடலின் பாகங்களுக்கும் பாய்ச்சப்படும். ஓர் இதயம் செய்யும் வேலையை இரு இதயங்களும் பகிர்ந்து கொள்ளும்.

குறித்த நபரின் இதயம் பலவீனம் அடைந்திருந்த காரணத்தினாலேயே அவருக்கு மற்றுமோர் இதயம் பொருத்தப்பட்டது. இச்சத்திர சிகிச்சையானது "ஹெட்ரோடொ பிக் ஹார்ட் டிரான்ஸ் பிளான்டேசன்" என அழைக்கப்படுகின்றது. மிகவும் அரியதொரு சத்திரசிகிச்சையாக இது கருதப்படுகின்றது.

இது நோயாளிகளின் வாழ்நாளை 10 வருடங்களால் அதிகரிக்கும் எனச் சத்திர சிகிச்சையை மேற்கொண்ட மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

# பூமியின் பெறுமதி ரூ. 210 ஆயிரம் லட்சம் கோடி!



அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியப் பல்கலைக் கழகத்தின் வானியல் விஞ்ஞானியான கிரக்´லவ்க்ளின் பூமியின் மதிப்பைக் கணக்கிட்டுள்ளார்.

தற்போது அமெரிக்காவின் நாசா விண்வெளி மையம் கெப்லர் என்ற சக்தி வாய்ந்த விண்வெளி ஓடத்தை விண்ணில் நிலை நிறுத்தியுள்ளது.

அது விண்வெளியில் உள்ள அனைத்துக் கிரகங்களையும் படம் பிடித்து அனுப்புகிறது. இதன் மூலம் கிரகங்களின் தன்மைகள், அவை குறித்த அதிசயத் தகவல்கள் கிடைத்து வருகின்றன. அதன்படி பூமி மீது பறந்து கெப்லர் விண்கலம் சுமார் 2 ஆண்டுகளாக அனுப்பிய தகவல்களின் அடிப்படையில் பூமியின் மதிப்பைக் கணக்கிட்டு ரூ. 210 ஆயிரம் லட்சம் கோடி என அவர் தெரிவித்துள்ளார். பூமியின் வயது, அதன் அளவு மற்றும் தட்பவெப்ப நிலை உள்ளிட்ட ஏனைய தன்மைகளைக் கொண்டு இதனை அவர் கணக்கிட்டுள்ளார். பூமி மிகவும் அதிசயமானது என்றும் வர்ணித்துள்ளார்.

செவ்வாய்க் கிரகத்தின் மதிப்பு வெறும் ரூ.7 லட்சம் மட்டுமே என்றும் வெள்ளிக் கிரகத்தின் மதிப்பு அதை விடக் குறைவு என்றும் அவர் கணக்கிட்டுள்ளார். வான்வெளியில் 1235இற்கும் மேற்பட்ட கிரகங்கள் உள்ளன. அவை வாழத் தகுதியற்றவைகளாக உள்ளன. இதனால் அவை மதிப்பற்றவைகளாக உள்ளன என்றும் கூறியுள்ளார்.

# புதிய பாதையில் இணையம்




இந்த உலகம் புதியதொரு இணையம் ஒன்றைக் காணப் போகிறது. தற்போது பின்பற்றப்படும் இணைய முகவரி அமைப்பு முற்றிலுமாகப் பயன்படுத்தப்பட்ட நிலையில் புதிய வழி வகை விரைவில் தொடங்கப்பட உள்ளது.

இணையத்தில் இணையும் ஒவ்வொருகணினிக்கும், அதனை தனி அடையாளம் காட்டும் முகவரி ஒன்று தரப்படுகிறது. இதற்கென உலக அளவில் ஒரு நடைமுறை பின்பற்றப்பட்டு வருகிறது.

Internet Protocol version 4 (IPv4) என அழைக்கப்படும் இந்த முறையானது, 1981இல் தொடங்கப்பட்டது. தற்போது இதன் திறன் முழுமையும் பயன்படுத்தப்பட்டுவிட்டதால், இனி மேல் முகவரிகளை வழங்க இயலாத நிலையை நாம் நெருங்கி விட்டோம.

சென்ற பெப்ரவரி முதலாம் திகதிதான் முகவரிகளைத் தரும் தொகுதிகளில் இறுதித் தொகுதி வழங்கப்பட்டது. ஆசிய பசிபிக் நாடுகளுக்கென ஒதுக்கப்பட்ட முகவரிகளின் எண்ணிக்கை 2012 இல் அல்லது அதற்கும் சற்று முன்னதாக மொத்தமாகக் இல்லாமற்போகும் என்று எதிர்பார்க் கப்படுகிறது.

எனவே அடுத்து புதியதாக 128 பட் அளவில் செயற்படும் IPv 6 திட்டம் அமுல்படுத்தப் பட இருக்கிறது. இந்த மாற்றம் நம் ஊரில் தொலைபேசிகளுக்கான எண்கள் ஏழு இலக்கத்திலிருந்து எட்டு இலக்கத்திற்கு மாறுவது போல் ஆகும்.

ஆனால் இணையத்தில் முகவரிக்கான திட்ட மாற்றம் வன்பொருள் மற்றும் மென்பொருள் சம்பந்தப்பட்டதாகும். IPv 6 திட்டத்தின் அடிப்படையில் தரப்படும் முகவரிக்கு, கணினிக் கட்டமைப்பில் எட்டு ஸ்லொட்டுகள் தேவைப்படும்.

ஆனால் நாம் தற்போது பயன்படுத்தும் சாதனங்களும், சார்ந்த மென்பொருள் தொகுப்புக்களும் நான்கு ஸ்லொட்டுகள் என்ற அளவிலேயே இதற்கான வசதியைக் கொண்டுள்ளன. ஜப்பான் போன்ற நாடுகள் இந்த மாற்றத்திற்குத் தேவைப்படும் கட்டமைப்பு மாற்றத்தில் 75% அளவு மேற்கொண்டு இப்போதே தயாராக உள்ளன.

ஆனால் இந்தியா, இலங்கையில் இது குறித்த விழிப்புணர்வு இன்னும் முழுமையாக ஏற்படவில்லை. இந்தியாவில் உள்ள வலையமைப்புக்களில் 6% சாதனங்கள்தான் புதிய IPv 6 திட்டத்திற்குத் தயாராக உள்ளன. இலங்கையில் அதை விடவும் குறைவு. வலையமைப்பில் பயன்படுத்தப்படும் ரௌட்டர்கள், ஸ்விட்ச் கள் மற்றும் சேவர்கள் இந்த IPv6 திட்டத்தினை ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் தரமுயர்த்தப்பட வேண்டும்.

இல்லை எனில், இணையத் தளங்களுக்கிடையேயான இணைப்பு பிரிந்து செயற்படும் வாய்ப்பு ஏற்படும். இதனால் இந்திய இணையப் பயனாளர்கள், இணையத்தில் ஒரு பகுதியினைப் பயன்படுத்த இயலாத நிலை ஏற்படும்.

வீடுகளில் கணினிகள் மூலம் இணைய இணைப்புப் பெறுபவர்கள் இந்த மாற்றம் குறித்துக் கவலைப்பட வேண்டியதில்லை. இதில் பயன்படுத்தப்படும் ஒப்பரேற்றிங் சிஸ்ரம் IPv6 திட்டத்துடன் இணைவாகச் செயற்படும் வகையிலேயே இருக்கின்றன.

வீடுகளில் பயன்படுத்தப்படும் மொடம் தரமுயர்த்தப்படும் நிலையில் இருந்தால், இணைப்புத் தரும் இணையச் சேவை வழங்கும் நிறுவனங்கள் அவர்களுக்கு எச்சரிக்கைச் செய்தியினை வழங்கும். இந்த மாற்றத்தினால் அதிக சிக்கல்களை எதிர்நோக்குபவர்கள், நிறுவனங்கள் மற்றும் மத்திய நிலையில் இயங்கும் சில குழுமங்களாகும்.

இந்தத் தகவல்களை ஆசிய பசிபிக் வலையமைப்புத் தகவல் பரிமாற்று நிலையத்தின் முன்னாள் செயல் இயக்குநர் குசும்பா தெரிவித்தார். அரசைப் பொறுத்த வரை, அரசின் இணையத் தளங்கள், வலையமைப்புச் சாதனங்கள் அனைத்தும் இதற்கெனத் தரமுயர்த்தப்பட வேண்டும்.

இல்லை எனில் மக்களுக்குச் சேவை கிடைக்காது என இணையச் சேவை வழங்கும் நிறுவனக் கூட்டமைப்பின் தலைவர் கருத்து தெரிவித்துள்ளார். இதற்கென இணையச் சேவை நிறுவனங்கள், வலை யமைப்பு நிறுவனங்கள் மற்றும் அரசுக்குக் கூடுதல் மூலதன நிதி தேவைப்படும்.

விரைவில் அரசும் நிறுவனங்களும் விழித்துக் கொண்டு செயற்பட்டால், சிக்கலை, அது வரும் முன் எதிர்கொள்ள நாம் தயாராகிவிடலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமஞ்சனக் கிணற்றால் பெருமை பெறும் இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் ஆலயம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

இலங்கையில் காத்தல் கடவுளான விஷ்ணுவும் அழித்தல் கடவுளான சிவனும் ஒரே இடத்தில் இருந்து அருள்பாலிக்கும் அற்புதத் திருத்தலங்களில் ஒன்றாக இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் ஆலயம் விளங்குகின்றது.

ஆலயத்தின் பெருமை கூறும் சான்றாக அங்குள்ள திருமஞ்சனக் கிணறு காணப்படுகிறது. இந்தக் கிணறு எப்போது அமைக்கப்பட்டது என்று எவருக்கும் தெரியவில்லை. இந்தக் கிணறானது முருகைக்கற்களினாலும் செங்கற்களினாலும் அமைக்கப்பட்டுள்ளது. கிணற்றின் சுவர் விளிம்புகளில் சிறிய துளசிச் செடிகள் அணிசெய்து நிற்பது தனித்துவமான காட்சியாக உள்ளது. மேலும் இந்தச் செடிகளில் இருந்து உதிர்ந்த துளசி இலைகளும் கிணற்று நீருடன் கலந்துள்ளதால் கிணற்று நீர் தனித்துவமான சுவை கொண்டு காணப்படுகிறது.



சுவாமிக்குச் செய்யப்படும் நைவேத்தியங்கள் கூட இந்தப் புனித தீர்த்த நீரிலேயே தயாரிக்கப்படுன்கிறன. இந்த நீரில் தயாரிக்கப்படும் ஒவ்வொரு நைவேத்தியத் தின்பண்டங்களும் கூட அற்புதமானது. அடியார்கள் இந்தக் கிணற்றில் நீர் எடுத்தே வெண்சாதம், சர்க்கரைச் சாதம், கற்கண்டுச் சாதம், அவல், கடலை, மோதகம், வடை, முறுக்குப் போன்ற பண்டங்களைத் தயாரித்து சுவாமிக்குப் படைப்பார்கள்.

இதேபோலவே வடமராட்சி கிழக்கில் உள்ள கடற்றொழிலாளர்கள் புதிதான தமது தொழில் இயந்திரங்களைக் கடலில் இறக்கும் முன்னர் ஆலயத்திற்கு வருகை தந்து சிறிய போத்தல்களில் தீர்த்த நீரை எடுத்துச் சென்று அதனைத் தமது தொழில் உபகரணங்களுக்குத் தெளித்து காவல் செய்வதுடன் நீண்ட காலத்துக்குக் காவல் தெய்வமாகக் கருதி போத்தலுடன் நீரை படகுகளில் வைத்து தொழில் செய்து வருவதாகவும் கூறப்பட்டது.

இந்த ஆலயத்துக்குத் தெற்குப் புறமாக உள்ள பெரிய குளமும் மக்களின் துயர் தீர்க்கும் புனித தீர்த்தக் குளமாகக் கருதப்படுகிறது. இந்தக் குளம் சுமார் 50 ஏக்கர் விஸ்தீரணம் கொண்டதாகக் காணப்படுகிறது. இந்தக் குளத்தில் நீராடினால் தங்கள் துயர் எல்லாம் நீங்கிவிடும் என அடியார்கள் அசையாத நம்பிக்கை கொண்டுள்ளார்கள்.

இற்றைக்கு 30 வருடங்களுக்கு முன்னர் மிகக் கடுமையான வரட்சி ஏற்பட்டுக் குளம் வற்றி நீர் அரைவாசியாகக் குறைந்துவிட்டது. அந்த வேளையில் அடியவர்கள் குளத்தை ஆழமாக்கும் பணியில் ஈடுபட்டனர். அந்தவேளையில் குளத்தினுள் தொழில்நுட்பத்துடன் கூடிய மரத்தினால் வடிவமைக்கப்பட்ட கிணறு ஒன்று காணப்பட்டது. தற்போது உள்ள சிலிப்பர் கட்டையை விட மொத்தமான மரங்களில் வடிவமைக்கப்பட்டு நாற்சதுரமான கிணறு காணப்பட்டது. கிணற்றினைத் துப்புரவு செய்து மக்கள் தமது தேவைகளுக்குப் பயன்படுத்திவந்தனர்.

குளத்தினைச் சுற்றிச் சோலையாகக் காணப்படும் மருதமரங்கள் நீரின் தன்மையைப் பேணிப் பாதுகாத்து வருகின்றன. வரட்சி ஏற்பட்ட காலத்தில் குளத்தில் உள்ள கிணற்றினை இந்தப் பகுதி மக்களும் அடியார்களும் பயன்படுத்துவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கிணறு யாரால் உருவாக்கப்பட்டது என்று எந்தவொரு அடியாருக்கும் தெரியாது. ஆலயப் பெருந் திருவிழாவின் கேணித் தீர்த்த நாளன்று சுவாமியும் அடியார்களும் குளத்தைச் சுற்றியுள்ள மருதமரங்களின் நிழலில் இளைப்பாறித் தீர்த்தமாடுவர். சர்ப்ப வாகனத்தில் தீர்த்தமாட எழுந்தருளியிருக்கும் சுவாமிக்குச் சர்ப்பம் நிழல் கொடுப்பதுபோல மருதமரங்கள் கூட ஐந்து தலை நாகம் ஒன்று புற்றிலிருந்து வெளிப்பட்டுப் படம் விரித்தபடி காணப்படுவது போல நிழல் கொடுக்கின்றன. இன்றும் கூட இந்த மரங்கள் யாராலும் வெட்டப்படாத நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆலயப் பெருந்திருவிழாவின் சமுத்திரத் தீர்த்தமானாலும் சரி, கேணித் தீர்த்தமானாலும் சரி தீர்த்த நாள்களில் சமுத்திரமும் கேணியும் கொந்தளித்து வெண் நுரை பொங்கிக் காட்சியளிப்பது கூட எம்பெருமானை வருக வருக என ஒரு குழந்தையை நோக்கித் தாய் கைகளை நீட்டுவது போல காட்சியளிக்கும். இந்தத் தினங்களில் மகேஸ்வரபூசை நடைபெறுவது வழமை.

அன்னதானம் குளத்திலிருந்து எடுக்கப்படும் தாமரை இலையிலேயே அடியார்களுக்கு வழங்கப்படும். அதனால் சாதமும் தனிச் சுவையாக இருக்கும். இந்தக் குளத்திலிருந்து பெறப்படும் தாமரைப் பூக்கள் கொண்டு தீர்த்த வேளையில் அர்ச்சனை செய்யப்படும் குளத்தில் நிறைந்து காணப்படும் காய்ந்த பூவின் வித்துக்களைச் சிறுவர்கள் எடுத்து வந்து சாப்பிடுவார்கள்.

நவக்கிரகக் குறைபாடு உள்ளவர்கள் இந்த ஆலயத்துக்கு வந்து பொங்கிப் படைத்தால் நவக்கிரக தோசம் நீங்குமெனச் சோதிடர்களால் தெரிவிக்கப்படுவது வழக்கம். அப்படி நவக்கிரக குறைபாடு உடையவர்களால் எம்பெருமான் சந்நிதியில் புதிய மண்பானையில் ஆலயத் தீர்த்த நீரினைப் பெற்றுப் பொங்கி அர்ச்சகரின் உதவியுடன் படைப்பார்கள். அவ்வாறு படைத்த வெண்சாதத்தினை அவர்களின் உறவினர் தவிர்ந்த ஏனைய அடியார்களுக்கு வழங்குவார்கள்.

இதேபோல சனீஸ்வர பகவானின் தோஷம் உடையவர்கள் புரட்டாதி மாதத்தில் வரும் சனிக்கிழமைகளில் விரதமிருந்து எள் தீபம் எரித்து எள் சாதம் படைப்பார்கள். எள் சாதத்தினை எடுத்துச் சென்று சனீஸ்வர பகவானின் வாகனமான காகத்துக்கு உணவளிப்பார்கள். ஆலயத்தின் தெற்கு வீதியில் மருதமரங்கள் சூழ நாகதம்பிரான் ஆலயம் உள்ளது. ஆலயத்தின் பின் புறத்தில் நீண்டகாலமாக ஒரே உருவ அமைப்புடன் கடும்பச்சை நிறத்திலான இலைகளைக் கொண்ட கொக்கட்டி மரம் காணப்படுகிறது.

நாகதோஷம் உள்ளவர்கள் இவ் ஆலயத்தில் உள்ள புற்றுக்குள் பால் ஊற்றுவதுடன் ஆலயம் முன்பாகப் பொங்கிப் படைத்ததன் மூலம் தோஷம்

(தொடரும்)

# மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் மட்டுவில் பகுதியில் 1935 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதே மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயம் ஆகும். இந்தப் பாடசாலைக்கு அண்மையில் கல்விச் சமூகத்தின் பங்களிப்புடன் கதவுகள் பொருத்தப்பட்டு முன் மதிலும் விஸ்தரிக்கப்பட்டது.

தற்போதைய அதிபரின் சிறந்த செயற்பாடுகளால் வித்தியாலய மாணவர்கள் கல்வித் தரத்திலும் இணைபாடவிதானத்திலும் சிறந்து விளங்கினர். 2003 ஆம் ஆண்டு தொடக்கம் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் இந்த வித்தியாலய மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை வருடா வருடம் பெற்று வித்தியாலயத்திற்குப் பெருமை சேர்த்து வருகின்றனர். அத்துடன் வலயத்தினால் நடத்தப்படும் தமிழ்மொழித் தினப் போட்டிகள், ஆங்கிலதினப் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள் உடற்கல்விப் போட்டிகள் போன்றவற்றில் வித்தியாலய மாணவர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

மாணவர்களின் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை அவதானித்த 'வேல்ட் விஷன்' நிறுவனத்தினர் பான்ட் வாத்தியக் கருவிகளை வழங்கியதுடன் அதனைப் பாதுகாக்க, அலுமாரியினையும் வழங்கியுள்ளனர்.


தொகுப்பு:ஐயந்தன்

பல்வேறு வகையான வளர்ச்சியினைக் கண்டுவரும் இவ்வித்தியாலயத்திற்கு அவசியமாகத் தேவைப்படும் பல பௌதீக வளங்களும் உள்ளன.

மாணவர்களுக்கான பிரார்த்தனை மண்டபம் இல்லாததால் தினமும் முற்றத்தில் பிரார்த்தனைக்காக ஒன்று கூடுகின்றனர். இதனால் பிரார்த்தனை மண்டபம் நிர்மாணிக்கப்படல் வேண்டும். மேலும் வித்தியாலயத்தின் பாதுகாப்புக் கருதி சுற்றிவர மதில் அமைக்கப்படல் வேண்டும். வகுப்பறைகளில் மாணவர்களின் கற்றல் உபகரணங்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கு ஒரு அலுமாரி கூடக் காணப்படவில்லை. ஒவ்வொரு வகுப்புக்கும் அலுமாரிகள் வைக்கப்படல் வேண்டும். அத்துடன் அதிபரின் அலுவலகம் புதிதாக நிர்மாணிக்கப்படல் வேண்டும்.

இவ்வித்தியாலயத்தில் பணியாற்றும் அதிபர், ஆசிரியர்கள் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெரும் அக்கறையுடன் செயற்படுவதைக் காணமுடிகிறது. இந் நிலையில் மாணவர்களின் கல்வி வள வளர்ச்சியுடன் பௌதீக வள வளர்ச்சியிலும் முன்னிலையடையக் கல்விச் சமூகத்தினர், பாடசாலைச் சமூகத்தினர், நலன் விரும்பிகள், பெற்றோர்கள் மனமுவந்து உதவிகளை வழங்கினால் கல்வி வளம் மென்மேலும் அதிகரித்துத் தென்மராட்சிப் பிரதேசத்தில் முன் னோடி ஆரம்பப் பாடசாலையாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VELS UNIVERSITY



VELS INSTITUTE OF SCIENCE, TECHNOLOGY AND ADVANCED STUDIES (VISTAS)
(Estd. U/s 3 of the UGC Act, 1956)
CHENNAI - INDIA

# ADMISSIONS 2011-12

**Ranked Amongst the Top Engineering Institutions in India**
Source: TSI-ICMR Survey 2010

Ranked 3rd Best B-School in Tamilnadu & 52nd All India
Source: 4Ps B&M - ICMR Survey 2010



## School of Maritime Science & Engineering

**Dept. of Nautical Science**
**B.Sc.** Nautical Science
**Diploma** in Nautical Studies
**HND** - Nautical Studies

**Dept. of Marine Engineering**
**B.E.** Marine Engineering
Pre-sea Training for Graduates **(GME)**
Pre-sea Training for Diploma Holders **(DME)**
**HND** - Marine Engg.

**Dept. of Engineering**
**B.E.**
Computer Science & Engg.
Electronics & Communication Engg.
Electrical & Electronics Engg.
Civil Engg.
Mechanical Engg.

**M.E.**
Computer Science & Engg.
Communication Systems

## School of Management

**B.B.A.**
**M.B.A.**
(Finance, HR, Marketing, Systems & Production)
Logistics & Supply Chain Mgmt. **(CII)**
Logistics & Shipping Mgmt. **(IIL)**
Travel & Tourism Mgmt. **(Kuoni Academy)**
**Executive MBA** (1 1/2 Years)

## School of Pharmaceutical Sciences

**B. Pharmacy**
**M. Pharmacy**
(Pharmaceutics, Pharmacology, Pharmacognosy, Pharmaceutical Chemistry, Pharmaceutical Analysis, Pharmaceutical Biotechnology, Pharmacy Practice)
**Pharm D-Doctor of Pharmacy** - 6 years
**Pharm. D (Post Baccalaureate)** - 3 years
**M.Pharm., Ph.D** (Integrated) - 5 years

## School of Life Sciences

**B.Sc.** Biotechnology
**M.Sc.** Biotechnology
**M.Sc.** Biotechnology & Management
**M.Sc.** Bioinformatics
**M.Sc.** Biochemistry
**M.Sc.** Immunology & Microbiology
**M.Sc.** Medical Biotechnology & Clinical Research

## School of Basic Sciences

**M.Sc.** Chemistry
**M.Sc.** Pharmaceutical Analytical Chemistry
**M.Sc.** Organic Chemistry
**M.Sc.** Nano Science

## School of Physiotherapy

**B.P.T.**
**M.P.T.**
(Orthopaedics, Sports, Hand Conditions, Pediatric Neurology, Cardio-Respiratory diseases)

## School of Hotel Management

**1 Year Craft Course** in
(House Keeping, Front Office, Food Production, Bakery & Confectionery, Food & Beverage Service)
**B.Sc.** Hotel & Catering Management
**M.Sc.** Hotel & Catering Management
**Diploma** in Hotel Management

## School of Computing Sciences

**B.Sc.** Information Technology
**B.Sc.** Computer Science
**B.C.A.**
**M.C.A.**
**M.Sc.** Information Technology
**M.Sc.** Computer Science

## School of Commerce

**B.Com**
**B. Com** (Computer Applications)

## School of Languages

**M.A.** English Literature & Communication Skills

## School of Mass Communication

**B.Sc.** Visual Communication

## School of Law

**B.L.** - 3 Years
**B.L.** (Integrated Course) - 5 Years

**Interact One-to-One with University Officials on the 5th Mar. 2011 between 11.00 a.m. & 05.30 p.m. and register for a FREE SEMINAR ON EDUCATIONAL OPPORTUNITIES from 11.30 a.m. on 6th Mar. 2011 at Hotel Green Grass, No. 33, Aseervatham Lane, Hospital Road, Jaffna.**

**Representative in Srilanka:**
**Selvasingam Consultants,**
09, Quarry Road, Colombo - 06.
Ph: 011 2361693
Fax: 011 2362994
Email: **selvasingam11@gmail.com**

Coordinating Offices in:
**Jaffna, Nelliady, Chavakachcheri**
**Hot Line: 071 - 5213154**


for more details log on to **www.velsuniv.ac.in**

**University Campus: Velan Nagar, P.V. Vaithiyalingam Road, Pallavaram, Chennai - 600 117, Tamilnadu, India.**
**Ph.:+91-44-2266 2500/01/02/03 Fax: +91-44-2266 2513, Mobile: +91-99625 06205, +91-99625 06359**
**Email: admission@velsuniv.org**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளின் கதவுகளைத் திறந்தவன்

39



**யூலியன் அசாஞ்சே பற்றிய ஒரு விறு விறு தொடர்**

ஔண்யன்

குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்ட குற்றவாளிகளை மட்டுமே அடைத்து வைக்கும் தனிச் சிறையில், வெறும் வானொலி. வசதி மட்டுமே கொண்ட அறையில் யூலியன் அடைக்கப்பட்டான். அவ்வாறு அடைக்கப்பட்டது யூலியனின் உயிர்ப் பாதுகாப்புக்காக என்று சமாளித்தது பிரிட்டன்.

பொழுதைப் போக்குவதற்காக இணைய இணைப்பு ஏதுமில்லாத மடிக்கணினி ஒன்றைத் தரும்படி யூலியன் கேட்டான். எனினும் அக்கோரிக்கை அவசரமாக மறுக்கப்பட்டது. அந்தளவுக்கு யூலியனின் திறமை மீது எல்லா அரசுகளும் அச்சங்கொண்டிருந்தன.

ஆஸ்திரேலியாவில் இருக்கும் அவன் தாயுடன் சில நிமிடங்கள் பேச மட்டும் அனுமதி கொடுக்கப்பட்டது. அதைப் பயன்படுத்தி தன் தாய் மூலம் ''நான் குற்றமற்றவன், இவையனைத்தும் ஆதாரமின்றி, பழி வாங்கும் நோக்கோடு செயல்படுத்தப்படுகின்றன'' என்று அறிக்கை விட்டான் யூலியன்.

14ஆம் திகதி அவனுக்கு நீதிமன்றம் பிணையில் செல்வதற்கான அனுமதியை வழங்கியது. ஆனால் சுவீடன் தரப்புச் சட்டத்தரணிகள் மேன்முறையீடு செய்யப் போவதாக உடனடியாக அறிவித்ததால் உயர் நீதிமன்றத்தில் வழக்கு எடுத்துக் கொள்ளப்படும்வரை மீண்டும் சிறையில் வைக்கப்பட்டான் யூலியன்.

ஆயினும் டிசெம்பர் 16ஆம் திகதி உயர் நீதிமன்றம் அவருக்குப் பிணை வழங்கியது. இப்போது விக்கிலீக்ஸ் ஆர்வலரும், முன்னாள் இராணுவ வீரருமான வோகன் ஸ்மித் என்பவர் தனது 600 ஏக்கர் பண்ணை வீட்டில் யூலியனைத் தன் விருந்தாளியாக வைத்துள்ளார். யூலியனை சுவீடனுக்கு நாடு கடத்துவதா இல்லையா என்பது பற்றி நெஞ்சுத் துடிப்பை அதிகரிக்கும் வகையில் முடிவை யூகிக்க முடியாத வழக்கு நடைபெற்று முடிவை நெருங்கி வருகின்றது. மிக விரைவில் துயரமான தீர்ப்பே -சுவீடனுக்கு யூலியனை நாடு கடத்துதல் - கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எல்லாம் இனி பிரிட்டனின் அதிகாரத்தின் விருப்பைப் பொறுத்தது.

யூலியன் குறித்த மிகத் தீவிரமான குற்ற விசாரணையை அமெரிக்கா மேற்கொண்டிருப்பதாக அந்த நாட்டின் சட்டமா அதிபர் எரிக் ஹோல்டர் கூறி வருகிறார். ஆயினும் அரசாங்க ஆவணங்களை வெளியிடுவது அமெரிக்கச் சட்டத்தின்படி குற்றமல்ல. உளவு பார்த்த குற்றத்திற்காக யூலியன் மீது வழக்குத் தொடுக்க வேண்டுமானால், அமெரிக்காவின் பாதுகாப்புக்குக் குந்தகம் ஏற்படுத்தும் வகையில் இந்த இரகசிய ஆவணங்களைத் தவறான முறையில் அரசிடமிருந்து பெற்றார் என்று நிரூபிக்கப்பட வேண்டும்.

அமெரிக்க புலனாய்வு அதிகாரியாக இருந்து இப்போது தனிமைச் சிறையில் உள்ள பிராட்லே மென்னிங்கிடமிருந்து ஆவணங்களைத் திருடச் சதி செய்ததாக யூலியன் மீது குற்றம் சாட்ட அமெரிக்கா முயன்றுவருகிறது. எனினும் ஒரு ஊடகவியலாளர் என்னும் முறையில் தனக்குக் கிடைத்த ஆவணங்களைப் பொது மக்களின் பார்வைக்காக வெளியிடுவது எவ்வகையிலும் - அமெரிக்கச் சட்டத்தின்படி -தவறாகாது.

மேலும், இப்போது நியூயோர்க் டைம்ஸ், த கார்டியன் உட்பட உலகின் மிக முக்கியமான ஐந்து பத்திரிகைகள் இந்தக் கேபிள்களை வெளியிட்டுள்ளதால் யூலியன் தண்டிக்கப்படும் பட்சத்தில் இந்தப் பத்திரிகைகளும் அதே குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட வேண்டியிருக்கும். அத்துடன் அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் சுவீடன் ஆகிய நாடுகளுக்கிடையே உள்ள ஒப்பந்தத்தின்படி உளவு பார்த்த குற்றத்திற்காக அல்லது மற்ற அரசியல் குற்றங்களுக்காக ஒருவரைத் தனது நாட்டுக்கு அனுப்பி வைக்கக் கோர முடியாது என்பது அமெரிக்கா எதிர்கொள்ளும் மற்றொரு பிரச்சினை.

ஆகவே, ஏராளமான சட்ட நெருக்கீடுகளை எதிர்கொள்வதைத் தவிர்ப்பதற்காக அமெரிக்கா கண்ணுக்குத் தெரியாத பயங்கர வழிகளை நாடக்கூடும். யூலியன் அடிக்கடி சொல்லி வருவதைப்போல ஒருநாள் அவன் இனந்தெரியாதவர்களால் கொல்லப்படக்கூடும் அல்லது இரகசியச் சிறையில் ஆயுள் வரை வாடவேண்டியிருக்கும்.

இதேவேளை ஊடக சுதந்திரத்துக்காகப் போராடிய யூலியனைச் சிறுமைப்படுத்தும் முயற்சிகளையும் அமெரிக்கா செய்து வருகின்றது.

அமெரிக்காவின் மிகப் பிரபலமான ''டைம்'' வார இதழ் வருடந்தோறும் அந்த ஆண்டுக்குரிய சிறந்தமனிதரை வாசகர்களின் வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்து, தன்து அட்டைப் படமாக அவர்களது உருவத்தை வெளியிட்டு கௌரவப்படுத்துவது வழமை.

எனினும் இந்தமுறை டைம் வாசகர்கள் 2010ஆம் ஆண்டுக்கான சிறந்த நபராக 3லட்சத்து 82ஆயிரத்து 26 வாக்குகளால் யூலியன் அசாஞ்சேயைத் தேர்ந்தெடுத்தபோதிலும் வெறும் 18 ஆயிரத்து 353 வாக்குகள் மட்டுமே பெற்றிருந்த பேஸ்புக் நிறுவநர் மார்க் ஸுகர் பெர்க்கையே டைம் இதழ் தேர்ந்தெடுத்து தன்னுடைய அமெரிக்க வாலாட்டுதலை நிரூபித்துக் கொண்டது.

ஆனாலும் யூலியன் தன்னுடைய புன்னகையை இன்னமும் எல்லோருக்காவும் பரிசளித்தபடியே இருக்கிறான். இப்போது யூலியனுக்கு ஆதரவானோர் அவனது வழியில் பயணிக்கத் தொடங்கி விட்டனர். விக்கிலீக்ஸ் தொடர்ந்து அதிரவைக்கும் உண்மைகளை வெளியிட்டபடியே இருக்கின்றது. புதிய தகவல் வழங்கிகள் விக்கிலீக்ஸுக்குத் தகவல்களை அள்ளிக்கொடுத்தபடியே இருக்கின்றன.

இப்போது யூலியன் எங்கும் வியாபித்துவிட்டான். தனியொரு மனிதனாக இருந்த யூலியன் லட்சக்கணக்கில் பெருகியபடியே இருக்கிறான். அமெரிக்கச் சதிவலையில் சில வேளைகளில் அவனது சரித்திரமே முடிந்தாலும் கூட அவன் சிரஞ்சீவியாக விக்கிலீக்ஸ் மூலம் நிலைத்திருக்கும் வல்லமையைப் பெற்றுவிட்டான். வரலாறு அவனுக்காகச் சாகாவரம் கொண்ட புதிய பக்கங்களை விரித்துள்ளது

யூலியன் அசாஞ்சே உண்மையின் ஒளிர்வுக்காகப் பிறந்தவன். என்றுமே திறக்க முடியாத இருளின் கதவுகளைத் திறந்தவன்.

(முற்றும்)


## பால் பொருள்கள் விலை அதிகரிப்பு

எமது சங்கத்தில் உற்பத்தி செய்யப்படும் பால் பொருள்களின் விலை பின்வருமாறு அமையும்

| 05.03.2011 இலிருந்து | |
|---|---|
| 1. சுவைப்பால் பைக்கற் 200 மி.லீ. | ரூபா. 20.00 |
| 2. யோக்கட் 80 கிராம் | 20.00 |
| 3. ஐஸ்கிறீம் 80 கிராம் | 25.00 |
| 15.03.2011 இலிருந்து | |
| 1.மில்க்லொலி 60 மி.லீ. | ரூபா. 06.00 |

பொது முகாமையாளர்,
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறச் சங்கம் (வ-து),
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

(சி/576657)(31)


## மரண அறிவித்தல்

### திருமதி சீதாலட்சுமி சீதாராம சாஸ்திரிகள்



தென்னிந்தியா, தமிழ்நாட்டைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சீதாலட்சுமி சீதாராம சாஸ்திரிகள் நேற்று முன்தினம் (02.03.2011) புதன்கிழமை இரவு கனடா, ரொறன்ரோவில் இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ சீதாராம சாஸ்திரிகளின் அன்பு மனைவியும் திரு பாலசுப்பிரமணியம் (கனடா), சுப்பிலட்சுமி, சிவகாமசுந்தரி, ஜானகி, பார்வதி (ராணி), காலஞ்சென்ற சாவித்திரி மற்றும் யசோதரா, ஸ்ரீலலிதா ஆகியோரின் பாசமிகு தாயும் அஞ்சனா, சுப்பிரமணியம், வெங்கடேஸ்வர சர்மா, காலஞ்சென்ற இராமகிருஷ்ணன் மற்றும் குமாரசாமி சர்மா, கிருஷ்ணமூர்த்தி, கணேஸ் சங்கர், சுப்பிரமணியம் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2011) வெள்ளிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*15, பி.ஏ.தம்பி லேன்,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

*தகவல்:*
இ.குமாரசாமி சர்மா
*(மருமகன்).*

(994)(31)

## சுகாதார நிலையங்களுக்கு கட்டடம்

யாழ்ப்பாணம், மார்ச்.4

வடமராட்சி கிழக்கில் உள்ள உடுத்துறை, மாமுனை ஆகிய இடங்களில் ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையங்களுக்கான கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளன.

இந்த இடங்களில் இயங்கி வந்த ஆரம்ப சுகாதார நிலையங்களின் கட்டடங்கள் யுத்தத்தினால் சேதமடைந்துள்ளன.

தற்போது அந்தப் பகுதிகளில் மக்கள் மீளக் குடியமர்ந்ததையடுத்து சுகாதார அமைச்சினால் கட்டடங்கள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ம-190)

## மரண அறிவித்தல்

### சின்னக்குட்டி சிவஞானம் (சிவா)



வேளா பள்ளம் மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், குருசோ வீதியை வசிப்பிடமாகவும் தற்போது ஜேர்மனி (Neuss) இல் வாழ்ந்து வந்தவருமான சின்னக்குட்டி சிவஞானம் 28.02.2011 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னக்குட்டி - சீதேவி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற ராசு - குணரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் றீற்றா றெஜினாவின் அன்புக் கணவரும் சிவபாக்கியம், சிவசுப்பிரமணியம், சிவராஜரட்ணம், சிவராஜா காலஞ்சென்ற சிவனேஸ்வரி மற்றும் சிவராஜலிங்கம், சிவகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும் லூர்துராணி, ஜெயராணி, ஜெரீம் (டெக்ஸர்) ஆகியோரின் மைத்துனரும் பாலச்சந்திரன், இம்மானுவேல் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (04.03.2011) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணி முதல் மூன்று மணிவரை Hauptfriedhof Neuss, Rheydter Strabe 191, 41464 Neuss இல் ஆராதனையுடன் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
பாலச்சந்திரன் லூர்த்துராணி
*(சகோதரி) 0112521161*
றெஜீனா சிவஞானம் *(மனைவி)*
*02131402856 (ஜேர்மனி).*

(997)(31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இத்தாலி நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள சிலி நாட்டு அதிபர் செபாஸ்டின் பினேரா(இடது) ரோம் நகரில் பிரதமர் சில்வியோ பெர்லஸ்கோனியை(வலது) சந்தித்துக் கலந்துரையாடுகிறார்.

# ஐ.நா. மனித உரிமை சபையில் இருந்து லிபியா அதிரடியாக நீக்கம்

நியூயோர்க், மார்ச். 4

லிபியாவில் அதிபர் கடாபிக்கு எதிராக இடம்பெற்றுவரும் மக்கள் போராட்டத்தில் சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். எனவே மனித உரிமைகள் மீறப்படுவதால் மனித உரிமைக் சபையில் இருந்து லிபியா நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

லிபியாவில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நா. சபையும், உலக நாடுகளும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் மீது நடத்தப்படும் தாக்குதலை நிறுத்தும்படி கோரிக்கைகள் விடுத்து வந்தன.

லிபியாவில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஜெனிவாவில் ஐ.நா.சபையின் மனித உரிமைகள் சபையின் கூட்டம் நடந்தது. இதில் 4 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இவற்றில், லிபியாவில் மனித உரிமைகள் மீறப்படுவதால் மனித உரிமைகள் சபையில் இருந்து லிபியாவை நீக்கம் செய்து தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது.

அந்தத் தீர்மானம் நிறைவேற்ற 192 உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தேவை. எனவே கடந்த புதன்கிழமை ஐ.நா.சபையின் பொதுச் சபைக் கூட்டம் நியூயோர்க்கில் நடந்தது.

அந்தக்கூட்டத்தில், மனித உரிமை சபையின் இருந்து லிபியாவைத் தற்காலிக நீக்கம் செய்வது குறித்துத் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. அப்போது அந்தத் தீர்மானம் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது.

இதற்கு வெனிசுலா மட்டும் எதிர்ப்புத் தெரிவித்தது. இந்த நாட்டின் ஐ.நா.சபைக்காக தூதர் ஜார்ஜ் வலேரோ பரிசினோ கலந்து கொண்டார்.

இந்த விவகாரத்தில் முறைப்படியான விசாரணை மேற்கொண்டு அதன்பிறகு இந்த நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்றார். ஆனால் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றியதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஐ.நா.வின் மனித உரிமைக் சபையில் இருந்து தற்போது தான் லிபியா முதன்முறையாக நீக்கம் செய்யப்பட்டுள்ளது. என்று அமெரிக்கத் தூதர் சூசன் ரைஸ் தெரிவித்துள்ளார்.

# டுனிஷிய போராட்டம் நீடிப்பு; இரு அமைச்சர்கள் ராஜினாமா

டுனீஷியாவில் தொடரும் மக்கள் போராட்டத்தின் எதிரொலியாக, செவ்வாய்க்கிழமை அமைச்சர்கள் இரண்டு பேர் தங்கள் பதவியை இராஜினாமா செய்தனர்.

டுனீஷியாவில், முன்னாள் ஜனாதிபதி ஜைன் அல் அபிதீன் பென் அலி தலைமையிலான அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த சிலர், அவரது வெளியேற்றத்துக்குப் பின்னர் முகமது கன்னவச்சி பிரதமராகப் பொறுப்பேற்ற அமைச்சரவையிலும் இடம்பெற்றிருந்தனர்.

இதனால் வெறுப்படைந்த மக்கள், முன்னாள் ஜனாதிபதியோடு தொடர்புடையவர்கள் அமைச்சரவையிலிருந்து வெளியேற வேண்டும் என்று கோரி, கடந்த சில நாள்களாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால், கன்னவச்சி தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்தார்.

எனினும் மக்கள் திருப்தியடையவில்லை. இதையடுத்து தொழிற்துறை மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் முகமது செல்பி என்பவரும், திட்டமிடல் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் முகமது நூரி ஜூயினி என்பவரும் தங்கள் பதவியை இராஜினாமாச் செய்தனர்.

புதிய அமைச்சரவையில் இவர்கள் இருவர் மட்டும்தான் முன்னாள் ஜனாதிபதியோடு தொடர்புடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# கின்னஸ் சாதனை படைத்த ஓநாய் சிறுமி

முகம் முழுவதும் உரோமங்களால் மூடப்பட்ட மனிதர்கள் பற்றி பல செய்திகள் வெளி வந்துள்ளன. ஆனால் முதல் தடவையாக ஒரு பெண்ணின் அதாவது சிறுமி ஒருவருக்கு இவ்வாறு ஏற்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாகத் தெரியவருவதாவது:

உடலில் அதிக உரோமங்களை உடைய சிறுமி என்கிற கின்னஸ் சாதனைக்குச் சொந்தக்காரி ஆகி இருக்கின்றார் தாய்லாந்து நாட்டின் சுப்ரா சசுப் பான் என்கிற 11 வயதுச் சுட்டிப் பெண். இந்தச் சிறுமிக்கு முகம், கைகள், கால்கள், காதுகள் எனப் பல இடங்களிலும் உடல் முழுவதும் உரோமங்கள் காணப்படுகின்றன.

இந்தச் சிறுமிக்கு உண்டான உரோமங்களை நிரந்தரமாக அகற்ற வைத்திய நிபுணர்கள் மேற்கொண்ட பகீரத முயற்சிகள் தோல்வியில் முடிந்து விட்டன. கின்னஸ் சாதனையைத் தொடர்ந்து மகிழ்ச்சியில் ஆரவாரிக்கின்றார் இச்சிறுமி.

முன்பு கேலிகள், சமூகத்திலிருந்து ஓரம் கட்டுதல்கள் ஆகியவற்றுக்கு ஆளான இவர் இன்று அந்நாட்டின் கதாநாயகி ஆகிவிட்டார்.

# நோபல் பரிசுக்கு 241 பெயர்கள் பரிந்துரை

இந்த வருடத்துக்கான நோபல் பரிசுக்காக 241 பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன. பல்வேறு துறைகளில் சாதனை படைக்கும் பிரமுகர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் நோபல் பரிசு வழங்கப்படுகிறது. இது குறித்து நோபல் அமைப்பின் இயக்குநர் கீர்லான் டஸ்ட் குறிப்பிடுகையில்,

நோபல் பரிசுக்குப் பரிந்துரை செய்யப்படும் பெயர்களை இரகசியமாக வைத்துக் கொள்வோம். பரிசுக்குத் தேர்வு செய்யப்படும் நபர்களின் பெயர்கள் ஒக்டோபர் மாதம் வெளியிடப்படும். கடந்தாண்டு நோபல் பரிசுக்காக 237 நபர்களின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டன என்று கூறினார்.

# நியூஸிலாந்தில் புழுதிப்புயல்

கிறிஸ்ட்சர்ச், மார்ச்.4

நியூஸிலாந்தில் பூகம்பம் பாதித்த கிறிஸ்ட் சர்ச் பகுதியில், புழுதிப் புயல் தாக்கியுள்ளது. நியூஸிலாந்தின் இரண்டாவது மிகப்பெரிய நகரான கிறிஸ்ட் சர்ச், கடந்த வாரம் ஏற்பட்ட பூகம்பத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்டது. இதில் 240 பேர் பலியாகினர்.

மீட்புப் பணிகள் இன்னும் நிறைவடையாத நிலையில் நேற்று முன் தினம் இந்த நகரைப் புழுதி புயல் தாக்கியது. நகரம் முழுவதும் புழுதி மூட்டமாகக் காணப்படுவதால், மக்கள் சுவாசிக்கச் சிரமப்படுகின்றனர். இதனால், அவர்களுக்கு சுவாசக் கருவிகள் வழங்கும் பணியில் மீட்புக் குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

## துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலகத்தில் பார்வை வலுவற்றோர் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் செல்வி ஜெ.சந்திரமலர் அவர்களின் அன்புத் தாய்

**திருமதி ஜெ.இராஜேஸ்வரி**

அவர்களின் பிரிவுத் துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.பிரதேச செயலக நலன்புரிச் சங்கம்,
யாழ்ப்பாணம்.

(794)(31)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபர் அ.அருந்தவநேசன் அவர்களின் அன்பு மாமன்

**இளையதம்பி செல்லத்துரை**

(முன்னாள் அதிபர், ஈவினை, யா/அ.த.க.பாடசாலை)

அவர்களின் மறைவை முன்னிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/இடைக்காடு மகா வித்தியாலயம்.
அச்சுவேலி.

(998)(31)

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2204 திகதி 02-03-2011

ஆங்கில எழுத்திற்கும் W

வெற்றி எண்கள் 02 29 37 41 போனஸ் இல: 08

ஜக்பொட் பரிசு ரூ. 14,277,325/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 195687 | 20/- | 3,913,740/- |
| 2 இல | 14085 | 100/- | 1,408,500/- |
| 3 இல | 299 | 1,000/- | 299,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7768 | 40/- | 310,720/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 541 | 1,000/- | 541,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 13 | 10,000/- | 130,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 14,277,325/- | - |
| 1 இல + போனஸ் இல | 9252 | 100/- | 925,200/- |
| 2 இல + போனஸ் இல | 437 | 500/- | 218,500/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 376 | 200/- | 75,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 23 | 1,500/- | 34,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 9,256,360/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 228496 | | 9,856,360/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| புத்தளம் | 202880489-0-27 |
| மொனராகலை | 202878933-8-15 |
| இரத்தினபுரி | 202885517-7-09 |
| காலி | 202888696-6-34 |
| கொழும்பு | 202886969-3-30 |
| கொழும்பு | 202887002-9-00 |
| அம்பாறை | 202885224-9-42 |
| பொலன்னறுவை | 202884805-2-32 |
| கண்டி | 202883299-2-36 |
| கண்டி | 202883626-7-28 |

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 14,811,125/-

பச்சை நிற டிக்கட்டுகள் 2011 மார்ச் 05 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே. 2333546/7

## ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 104
திகதி - 02.03.2011

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து H அதிர்ஷ்ட இலக்கம் 09 வெற்றி இலக்கம் 5 7 5 4 4

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | | | | | | | | தொகை | பரிசு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | H | 09 | 5 | 7 | 5 | 4 | 4 | ரூ. 10,910,961.00 | - |
| 1 பரிசு | | 09 | 5 | 7 | 5 | 4 | 4 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | | | 5 | 7 | 5 | 4 | 4 | ரூ. 100,000.00 | 03 |
| 3 பரிசு | | | | 7 | 5 | 4 | 4 | ரூ. 10,000.00 | 26 |
| 4 பரிசு | | | | | 5 | 4 | 4 | ரூ. 1,000.00 | 271 |
| 5 பரிசு | | | | | | 4 | 4 | ரூ. 50.00 | 2639 |
| 6 பரிசு | | | | | | | 4 | ரூ. 20.00 | 25503 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | | | | | | | | தொகை | பரிசு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 5 | 7 | 5 | 4 | | ரூ. 1,000.00 | 27 |
| 8 பரிசு | | | 5 | 7 | 5 | | | ரூ. 100.00 | 272 |
| 9 பரிசு | | | 5 | 7 | | | | ரூ. 50.00 | 2665 |
| 10 பரிசு | H | | | | | | | ரூ. 20.00 | 10446 |
| 11 பரிசு | H | 09 | | | | | | ரூ. 100.00 | 1163 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,985,680.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ.11,316,371.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புறப்பட்டது கடாபியின் படை

திரிபோலி, மார்ச் 04

ஆர்ப்பாட்டக்காரர்களை ஒடுக்க ஜனாதிபதி கடாபியின் படைகள் புறப்பட்டு விட்டன எனக் கடைசியாகக் கிடைத்துள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க கடற்படையினர் நிலைகொண்டுள்ள பகுதிக்கு அருகேயுள்ள பிரிகா நகரை இந்தப் படையினர் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். தலைநகர் திரிபோலியை நோக்கி வரும் கிளர்ச்சியாளர்களை இந்தப் படைகளைக் கொண்டு ஒடுக்க கடாபி திட்டமிட்டுள்ளார் எனத் தெரிகிறது.

# லிபிய போராட்டக்காரர்களிடம் நான்காவது நகரமும் வீழ்ச்சி

திரிபோலி, மார்ச் 04

லிபியாவில் அரசுக்கு எதிராகப் போராடிவரும் மக்களை ஒடுக்க ஜனாதிபதி கடாபி இராணுவத்தை ஏவிவிட்டுள்ளார். ஆனால் பொதுமக்கள் அதற்குப் பயப்படாமல் தொடர்ந்து தீவிர போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

லிபியாவின் முக்கிய நகரங்களை ஒவ்வொன்றாக போராட்டக்காரர்கள் கைப்பற்றி வருகின்றனர். ஏற்கனவே பொன்காசி, மிஷ்ரதா, ஷாவியா ஆகிய 3 நகரங்களைப் போராட்டக்காரர்கள் கைப்பற்றி இருந்தனர்.

புதன்கிழமை துறைமுக நகரமான பிரிகா நகரை அவர்கள் கைப்பற்றினார்கள். இத்துடன் 4ஆவது நகரம் போராட்டக்காரர்களிடம் வீழ்ந்துள்ளது. இந்த நகரம் ஏற்கனவே இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்தது.

பொதுமக்கள் அதிகளவில் திரண்டு வந்ததால் இராணுவம் பின்வாங்கி நகரைவிட்டு வெளியேறியது. தற்போது இராணுவத்துக்கும் பொதுமக்களுக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடந்து வருகிறது.

அடுத்ததாக தலைநகரம் திரிபோலியைப் பிடிக்க பொதுமக்கள் தயாராக வருகின்றனர். 4 திசைகளிலும் இருந்து திரண்டு வந்து நகரை முற்றுகையிட அவர்கள் தயாராகி வருகின்றனர். தலைநகருக்குள் வெளியிலிருந்து போராட்டக்காரர்கள் வந்துவிடாமல் தடுக்க திரிபோலி நகரைச் சுற்றி இராணுவம் நிறுத்தப்பட்டுள்ளது.

லிபியாவில் நடந்துவரும் கலவரத்தில் இதுவரை 6 ஆயிரம் பேர் பலியாகி இருக்கின்றனர் என அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

போராட்டம் வலுத்து வருவதால் கடாபி திரிபோலி நகரை விட்டு வெளியேறி நாட்டின் மேற்குப் பகுதியிலுள்ள நகரத்துக்குச் செல்ல திட்டமிட்டிருக்கிறார் எனக் கூறப்படுகிறது. அங்கு அவரது ஆதரவாளர்கள் அதிகமாக உள்ளனர். எனவே அவர் அங்கு செல்ல வாய்ப்பு இருக்கிறது எனக் கருதப்படுகிறது.

# பாகிஸ்தானில் கல்லூரிக்குள் புகுந்து தீவிரவாதிகள் சூடு

## 30 மாணவிகள் காயம்

பெஷாவர், மார்ச் 04

பாகிஸ்தானில் வடமேற்கு எல்லைப்புற மாநிலத்தில் தலைநகர் பெஷாவர் அருகே உள்ள மார்தான் நகரில் ஒரு பெண்கள் கல்லூரி உள்ளது. துப்பாக்கிகள் மற்றும் வெடிகுண்டுகளுடன் தலிபான் தீவிரவாதிகள் அங்கு புகுந்தனர். அவர்களைப் பார்த்ததும் மாணவிகள் அலறி அடித்து ஓடினார்கள்.

அப்படி ஓடிய மாணவிகளை நோக்கி தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டனர். மேலும் கையெறி குண்டுகளையும் வீசினார்கள். இதனால் அங்கு பதற்றமும், பரபரப்பும் ஏற்பட்டன. எங்கும் புகை மண்டலமாகக் காட்சி அளித்தது.

தீவிரவாதிகளின் வெறியாட்டத்தில் 30 மாணவிகள் காயமடைந்தனர். அவர்கள் அனைவரும் மார்தான் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இதில் ஒரு மாணவி இறந்தார் எனக் கூறப்படுகிறது. கல்லூரிக்குள் புகுந்து சுட்ட தீவிரவாதிகளைப் பொலிஸார் தேடிவருகிறார்கள்.

## ஜேர்மன் விமான நிலையத்தில் சூடு; இரு அமெ. வீரர்கள் பலி!

பிராங்பர்ட், மார்ச் 04

ஜேர்மனியின் பிராங்க்பேர்ட் விமான நிலையத்துக்குள் துப்பாக்கி யுடன் புகுந்த ஒரு மர்ம மனிதன் சரமாரியாகச் சுட்டதில் இரண்டு அமெரிக்க விமானப்படை வீரர்கள் கொல்லப்பட்டனர். பலர் காய மடைந்தனர்.

ஜேர்மனியின் பிராங்க்பர்ட் மாகாணத்தில் சர்வதேச விமான நிலையத்தில் அமெரிக்க இராணுவச் சிப்பாய்களை ஏற்றிக் கொண்டு இராணுவ பஸ் வந்துகொண்டிருந்தது. இந்த பஸ் விமான நிலையத்தின் இரண்டாவது டெர்மினல் (முனையம்) முன்பு வந்து நின்றது.

அப்போது அங்கு பதுங்கியிருந்த ஒரு மர்ம மனிதர் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியால் பஸ்ஸை நோக்கி சரமாரியாகச் சுட்டார். இதில் இரண்டு அமெரிக்க இராணுவச் சிப்பாய்கள் பலியாகினர். சம்பவம் அறிந்த ஜேர்மன் பாதுகாப்புப்படையினர் அந்த மர்ம மனி தரை சுற்றி வளைத்துக் கைதுசெய்தனர்.

விசாரணையில் அவர் கொசோவா நாட்டைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

## லிபியாவை தாக்கக் கூடாது ஈரான் எச்சரிக்கை

அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் லிபியா மீது தாக்குதல் நடத்தினால் அவர்கள் மோசமான எதிர்விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்று ஈரான் ஜனாதிபதி மெஹ்மூத் அஹ்மதி நிஜாத் கூறியுள்ளார்.

முன்னர் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஜோர்ஜ் புஷ், ஈராக் மீதும் ஆப்கானிஸ்தான் மீதும் தாக்குதல் நடத்தினார். அப்போதிருந்த சூழ்நிலை இப்போது இல்லை. இப்போது லிபியா மீது தாக்குதல் நடத்தினால் அது, அவர்களுக்கு அவர்களே மரணக் குழியை தோண்டிக் கொள்வதற்குச் சமமாக இருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.



பிரான்ஸில் சுற்றுப்பயணம் செய்துவரும் தென்னாபிரிக்கா எரிசக்திதுறை அமைச்சர் டிப்பூ பீட்டர்ஸ் (இடது), பிரான்ஸின் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் ரோப் டேவிஸ் (வலது) ஆகியோர் தலைநகர் பரிஸில் நிதி மற்றும் தொழில்துறை அமைச்சகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டனர்.

## அமெரிக்க போர்க்கப்பல்கள் விரைகின்றன

மக்கள் மீதான தாக்குதலை நிறுத்தும்படி அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும், பிரிட்டிஷ் பிரதமர் கமரூனும் ஏற்கனவே கேட்டுக்கொண்டும் கடாபி கேட்கவில்லை. ஆகவே மக்கள் மீது குண்டு வீசும் லிபியாவின் விமானங்களைச் சுட்டு வீழ்த்துவோம் என்று பிரிட்டிஷ் பிரதமர் எச்சரிக்கை விடுத்தார்.

கடாபிக்கு எதிராகத் தாக்குதல் நடத்த அமெரிக்கா 2 போர்க் கப்பல்களையும், போர் விமானங்களையும் லிபியாவுக்கு அனுப்பி வைத்தது. கேர்சர்ஜ், போன்ஸ் என்ற அந்த 2 போர்க்கப்பல்களும் சூயஸ்கால்வாயைச்சென்று அடைந்துள்ளன என எகிப்து அதிகாரிகள் தெரிவித்தனர்.

# செனட்டர் கெனடியின் கொலையாளி 14 ஆவது தடவையாக பிணை மனு

கலிபோர்னியா, மார்ச் 04

43 ஆண்டுகளுக்கு முன்னர் சுட்டுக்கொல்லப்பட்ட அமெரிக்க முன்னாள் செனட்டர் கெனடியின் கொலையாளி 14ஆவது முறையாக பிணை கோரி நீதி மன்றம் அணுகியுள்ளார்.

அமெரிக்க முன்னாள் செனட்டர் றோபேட் கெனடி 1968 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5 ஆம் திகதி லொஸ்ஏஞ்சல்ஸ் நகரிலுள்ள அம்பாசிடர் ஹோட்டலுக்கு நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ள வந்தார்.

அப்போது அவரை மர்ம மனிதர் ஒருவர் தன்னிடமிருந்த கைத்துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார். இது அமெரிக்காவை அலற வைத்தது. இது தொடர்பாகப் பலஸ்தீனத்தைச் சேர்ந்த ஷிர்கான் என்ற இளைஞர் கைது செய்யப்பட்டு அவர்மீது வழக்குத் தொடரப் பட்டது.

தற்போது ஷிர்கான்ஷிர்கான் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள பளஸ்ட்வொலி நகர கோலிங்கா சிறையில் அடைக்கப் பட்டு சிறைவாசம் அனுபவித்து வருகிறார். இவருக்கு தற்போது 66 வயது ஆகிறது.

கடந்த 43 ஆண்டுகளாக நடந்து வந்த இந்த வழக்கில் இதுவரை 13 தடவைகள் தனக்கு பிணை கோரி நீதி மன்றத்தை அணுகியுள்ளார். புதன்கிழமையும் 14ஆவது முறையாக அணுகியுள்ளார்.

முன்னர் கடந்த 1972ஆம் ஆண்டு கெனடி கொலை வழக்கில் ஷிர்கானுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இதனை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் 2003ஆம் ஆண்டு மேன்முறையீடு செய்ததன் பேரில் இவருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை [illegible] உச்சநீதிமன்றம் [illegible].

## ஆப்கானிஸ்தானில் குண்டுவீச்சு ஒன்பது மாணவர்கள் பலி!

காபூல், மார்ச் 04

ஆப்கானிஸ்தானிலுள்ள நங்லாம் பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் சிலர் அங்குள்ள மலைப்பகுதியில் விறகு வெட்டிக்கொண்டிருந்தனர்.

அப்போது அந்தப் பகுதியில் அமெரிக்க இராணுவ ஹெலிக்கொப்டர் ஒன்று தீவிரவாதிகள் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்தது. விறகு வெட்டிக் கொண்டிருந்த மாணவர்களைப் பார்த்ததும் தீவிரவாதிகள் என நினைத்து அதிலிருந்த வீரர்கள் அவர்கள் மீது குண்டுகளை வீசினார்கள்.

துப்பாக்கியாலும் சுட்டனர். இதில் 9 மாணவர்கள் பலியானார்கள். ஒரு மாணவர் மட்டும் இலேசான காயத்துடன் உயிர்த் தப்பினார். இறந்த அனைவரும் 9 வயதிலிருந்து 15 வயதுக்கு உட்பட்டவர்களாவர். இந்தச் சம்பவத்துக்கு அமெரிக்கா கூட்டுப்படை மன்னிப்பு கேட்டுள்ளது.

தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்தப் பகுதி மக்கள் போராட்டம் நடத்தினார்கள். ஆப்கானிஸ்தானில் அமெரிக்க கூட்டுப்படை குண்டு வீச்சில் பொதுமக்கள் அடிக்கடி பலியாகி வருவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாட்டி அழுகிறாள்



சிறிய பூச்சி பிடிக்கவே
பெரிய பல்லி ஊர்ந்தது

பெரிய பல்லி பிடிக்கவே
கரிய பூனை பதுங்கிற்று

கரிய பூனை பிடிக்கவே
வெள்ளை நாயும் பாய்ந்தது

வெள்ளை நாயைத் துரத்தவே
மெல்லப் பாட்டி எறிந்தனள்

பாட்டி எறிந்த தடியினால்
பானை சட்டி உடைந்ததே

காட்டிக் காட்டி அழுகிறாள்
கவலை தீர்ப்பார் இல்லையே.

## கொன்றை வேந்தன்

* தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்
பொருள்:தனது கணவர் மேல் குற்றம் சொல்லித் தூற்றுகின்ற பெண்களை இயமன் என்று எண்ணத் தகும்.

* தேடா தழிக்கிற் பாடா முடியும்
பொருள்: ஒருவன் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்காமலும் இருக்கின்ற பொருள்களை செலவழித்தும் இருப்பானாயின் பிற்காலத்தில் துன்பத்தையே அடைவான்.

* தையும் மாசியும் வையகத் துறங்கு
பொருள்: தை மாதத்திலும் மாசிமாதத்திலும் பனி வருத்தந் தராத வைக்கோல் வீட்டிலே நீ நித்திரை செய்.

* நல்லிணக்க மல்ல தல்லற் படுத்தும்
பொருள்: நல்ல சகவாசம் அல்லாதது துன்பத்தையே உண்டாக்கும்.

* நெஞ்சையொளித்திரு வஞ்சகமில்லை
பொருள்: தம்முடைய மனசுக்கு மறைக்கப்பட்ட எந்தவொரு வஞ்சனையும் எவரிடமும் இல்லை.

* சேமம் புகினும் யாமத் துறங்கு
பொருள்: காவற் கூடத்திற்குப் போய் ஒரு வேலையும் இல்லாமல் இருந்தாலும் ஏழரை நாழிற்குப் பின் நீ நித்திரை செய்.

* தந்தை சொல் மிக்க மந்திரமில்லை
பொருள்: பிதாவினுடைய சொல்லுக்கு மேற்பட்ட பலனைத்தரும் மந்திரமானது ஒருவனுக்கு எந்த நூலிலும் இல்லை.

* தீராக் கோபம் போரா முடியும்
பொருள்: நீங்காத கோபமானது பின்பு சண்டையாக முடிந்துவிடும்.

சுரபி.

## எதிர்காலம் ஆரம்பம் ...




ஒற்றுமை:-புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலையின் கால்கோள்விழா அண்மையில் நடைபெற்றபோது கலந்துகொண்ட மாணவர்கள். (72)

## தெனாலிராமனின் மறுபிறவி

தெனாலிராமன் கதைகள்



தெனாலிராமன் கொலை செய்யப்பட்ட செய்தி ஊர் முழுவதும் தீ போல் பரவியது. அப்போது சில அந்தணர்கள் மன்னரைச் சந்தித்தனர். நியாயமாக ஒரு பார்ப்பனரைக் கொன்றது மிகக் கொடிய பாவமாகும். அவனது ஆவி தங்களுக்கும் நாட்டுக்கும் கேடு விளைவிக்கும் என்றனர். இதைக்கேட்ட மன்னர் கலங்கினார்.

இதற்குப் பரிகாரம் என்னவென்று மன்னர் கேட்டார். அதற்கு அந்தணர்கள் ''அவன் ஆவி சாந்தி அடைய அமாவாசை அன்று நள்ளிரவு சுடுகாட்டிற்குச் சென்று பூஜை செய்தால் நலம்'' என்றனர்.

உடனே மன்னர் ராஜகுருவை அழைத்து அமாவாசையன்று நள்ளிரவு சுடுகாட்டில் தெனாலிராமன் ஆவிக்கு பூஜை செய்ய உத்தரவிட்டார்.

இதைக்கேட்ட ராஜகுரு நடுநடுங்கினார். ''சுடுகாட்டில் நள்ளிரவு நேரத்தில் பூஜை செய்வது என்றால் எனக்குப் பயமாக இருக்கிறது'' என்றார். ''அப்படியென்றால் துணைக்கு சில புரோகிதர்களையும் அழைத்துச் செல்லுங்கள்'' என மிகக் கண்டிப்புடன் மன்னர் கட்டளையிட்டார்.

மன்னர் கட்டளையை மீற முடியாத ராஜகுரு பூஜைக்கு ஒத்துக்கொண்டார். அமாவாசை அன்று நள்ளிரவு புரோகிதர்கள் சகிதம் சுடு காட்டிற்குச் சென்று பூஜை நடத்தினார்கள். ராஜகுரு பூஜையின் இறுதியில் அங்கிருந்த மரத்தை மேல் நோக்கிப் பார்த்து ''தெனாலிராமனின் ஆவியாகிய பிரம்மராட்சதனே என்று பலத்த குரலில் அழைத்து எங்களுக்கு ஒரு தீங்கும் செய்யாதே.......... உன் ஆன்மா சாந்தியடையப் பூஜை செய்துள்ளோம்'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே மரத்திலிருந்து ஓர் உருவம் பயங்கர சத்தத்தோடு கீழே குதித்தது. இதைப்பார்த்த ராஜகுருவும் புரோகிதர்களும் பயத்தால் நடு நடுங்கி அலறி அடித்துக்கொண்டு அரண்மனைக்கு ஓடினார்கள்.

அப்போது நடுநிசி நேரமாதலால் மன்னர் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தார். இருப்பினும் மன்னரை எழுப்பினர். நடந்தவற்றை நடுக்கத்தோடு கூறினார். இதைக் கேட்ட மன்னர் இதற்குப் பரிகாரம் காண ஆழ்ந்த யோசனை செய்தார். பின் ஒரு முடிவுக்கு வந்தார். தெனாலிராமன் ஆவியாகிய பிரம்மராட்சதனை ஒழித்துக் கட்டி நாட்டிற்கு நன்மை உண்டாகச் செய்பவர்களுக்கு ஆயிரம் பொன் பரிசளிக்கப்படும் என்று பறைசாற்றி அறிவிக்கச் சொன்னார். இதைக் கேட்ட நாட்டு மக்கள் யாரும் பிரம்மராட்சதனை ஒழித்துக்கட்ட முன் வரவில்லை. சில நாள்களுக்குப்பின் ஒரு துறவி மன்னரைக் காண வந்தார். மன்னரும் அந்தத்துறவியிடம் தெனாலிராமனின் ஆவியாகிய பிரம்ம ராட்சதனை ஒழித்துக் கட்டும்படி வேண்டினார்.

இதைக்கேட்ட துறவியர், ''மன்னர் பெருமானே, கவலையை விடுங்கள், பிரம்மராட்சதனை என்னால் முடிந்தளவு ஒழித்துக்கட்ட முயற்சிக்கிறேன். இது நிரந்தரமான ஏற்பாடாக இருக்காது. மீண்டும் தெனாலிராமன் உயிர்பெற்று வந்தால்தான் பிரம்மராட்சசனுடைய அட்டகாசம் சுத்தமாகக் குறையும்'' என்றார். ''அப்படியானால் தங்களால் மீண்டும் தெனாலிராமனை உயிர்ப்பிக்க முடியுமா? '' என வினவினார் மன்னர். ''ஓ.......... தாராளமாக என்னால் முடியும்'' என்றார் துறவு.

மன்னர் மகிழ்ந்து தாங்கள் தெனாலிராமனை உயிர்ப்பித்துக் காட்டுங்கள். அதுவே எனக்குப் போதும் என்றார். உடனே துறவியார் தான் அணிந்திருந்த வேடத்தைக் கலைத்து ''நான்தான் தெனாலிராமன். துறவி வேடத்தில் வந்தேன்'' என்றார். இதையறிந்த மன்னர் மகிழ்ந்து தெனாலிராமனைக் கட்டித் தழுவிக் கொண்டார். பின் ஆயிரம் பொன் பரிசளித்தார்.

(முற்றும்)

## புள்ளி மரங்கொத்தி

இந்த மரங்கொத்திகள் சீனா, ஜப்பான், வட தென்மேற்கு, ஆசியா ஆகிய பிர தேசங்களில் அதிகமாகக் காணப்படுகிறன. பெரும்பாலான காடுகளிலும் மரங்கள் உள்ள பகுதிகளிலும் காணப்படுகின்றன. எனினும் சில இனங்கள் மரங்களற்ற பாறைப் பகுதிகளிலும் பாலை நிலங்களிலும் வாழ்கின்றன. மரங்கொத்திகளில் சுமார் 200 சிற்றினங்கள் உள்ளதாகக் கண்டறியப் பட்டுள்ளன.

அதன் நெஞ்சுப்பகுதி வெண்ணிறமானது. இது மிகவும் கம்பீரமான பறவை. இந்தப் பறவை உருவத்திலும் சற்றுப் பெரியது மட்டுமன்றி ஒரு வளர்ச்சி யடைந்த பறவையும் ஆகும். இதன் நீளம் வாலிலிருந்து தலைவரை 24 சென்ரிமீற்றர் ஆண் பறவையின் கழுத்தைச் சுற்றிச் செந்நிற ஆரம் காணப்படும். சிறு குஞ்சுகளின் தலையில் செந்நிறச் சிட்டி காணப்படும். பின் இவை வளர வளர அந்தக் சிட்டி மறைந்துவிடும்.

மரங்கொத்திகள் மரப்பட்டையைக் குடைந்து மரத்தில் பொந்தை உருவாக்கி அதில் வாழும். வசந்தகாலத்தில் மரத்தில் தன் அலகுகளால் தட்டி ஒலி எழுப்பும். அது அவர்களின் இனப்பெருக்க காலமாகையால் ஆண்பறவை அவ்வாறு செயற்படுவது அருகிலுள்ள பெண் பறவையைக் கவரவே என இயற்கை ஆராட்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

மரங்கொத்தி தன் சோடியைத் தேடியபின் தமக்கு ஒரு கூட்டை அமைக்க வேண்டியுள்ளது. இவர்களுக்கு அதிஷ்டமிருப்பின் பொந்துள்ள மரம் கிடைக்கும். அல்லாதவிடத்து இவையே மரத்தில் பொந்துகளைத் தம் சொண்டால் உருவாக்க வேண்டும்.

பெண் பறவை 4-7 முட்டைகளை ஒரு தடவை இடும். இந்த முட்டைகள் வெள்ளை நிறமானவை. முட்டை இட்டு 16 நாள்களில் குஞ்சு பொரிக்கும். குஞ்சு பொரிக்கும்போது பார்வையற்றனவாகவும் சிறகற்று அவலட்சணமாகவும் காணப்படும். படிப்படியாகப் பார்வைக்கு மிக லட்சணமாகவும் கண்பார்வைத் தெளிவுடனும் மூன்று கிழமைவரை வளர்ந்து பின் கூட்டை விட்டுப் பறந்து தம் உணவைத் தாமே தேடும் நிலையை அடைந்து விடும்.ஆயினும் இவற்றின் சொண்டு பலமடைந்திருக்கமாட்டாது. எனவே இவை தமக்கு சொண்டுகள் பலமடையும் வரை பூச்சி புழுக்களையும் தேவதாரு விதைகளையும் உணவாக உட்கொள்ளும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஏப்ரல் 13 இல் தமிழகத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை மே 13 இல்

சென்னை, மார்ச் 4

தமிழகம், புதுச்சேரியில் சட்டப் பேரவைத் தேர்தலுக்கு ஒரே கட்டமாக ஏப்ரல் 13 ஆம் திகதி வாக்குப்பதிவு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு மாதத்துக்குப் பின்னர் மே 13 ஆம் திகதி வாக்குகள் எண்ணப்படவுள்ளன.

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து கடந்த செவ்வாய்க்கிழமை மாலையில் இருந்து தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுலுக்கு வந்துள்ளன. இதனால், புதிய திட்டங்கள், அறிவிப்புக்களை தமிழகம், புதுச்சேரி அரசுகள் அறிவிக்க முடியாது.

தமிழக சட்டப்பேரவையின் காலம் மே 16 ஆம் திகதியும் புதுச்சேரிப் பேரவையின் காலம் மே 28 ஆம் திகதியும் முடிவடைகின்றன. இதையடுத்து சட்டப் பேரவைத் தேர்தலை நடத்துவதற்கான ஆயத்தப் பணிகளில் தேர்தல் ஆணையம் ஈடுபட்டுள்ளது.

தேர்தல் திகதிகளை முடிவு செய்வது குறித்து தலைமைத் தேர்தல் ஆணையாளர் எஸ்.ஒய். குரேஷி தலைமையில் டில்லியில் ஆலோசனைக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. மாலை 6 மணிக்குத் தேர்தல் திகதி குறித்த அறிவிப்பை குரேஷி வெளியிட்டார்.

இதுகுறித்து டில்லியில் செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டியின் விவரம் வருமாறு -

தமிழகம், புதுச்சேரியில் நடைபெறவுள்ள தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுத் தாக்கல் மார்ச் 19 ஆம் திகதி தொடங்குகிறது. வாக்குப் பதிவு ஏப்ரல் 13 ஆம் திகதியும், வாக்கு எண்ணிக்கை மே 13 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

தமிழகத்தில் மொத்தம் 4.59 கோடியும், புதுச்சேரியில் 8 லட்சத்து 5,124 வாக்காளர்களும் உள்ளனர். அவர்களுக்குப் புகைப்பட வாக்காளர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. புதுச்சேரி மாநிலத்தில் 100 சதவீதமும், தமிழகத்தில் 99.9 சதவீதமும் அடையாள அட்டைகள் அளிக்கப்பட்டுள்ளன.


தேர்தல் பணியில் மத்திய மற்றும் தேர்தல் நடைபெறும் மாநிலத்தைச் சாராத பிற மாநிலப் பொலிஸார் ஈடுபடுத்தப்படுவர்.

மாவட்டங்களில் சட்டம்-ஒழுங்கைக் காப்பதற்கு பொலிஸ் உயரதிகாரிகளுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்படும். பதற்றமான இடங்களில் நிலைமை உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டு, தேர்தல் சுதந்திரமாக நடைபெற வழிவகுக்கப்படும்.

தேர்தல் நடைமுறைகளைக் கண் காணிக்க பல்வேறு வகைகளிலான பார்வையாளர்கள் நியமிக்கப்படுவர். பொதுப் பார்வையாளர்கள், வேட்பாளர்களின் செலவுகளைக் கண்காணிக்கும் பார்வையாளர்கள், நுண்பார்வையாளர்கள் என மாவட்டம்தோறும் அதிகாரிகள் நியமிக்கப்படுவர்.

வேட்புமனுத் தாக்கல், மனுக்கள் பரிசீலனையில் தொடங்கி அனைத்து நடவடிக்கைகளும் விடியோ படம் எடுக்கப்படும். வாக்குகள் பதிவு செய்யப்பட்ட மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள், முக்கியமான பொதுக் கூட்டங்கள், தபால் வாக்குகளை அனுப்பும் நடவடிக்கை, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் முதல் கட்டப் பரிசோதனை உள்ளிட்ட அனைத்தும் விடியோ மூலம் படம் எடுக்கப்படும்.

பதற்றமானவை எனக் கருதப்படும் வாக்குச்சாவடிகள், வாக்கு எண்ணிக்கை மையங்கள் டிஜிட்டல்கமராமூலம்படம்பிடிக்கப்படும். -இவ்வாறு அவர் தெரிவித்தார்.



சிவராத்திரி தினமான நேற்று முன்தினம் பெங்களூரிலுள்ள 65 அடி உயர சிவனின் சிலையை பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று தரிசித்தனர்.

# இராமேஸ்வரம் மீனவர்களின் வலைகளை இலங்கை மீனவர்கள் சேதப்படுத்தினராம்

## விசாரிக்கிறது தமிழகப் பொலிஸ்

இராமேஸ்வரம், மார்ச் 4

தலைமன்னார் கடற்பகுதியில் இரட்டைமடி மீன்பிடியில் ஈடுபட்ட இராமேஸ்வரம் மீனவர்களின் வலைகளை, இலங்கை மீனவர்கள் வெட்டிச் சேதப்படுத்தினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாகத் தமிழக நாளேடுகளில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இராமேஸ்வரத்திலிருந்து கடந்த திங்களன்று பல படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள், தலைமன்னார் கடற்பகுதியில் தடைசெய்யப்பட்ட இரட்டைமடி வலையைப் பயன்படுத்தி, மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அங்கு வந்த இலங்கை மீனவர்கள் இராமேஸ்வரம் மீனவர்களின் மீன்பிடி வலைகளை வெட்டிக் கடலில் வீசினர்.

மீனவர்கள் ஒன்று சேர்ந்து இலங்கை மீனவர்களை விரட்டினர். சில படகுகளில் மட்டும் வந்த இலங்கை மீனவர்கள், தலைமன்னார் கரையில் இருந்த மீனவர்களுக்கு தகவல் கொடுத்து வரவழைத்தனர்.

இதைத்தொடர்ந்து, இலங்கை மீனவர்கள் அதிகளவில் திரண்டு வந்ததால், வலைகளைப் பறிகொடுத்த இராமேஸ்வரம் மீனவர்கள் படகுகளுடன் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை கரை சேர்ந்தனர்.

இலங்கை மீனவர்களால் பல லட்சம் ரூபா மதிப்புள்ள மீன்பிடி வலைகள் சேதப்படுத்தப்பட்ட போதும், பாதிக்கப்பட்ட மீனவர்கள் இலங்கைக் கடற்பகுதியில் நடந்த சம்பவம் குறித்து முறைப்பாடு தெரிவிக்கவில்லை.

இலங்கை மீனவர்களின் வலைகளைச் சேதப்படுத்தும் வகையில் இரட்டைமடி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடித்ததால், பலமுறை எச்சரிக்கை செய்த இலங்கை மீனவர்கள் நேற்றுமுன்தினம் வலைகளைச் சேதப்படுத்தினர் என கரை திரும்பிய மற்ற மீனவர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து புலனாய்வுத் துறையினர் விசாரித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# தி.மு.க. - காங்கிரஸ் உடன்பாடு ஏற்படும்

## திருமாவளவன் நம்பிக்கை

சென்னை, மார்ச் 4

தி.மு.க.-காங்கிரஸ் தொகுதி உடன்பாடு ஏற்படாவிட்டால் நீங்கள் கூடுதல் இடங்களைக் கேட்பீர்களா? என்று பத்திரிகையாளர்களின் கேள்விக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் தி.மு.க.- காங்கிரஸ் தொகுதி உடன்பாடு நிச்சயமாக ஏற்படும் என்று நம்பிக்கை இருக்கிறது என்று தெரிவித்துள்ளார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் சென்னை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் அருகே நேற்றுக் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தின் போது பத்திரிகையாளர்களிடம் பேட்டி அளித்த அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திண்டுக்கல் படலிபுதூர், கடலூர் மாவட்டம், கம்பலி மேடு ஆகிய பகுதிகளில் நடந்த வன்முறைகளைக் கண்டித்தும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும் இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

"திண்டுக்கல், கடலூர் மாவட்டங்களில் வன்முறைக் கும்பலால் வாகனங்கள், வீடுகள் சூறையாடப்பட்டுள்ளன. தலித்துகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன. இந்த சம்பவத்தில் இதுவரை யார் மீதும் நடவடிக்கை எடுக்கவில்லை. வன்முறைக்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். படுகொலை செய்யப்பட்ட சுப்பிரமணியன் குடும்பத்துக்கு ரூ.5 லட்சம் நஷ்டஈடு வழங்க வேண்டும்" என்று திருமாவளவன் கூறினார்.

# மேற்கு வங்காள சட்டசபைக்கு மம்தா போட்டியிட மாட்டார்

மேற்கு வங்காள சட்டசபைத் தேர்தலில் தான் போட்டியிடப் போவது இல்லை என்றும் தேர்தல் பிரசாரம் மட்டும் செய்யப்போவதாகவும் திரிணா முல் காங்கிரஸ் தலைவர் மம்தா பனர்ஜி அறிவித்து உள்ளார்.

மேற்கு வங்காள மாநில சட்டசபைக்கு ஏப்ரல் 18 ஆம் திகதி தொடங்கி மே 10 ஆம் திகதி வரை 6 கட்டங்களாகத் தேர்தல் நடைபெறுகிறது.

சட்டசபைத் தேர்தலுக்கான பணிகளில் மம்தா பனர்ஜியின் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். கட்சியின் வேட்பாளர் பட்டியல் தயாராக இருப்பதாக மம்தா பனர்ஜி தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் நேற்றுப் புதன்கிழமை மம்தா பனர்ஜியை கல்கத்தாவில் உள்ள அவரது இல்லத்தில் சந்தித்து, சட்டசபைத் தேர்தலில் போட்டியிடுவீர்களா? என்று செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் கூறியதாவது:

தேர்தலில் நான் போட்டியிட மாட்டேன். பிரசாரத்தில் மட்டும் முழுமையாகக் கவனம் செலுத்துவேன். ரயில்வே அமைச்சராக இருந்தபடியே எனது கடமையை நிறைவேற்றுவேன் என்றார்.

சட்டசபைத் தேர்தலில் திரிணாமுல் காங்கிரஸ் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தால் உங்கள் நிலை என்னவாக இருக்கும்? என்று பத்திரிகையாளர்கள் கேட்டபோது:

6 மாதங்களுக்குள் சட்டசபைத் தொகுதியில் போட்டியிட்டு சட்டசபை உறுப்பினராக முடியும் என்றும் அதற்கு அரசியல் சட்டத்தில் இடம் உள்ளது என்றும் மம்தா பனர்ஜி பதில் அளித்தார்.

# தமிழகத்தில் நடக்கின்ற அவலங்களை தோலுரித்துக்காட்ட 'சட்டப்படி குற்றம்'

## இயக்குநர் சந்திரசேகரனின் திரைப்படம்

சென்னை, மார்ச் 4

தமிழகத்தில் நடக்கும் அவலங்களை மையமாகக் கொண்டு எடுக்கப்படும் படம்தான் 'சட்டப்படி' குற்றம் - என்று நடிகர் விஜய்யின் தந்தையும் இயக்குநருமான எஸ்.ஏ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

'சட்டப்படி குற்றம்' என்ற புதிய படத்தின் கதை, திரைக்கதையை எஸ்.ஏ.சந்திரசேகரன் எழுதி, இயக்கி வருகிறார்.

இந்தப் படத்தில் சீமான் மற்றும் சத்தியராஜ் நடித்துள்ளனர். இந்தப் படம், இம்மாதம் திரைக்கு வரவிருக்கிறது.

இது குறித்து செய்தியாளர்களிடம் சென்னையில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை அவர் கூறியவை வருமாறு -

இன்று தமிழ்நாட்டில் நடைபெறுகின்ற சில விடயங்களை மனதில் வைத்து, இந்தப் படத்தில் காட்சிகளை அமைத்திருக்கிறேன். சமூக அவலங்கள், மதவாதிகளின் அட்டூழியங்கள், அரசியலில் நடக்கும் கேவலங்கள் ஆகியவைதான் இந்தப் படத்தின் கரு.

இதனால் இந்தப் படம் அ.தி.மு.கவுக்கு ஆதரவானது என நினைத்துவிட வேண்டாம். நான் பொதுவானவன். யாருக்கும் ஆதரவாகப் படம்எடுக்கவில்லை. எம்.ஜி. ஆர். முதல்வராக இருந்த போது, சட்ட நகலை எரித்ததற்காக கலைஞரைக் கைதுசெய்தார்கள். அதற்கு எதிராகத்தான் 'நீதிக்குத் தண்டனை' படத்தை எடுத்தேன்.

அதேபோல்தான் இன்று நாட்டில் நடக்கும் அவலங்களைத் தோலுரித்துக் காட்டும் வகையில் 'சட்டப்படி குற்றம்' படத்தை எடுக்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி கோரல்கள்

**இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு**
**பெருந்தெருக்கள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை**

## யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வீதிகள், புனர் நிர்மாணம் செய்வதற்கான கேள்வி கோரல் அறிவித்தல்

### பெருந்தெருக்கள் அமைச்சின் நிதியின் மூலம் உள்ளூர் போட்டிக்குரிய கூறுவிலை கோரல்கள்

01. பின்வரும் புனர் நிர்மாண வேலைகளுக்கான மூடிய கேள்வி கோரல்களை பிரதம பொறியியலாளர், கேள்விச் சபையின் சார்பாக பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் பெற்றுக் கொள்வார்.

| வேலை | கேள்வி பாதுகாப்பு பணம் | ஒப்பந்தகாரர் தரம் |
|---|---|---|
| 1. மாதனை ஸ்ரீ காளியம்மன் கோவில் வீதி புனரமைப்பு - கட்டம் I | 16,000.00 | C 8 |
| 2. மாதனை ஸ்ரீ காளியம்மன் கோவில் வீதி புனரமைப்பு - கட்டம் II | 15,000.00 | C 8 |
| 3. மாதனை ஸ்ரீ காளியம்மன் கோவில் வீதி புனரமைப்பு - கட்டம் III | 30,000.00 | C 7 |
| 4. மாதனை ஸ்ரீ காளியம்மன் கோவில் வீதி புனரமைப்பு - கட்டம் IV | 14,000.00 | C 8 |
| 5. மாதனை ஸ்ரீ காளியம்மன் கோவில் வீதி புனரமைப்பு - கட்டம் V | 30,000.00 | C 7 |
| 6. மாதனை ஸ்ரீ காளியம்மன் கோவில் வீதி புனரமைப்பு - கட்டம் VI | 30,000.00 | C 7 |

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை 18.03.2011 அன்று பிற்பகல் 2.00 மணியுடன் முடிவடையும். பிற்பகல் 2.30 மணியளவில் கேள்விப்பத்திரங்கள் பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் திறக்கப்படும்.

கேள்விப்பத்திரங்களை தயாரிப்பதற்குரிய படிவங்களை பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம் காரியாலயத்தில் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

கேள்விப்பத்திர ஆவணங்கள் 07.03.2011 தொடக்கம் 17.03.2011 வரை மீள் அளிக்க முடியாத வைப்புத்தொகையான 750/- + பெறுமதி சேர் வரி 12% செலுத்திப் பெற வேண்டும்.

02. தகுதி வாய்ந்த கேள்வி கோரல்கள் கோருபவர்கள் பின்வரும் தகைமைப் பிரமாணங்களுக்கு இணங்குதல் வேண்டும்.
   அ) கேள்வி கோரல் கோருபவர் தன்னை இக்ரட் (ICTAD) நிறுவனத்தில் வீதி நிர்மாணித்தல் துறையில் மேற்குறிப்பிட்ட தரத்திற்கமைய பதிவு செய்திருத்தல் வேண்டும்.
03. கேள்வி கோரல் ஆவணங்கள் பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம் அலுவலகத்தில் இலவசமாக பார்வையிட முடியும்.
04. முன் கேள்வி கோரல் கூட்டம் 21.03.2011 அன்று முற்பகல் 10 மணிக்கு பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாண அலுவலகத்தில் நடைபெறும்.
05. கேள்விப்பத்திர ஆவணங்கள் கேள்வி கோரல் முடிவு திகதியில் இருந்து 120 கலண்டர் நாள்கள் வரை செல்லுபடியாக இருக்கும்.
06. மேலே குறிப்பிடப்பட்ட கேள்விப்பாதுகாப்பு பணத்தொகை அவற்றுக்குரிய பாதுகாப்பு பத்திரம் ஒவ்வொரு கேள்விப்பத்திர ஆவணத்துடன் இணைத்திருத்தல் வேண்டும். ஏற்றுக்கொள்ளக் கூடிய பாதுகாப்பு பத்திரம் இல்லாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
07. மூடி ஒட்டப்பட்ட கேள்விப்பத்திர ஆவணங்கள் பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணக் காரியாலயத்தில் மேற்குறிப்பிட்ட முடிவு காலத்துக்கு முன் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.
08. கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் குறிப்பிடப்பட்ட முடிவுறும் நேரத்தின் பின் உடனடியாக பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாண அலுவலகத்தில் திறந்து பார்க்கப்படும்.
   கேள்வி கோரல் கோருபவர்கள் அல்லது அவரது பிரதிநிதிகள் கேள்விப் பத்திரம் திறக்கும் நேரம் பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
09. மேலதிக விவரங்களை பின்வரும் அலுவலக தொலைபேசி இலக்கத்துடன் தயவு செய்து தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளவும்.

| அலுவலகம் | தொலைபேசி இலக்கம் |
|---|---|
| பிரதம பொறியியலாளர்,<br>வீதி அபிவிருத்தி அதிகார சபை,<br>யாழ்ப்பாணம். | 021 - 222 2968. |

பிரதம பொறியியலாளர்,
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

(32-24-25-22)

## கல்விக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 04

இந்தியா'வேல்ஸ்' பல்கலைக்கழகத்தின் கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான அனுமதியைப்பெறுவதற்கான கல்விக் கருத்தரங்கு நாளை மறுதினம் 6ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.30 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள 'கிறீன் கிறாஸ்' ஹொட்டலில் நடைபெறவுள்ளது.

இந்தியத் தூதரகத்தின் அதிகாரியொருவரால் ஆரம்பித்து வைக்கப் படவுள்ள இந்தக் கரத்தரங்கில் வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள்கருத்துக்களை வழங்கவுள்ளனர். இது தொடர்பான மேலதிக விவரங்களுக்கு க. ராஜ்குமார், செல்வசிங்கம் கென்சல்டன், காலி வீதி, கொழும்பு - 06 எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளன.

## இளைஞரை பாம்பு தீண்டியது

நெல் அறுவடையில் ஈடுபட்ட இளைஞர் பாம்பினால் கடியுண்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் பூநகரி பள்ளிக் குடாவில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த தேவராசா புஷ்பராசா (வயது 20) என்பவர் பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்

(ம-207)

## மொழிவிருத்திச் செயலமர்வு

தென்மராட்சி, மார்ச் 04

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் தரம்1,2 வகுப்புகளின் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான மொழி விருத்திச் செயலமர்வுகள் நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளன.

(ம-207)

# CARS FOR SALE



TOYOTA BELTA
**Un Registered - 2007 MODEL**
1300cc, Full Option, Auto, Perl White, TV, DVD, MP3, Winke Mirror, Reverse Camera, Navigater, Only 19000Km Done, 5 Grade,



TOYOTA VITZ
**Registered - 2007 MODEL (NPKK-XXXX )**
1000cc, Full Option, Auto, Dark Blue, Winke Mirror, 4.5 Grade, Only 23000Km Done,



NISSAN CEFIRO
**Registered - 2000 MODEL (NPHP-XXXX )**
2000cc, Full Option Silver Colour, Auto, Leather Seats, Mint Condition

**Vasee 0777732169**

# PRINCESS OF WALES NURSING HOME
(Jaffna)

132, Kokulam Kachcheri Nallur Road, Jaffna, Srilanka. Phone +94(21)2226179, +94(21)2226180
princesshosp@gmail.com. Rgd No Nal/DS/774

## அமைதியான சூழலில் மகத்தான வைத்திய சேவையும் முதியோர் பராமரிப்பு இல்லமும்

★ விசேடமாக மகப்பேற்று (IVF,Programme) (Dr.Davi Selva rajah) சம்பந்தமான ஆலோசனைகளும், சிகிச்சைகளும், நீரிழிவு நோய்க்கான ஆலோசனைகளும், சிகிச்சைகளும் வழங்க மிக விரைவில் இந்தியாவில் இருந்து வைத்திய நிபு ணர்கள் வருகை தரவுள்ளார்கள். உங்கள் பெயர்களை முன் கூட்டியே பதிவு செய்துகொள்ளுங்கள்.

★ வெளிநோயாளர் பிரிவு (OPD) காலை 6 மணி தொடக்கம் இரவு 9 மணிவரை வைத்தியர்களால் பார்வையிடப்படும்.
★ விசேட வைத்திய நிபுணர்களின் சேவையும் சிகிச்சையும்
★ நவீன ஸ்கானிங்(Scan) வசதி, ECG
★ சகலவிதமான இரத்த, சல பரிசோதனைகள்

**05.03.2011 சனிக்கிழமை**
**காலை 6.30தொடக்கம் 10.30 மணிவரை நீரிழிவு இரத்த பரிசோதனை இலவசமாக செய்து கொடுக்கப்படும்.**



**Medical Director**
Princess of Wales Hospital
132, Kachcheri Nallur Road, Jaffna.
(22-25)

எங்கள் சேவை உங்கள் ஆரோக்கியம்

# கண்ணீர் அஞ்சலி



யாழ்.மாவட்ட முகாமையாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற

**எஸ்.சாந்தலிங்கம்**

அவர்கள் காலமானதையிட்டு அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

மாவட்ட முகாமையாளரும் ஊழியர்களும்,
*தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை,*
*யாழ்ப்பாணம்.*

(995)(31)

# முதலாம் ஆண்டு நினைவுகளில்...



## அமரர் சண்முகராசா சந்திரமோகன்

திதி: 04 . 03 2010

அன்னை மடியில்
02.01.1980
ஆண்டவன் அடியில்
13.02.2010

வானத்துக் கல்லாய்
வந்து வீழ்ந்ததே - செல்
பட்டகாயம் தெரியாமல்
மாயமாக மாறியதேன் - சொல்
உன் அன்பின் பிடியில் அணைத்த
ஈருயிரைத் துடிக்கவிட்டு....
தூரமேன் போனாய் - நில்
எந்நாளும் உன்னுடன்
இந்நாளில் நினைவுடன்
உன் ஆத்மா சாந்திக்காக
அன்பின் உறவுகள்....

மனைவி - கேமா, மகன் - சுபி
மைத்துனர்மார் - செல்வகுமார் (சுவிஸ்),
லலித் (இந்தியா)
செல்வராசா குடும்பம், சண்முகராசா குடும்பம்.
அன்னதாரகை, மந்துவில்,
புதுக்குடியிருப்பு.

(32-22-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மத்தி - சென்.ஜோன்ஸ் இடையே உள்ளக விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச்.4

சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ். மத்திய கல்லூரிக்கும் இடையிலான உள்ளக விளையாட்டுப் போட்டி கடந்த திங்கட்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் எஸ்.ஓங்காரமூர்த்தியினால் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

உள்ளக விளையாட்டுப் போட்டியை ஆரம்பித்து வைத்து மத்திய கல்லூரி அதிபர் உரையாற்றுகையில்:

இரண்டு கல்லூரிகளுக்கு இடையிலான நட்புறவை பலப்படுத்தும் முகமாகவும் யாழ்.மாவட்டத்தில் உள்ளக விளையாட்டினை மேம்படுத்தும் முகமாகவும் இரு கல்லூரிகளுக்கு இடையே இந்த உள்ளக விளையாட்டுப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது - என்றார்.

இனி வரும் காலங்களில் இரு கல்லூரிகளுக்கும் இடையே போட்டிகள் தொடர்ந்து இடம் பெறும் என்று கூறினார். (ம-23)



யாழ்.மத்திய கல்லூரி - சென். ஜோன்ஸ் கல்லூரி இடையே கடந்த திங்கட்கிழமை முதன் முறையாக உள்ளக விளையாட்டுப் போட்டி ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது. அதன் முதற்கட்டமாக இடம்பெற்ற கரம் போட்டியில் இரு கல்லூரி வீரர்களும். (த-23)

# மெய்வன்மைச் சங்கத்தின் பரீட்சையில் 15 பேர் சித்தி

இலங்கை மெய்வன்மைச் சங்கம் நடத்திய இலங்கை மெய்வன்மை தொழில்நுட்ப அலுவலர்களுக்கான போட்டிப் பரீட்சை தரம் 4 இல் யாழ். மாவட்டத்தில் இருந்து தோற்றியவர்களில் 15 பேர் சித்தி அடைந்துள்ளார்கள். இந்தப் பரீட்சைக்கு 55 பேர் தோற்றிய போதிலும் 15 பேர் மட்டுமே சித்தி அடைந்துள்ளனர்.


பரீட்சையில் சித்தி அடைந்தவர்களின் விவரம் வருமாறு: ஆர்.நித்திலநாயகம்- 81 புள்ளி, த.செல்வக்குமரன்-81 புள்ளி, டி.பயிதா -78 புள்ளி, எஸ்.நிஷாந்தன்-77 புள்ளி, ஆர்.டினேஸ்குமார்-77 புள்ளி, கே.துஷிதரன்-74 புள்ளி, என்.ரவீந்திரன்-74 புள்ளி, கே.கீர்த்திகா-72 புள்ளி, எஸ்.வசந்தகுமார்-71 புள்ளி, சு.திவாகர்-70புள்ளி, எஸ்.இந்திரகுமார்- 68 புள்ளி, எஸ்.பானுஜா-66 புள்ளி, ஆர்.இராஜகாந்தன்-66 புள்ளிகள், எஸ்.சிவகாந்-65 புள்ளி, கே.கஜேந்திரன் -65புள்ளி. (ம-86)

## இன்றைய ஆட்டங்கள்

இளவாலை யங்ஹென்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகம் வலிகாமம் யாழ்ப்பாணம் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணிகளுக்கு இடையே நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ள போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

✱ மாதகல் சென்லூட்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் வடமராட்சி வல்வை விளையாட்டுக்கழகம்.

✱ அளவெட்டி விநாயகர் விளையாட்டுக்கழகம் எதிர் வடமராட்சி கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம். (ம-86)



யாழ். உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம் வெற்றிபெற்ற மாணவனுக்கு பரிசினை வழங்கினார். (313)

# மெய்வன்மைப் போட்டிகள்

பருத்தித்துறை, மார்ச் 4

செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் சி.ஜெயந்திரன் தலைமையில் நடைபெறும் இப்போட்டிக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் ந. திருலிங்கநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக தாளையடி பங்குத்தந்தை வண பிதா ஜேம்ஸ்நாதன் அடிகளார் கலந்து கொள்ளவுள்ளார். கௌரவ விருந்தினர்களாக மருதங்கேணி கோட்டக் கல்வி அலுவலர் க. பொன்னையாவும், நாகர்கோயில் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி கேணல் சு.ரத்னாயக்காவும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வடமராட்சி அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரனும் கலந்து கொள்வர். (ம-190)

✱✱✱

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ். இருபாலை சீ.சீ.த.க. பாடசாலையின் இல்லமெய்வன்மைப் பேட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி கமலாவதி சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்தப் போட்டிக்கு பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்களஸ். தேவானந்தாவும், சிறப்பு விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் மருதலிங்கம் பிரதீபனும் கலந்துகொள்வர். (ற)

✱✱✱

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ். நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் எஸ். புஸ்பராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் முன்னாள் அதிபர் சே.வடிவேல் சிறப்பு விருந்தினராக ந.ரவிச்குமார் ஆகியோர் கலந்துகொள்வர். (ம-311)

✱✱✱

யாழ்ப்பாணம், மார்ச் 4

கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் கு. சண்முககுமார் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரும், சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் மூ.சாந்தசீலனும் கலந்துகொள்வர். (ம-311)

✱✱✱

யாழ்ப்பாணம், மார்ச் 4

திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை அதிபர் ந. விஜயசுந்தரம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தொழில் அதிபர் ஈ.எஸ்.பி.நாகரட்ணமும் சிறப்பு விருந்தினராக யாழ். கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் திருமதி நாகசக்தி கணேசநாதனும் கலந்துகொள்வர். (ம-311)

✱✱✱

வலி.வடக்கு,மார்ச்.4

கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் க.குகானந்தராசா தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசாவும் சிறப்பு விருந்தினர்களாக கரைச்சி கல்விக் கோட்ட கல்விப் பணிப்பாளர் அ.அமிர்தலிங்கம், பூநகரி கல்விக்கோட்ட கல்விப் பணிப்பாளர் சு.தர்மரெட்ணம் பழைய மாணவனும் சுகாதார திணைக்கள அலுவலருமான ச.கடம்பேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர். (ம-86)

✱✱✱

யாழ்ப்பாணம், மார்ச்.4

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் சி.மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்வார். (9-311)

# வெற்றியீட்டிய அணிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 4

சங்கானை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் இடம்பெற்ற கிரிக்கெட் போட்டிகளின் சிலவற்றின் முடிவுகள் வருமாறு

**கிரிக்கெட் - ஆண்கள் -** விக்டோறியன்ஸ் விளையாட்டுக் கழகம்(முதலாமிடம்),கலைநகர்விளையாட்டுக்கழகம் (இரண்டாமிடம்),

**கிரிக்கெட் - பெண்கள் -** விக்டோறியன்ஸ் விளையாட்டுக்கழகம் (முதலாமிடம்), விக்டோறி விளையாட்டுக்கழகம் (இராண்டாமிடம்).

✱✱✱

வேலணை பிரதேச செயலகபிரிவுக்குஉட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்குஇடையே நடைபெற்று முடிந்த விளையாட்டுப்போட்டிகளில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு -

**உதைபந்தாட்டம் - பெண்கள் -** துறையூர் ஐயனார் வி.க. (முதலாமிடம்), புங்குடுதீவு ஈஸ்ரன் வி.க. (இரண்டாமிடம்),

**துடுப்பாட்டம் - ஆண்கள் -** செட்டிப்புலம் ஐயனார் வி.க. (முதலாமிடம்),புங்குடுதீவுசண்ஸ்ரார் வி.க. (இரண்டாமிடம்),

**கரப்பந்தாட்டம் - ஆண்கள் -** நயினாதீவு அண்ணா வி.க.- (முதலாமிடம்), செட்டிப்புலம் ஐயனார் வி.க. - (இரண்டாமிடம்).

**வலைப்பந்தாட்டம் - பெண்கள் -** புங்குடுதீவு நண்பர்கள் வி.க. (முதலாமிடம்), துறையூர் ஐயனார் வி.க. (இரண்டாமிடம்).

**துடுப்பாட்டம் - பெண்கள் -** புங்குடுதீவு பாரதி வி.க. (முதலாமிடம்), புங்குடுதீவு நசேரத்து வி.க. - (இரண்டாமிடம்).

**எல்லே - ஆண்கள் -** புங்குடுதீவு நண்பர்கள் வி.க. (முதலாமிடம்), நயினாதீவு அண்ணா வி.க. - (இரண்டாமிடம்).

**எல்லே - பெண்கள் -** புங்குடுதீவு - சண்ஸ்ரார் வி.க. (முதலாமிடம்), துறையூர் ஐயனார் வி.க. - (இரண்டாமிடம்).



நல்லூர் தெற்கு விக்னேஸ்வர வித்தியாலய வருடாந்த மெய்வன்மைப் போட்டியில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட திருமதி மிமலாதேவி விமலநாதன் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவி ஒருவருக்கு வெற்றிக்கிண்ணம் வழங்குகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்பாதுகாப்பு வலயங்களில் குடியமர்வதற்கு நீதிமன்ற வழக்குத் தாக்கல் கை கொடுக்காது

## யாழ். அரச அதிபர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், மார்ச் 4

இராணுவத்தினரின் உயர்பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களால் உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நாம் யதார்த்தமாகச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். வழக்குத்தாக்கல் செய்வது என்பது உடனடி மீள் குடியமர்வுக்குக் கை கொடுக்காது.

யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் இவ்வாறு தெரிவித்தார்.

இராணுவத்தினரின் உயர் பாதுகாப்பு வலயங்களான அரியாலை, கொழும்புத்துறைப் பகுதிகளில் மக்களை மீளக் குடியமர்த்துவதுக்கான ஆரம்ப நிகழ்வு நேற்று வியாழக்கிழமை பூம்புகாரில் இடம்பெற்றது. இதில் உரையாற்றும்போதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

உயர்பாதுகாப்பு வலயங்களில் உடனடியாக மீளக்குடியமர்வதற்கு நீதிமன்ற வழக்குத் தாக்கல் கை கொடுக்காது. அவ்வாறு வழக்குத் தாக்கல் செய்து காலத்தை இழுத்தடிப்பதை விட உயர்பாதுகாப்பு வலயங்களுடன் தொடர்புடைய பாதுகாப்புப் படைத் தரப்பினரிடம் குறைகளை, பிரச்சினைகளை எடுத்துக் கூறினால் உடனடியான மீளக் குடியமர்வு சாத்தியமாகும்.

நாம் பாதுகாப்புப் படையினர், மிதிவெடி அகற்றும் பிரிவினருடன் ஒன்றிணைந்து செயற்பட்டதன் மூலமே மக்களாகிய நீங்கள் இன்று மீளக்குடியமர முடிகிறது.

மீளக்குடியமரும் உங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் அத்தியாவசியு சேவைகள், உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுத்தர அரச, அரச சார் பற்ற நிறுவனங்களுடன் கலந்துரையாடி வருகிறேன். அரச சார் பற்ற நிறுவனங்கள் இந்தப் பகுதிகளில் கள ஆய்வை மேற்கொண்டு உதவித் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளன. அவை கள ஆய்வை மேற்கொள்வதற்கான அனுமதியை வழங்கியுள்ளோம்.

மீளக்குடியமர்ந்த மக்களுக்கான கொடுப்பனவை உங்களுக்குப் பெற்றுத்தர முயற்சி எடுத்துள்ளேன். வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் மூலம் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கமுடியும். யாழ். மாவட்டம் முழுவதுமுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த அந்தத் திட்டம் 1500 மில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம், வடமராட்சிப் பகுதியில் ஒன்றரை மாதங்களில் 15 ஆயிரம் மக்களை மீளக் குடியமர்த்த முடிந்தது - என்றார்.

(த-14-135)

**விற்பனைக்குண்டு**

நல்ல நிலையிலுள்ள GS 125 Japan Modle Npvv தொடரிலக்கமுடைய மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

தொடர்பு - 0750413161.

**New Medi Care Hospital**

காது, மூக்கு, தொண்டை சத்திரசிகிச்சை நிபுணர்

Dr. B. திருமாறன் (E.N.T. Surgeon)

ஒன்றுவிட்ட வியாழன் பி.ப. 5.30 மணிக்கு நியூ மெடிகெயர் வைத்தியசாலை, சாவகச்சேரிக்கு வருகை தருவார். பதிவுகளை முற்கூட்டியே மேற்கொள்ளவும்.

இல. 32, கச்சாய் றோட், சாவகச்சேரி.

T.P. : 021 3734505, 021 4920949.

# வன்னி மக்களும் புத்தளம் அகதிகளும் வாக்களிக்க வசதி செய்யப்படவேண்டும்

## கரு ஜெயசூரிய தெரிவிப்பு

வன்னி மக்களும் புத்தளத்தில் உள்ள அகதிகளும் இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வாக்களிப்பதற்குத் தேர்தல் ஆணையாளர் பொருத்தமான ஏற்பாடுகளைச் செய்துகொடுக்க வேண்டும் என்று ஐ.தே.கவின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய நேற்றுக் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

நாம் அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று வெற்றிகரமாகக் கூட்டங்களை நடத்தியுள்ளோம். மக்கள் தினமும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்தவண்ணம் உள்ளனர். இதற்கு முன்னர் ஐக்கிய தேசியக்கட்சியின் கொள்கையை ஏற்காதவர்கள் இப்போது கட்சியின் கொள்கையை ஏற்று வருகின்றனர்.

அரச வேட்பாளர்களிடையே காணப்படுகின்ற மோதல்கள் எமது வேட்பாளர்களிடையே இல்லை. எமது வேட்பாளர்கள் வெற்றியைக் குறிவைத்து மிகவும் ஒற்றுமையாகச் செயற்பட்டு வருகின்றனர்.

தேர்தல் சட்டங்கள் அப்பட்டமாக மீறப்படுகின்றன என்று தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் அமைப்புகளான பவ்ரல் மற்றும் கபே போன்றவை கூறியுள்ளன. இது தொடர்பாகத் தேர்தல்கள் ஆணையாளர் கவனம் செலுத்த வேண்டும்.

நாம் தேர்தல் பிரசாரங்களுக்காக எங்கு சென்றாலும் அங்குள்ள மக்கள் சரத் பொன்சேகாவுக்கு இழைக்கப்பட்ட கொடுமை பற்றியும் வாழ்க்கைச் செலவின அதிகரிப்பு பற்றியுமே பேசுகின்றனர். வாழ்க்கைச் செலவின அதிகரிப்பைச் சுமக்க முடியாமல் மக்கள் துன்பப்படும் இச்சந்தர்ப்பத்தில் சமையல் எரிவாயுவின் விலையும் மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மக்களைப் பற்றிய சிந்தனையும் கவலையும் இல்லாமல் செயற்படும் அரசுக்கு மக்கள் இத் தேர்தலில் நல்ல பாடம் புகட்டுவர். இத் தேர்தல் நீதியாகவும், சுதந்திரமாகவும் இடம்பெற அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

வன்னி மற்றும் புத்தளத்தில் உள்ள அகதிகள் வாக்களிப்பதற்கும் தேர்தல் ஆணையாளர் வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் - என்றார். (த-சி)

## மரண அறிவித்தல்கள்



### திருமதி குமாரத்தியானம் திருலோசனி

புறூடி லேன், அரியாலையைப் பிறப்பிடமாகவும், A.V. றோட், 3ஆம் ஒழுங்கை, கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரத்தியானம் திருலோசனி (திரு) நேற்று முன்தினம் 02.03.2011 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - யோகம்மா தம்பதியரின் அன்பு மகளும், குமாரசாமி - யோகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற குமாரத்தியானத்தின் (ஓய்வு பெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்), அன்பு மனைவியும் சர்மிளி, அரங்கன் (பிராந்திய முகாமையாளர் C.F.T.) கோகுலன் (NEHRP), அம்பா ஆகியோரின் பாசமிகு தாயும் கீர்த்தனா, குலேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான சிவயோகீஸ்வரன், உமாமகேஸ்வரி, வரதலட்சுமி மற்றும் யோகானந்தன், கணேசானந்தன், திரிபுரச்சந்திரன், பத்மலோசனி, கிருபாகரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான யோகநாதன், நடராசா, விமலச்சந்திரன் மற்றும் யோகேஸ்வரி, சந்திரகுமார், நவசோதி, தில்லைராஜா, யோகாதேவி, வைற்றஸ், இராசலெட்சுமி, ஸ்ரீயமுனாதேவி, கலாதேவி, மகேந்திரராசா, வசந்தகுமாரி ஆகியோரின் மைத்துனியும் ஸ்ரீ சாம்பவி, நிதுஷனன், தீபிகா ஆகியோரின் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை சனிக்கிழமை (05.03.2011) முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

A.V. றோட், 3ஆம் ஒழுங்கை,
கொழும்புத்துறை
(32-25-24)
தகவல்:
குடும்பத்தினர்.



### கந்தையா அருளானந்தம்

இணுவிலைப் பிறப்பிடமாகவும், மாரியம்மன் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா அருளானந்தம் நேற்று (03.03.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் மூத்தமகனும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - காசிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற அழகம்மாவின் அன்புக் கணவரும், கிருஸ்ணவேணி (மருந்தாளர், மார்பு நோய் சிகிச்சை நிலையம்), யோகவேணி (தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), கோமதியன் (நெஸ்லே கொம்பனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுரேந்திரன் (மருந்தாளர், யாழ். போதனா வைத்தியசாலை), இரவீந்திரன் (Book Lab), சமீனா ஆகியோரின் அன்பு மாமனும் சாமந்தி, ஆவர்த்தனா, ஆதித்தியன் ஆகியோரின் பாசமிகுப் பேரனும் பரமேஸ்வரி, ஞானசௌந்தரி, விவேகானந்தன், காலஞ்சென்ற தர்மானந்தன் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான நடராசா, தட்சணாமூர்த்தி மற்றும் இந்திரா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2011) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12 மணிக்கு செம்மணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

15/25, மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி.
(32-25-27)
தகவல்:
குடும்பத்தினர்.

**தவறிவிட்டது**

கும்பிளாவளை அளவெட்டி இராசகாரியம் உதயகுமார் (820613295V) என்னும் பெயர் முகவரியுடைய தே.அ. அட்டை சுன்னாகத்துக்கும் கோண்டாவிலுக்குமிடையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொண்டு ஒப்படைத்து தவவும்.

தொடர்புகளுக்கு - பிரசன்னா பந்தல், கே.கே.எஸ். வீதி, கோண்டாவில்.
தொ.பே. 0778696121

**விற்பனையாளர் தேவை**

யாழ். நகரில் இயங்கும் புடைவை நிறுவனத்துக்கு பெண் விற்பனையாளர் தேவை மாநகரசபைக்கு உற்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு - 0750386004

**வீட்டுடன் காணி தேவை**

வீட்டுடன் கூடிய காணி வாடகைக்குத் தேவை.
இடம்: திருநெல்வேலி, பலாலி வீதிக்கு அண்மையில் அமைந்திருத்தல் நல்லது.

தொடர்பு: Ms. V. Thanishka
email: trade@biopowerlanka.com

## மரண அறிவித்தல்



### ஞானம் பிலிப்பு

பருத்தித்துறை, சாரையடி புனித வேளாங்கன்னி மாதா ஆலயத்தைச் சேர்ந்த ஞானம் பிலிப்பு நேற்று (03.03.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் மாகிறேற், செல்வராசத்தின் அன்புக் கணவரும் விக்ரோறியா, பிலோமினா, யேசுதாஸ் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் டேவிற் (H.N.B.), மேரிதிரேசா (சுவிஸ்), யேசுதாஸ் ஆகியோரின் தந்தையும் ஜோர்ஜ் அன்ரன் சிறீதர் (சுவிஸ்), சுதர்சினி (P.P.D.C.S.) ஆகியோரின் அன்பு மாமனும் கெபின், மிலேனி, மிதுஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி நிகழ்வுக்காக அவரது இல்லத்திலிருந்து இன்று (04.03.2011) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அன்னை வேளாங்கன்னி ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்பட்டு, நெல்லியடி கீரிப்பல்லி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாரையடி,
பருத்தித்துறை.
0041622123760, 0777117712.
(32-25-27)
தகவல்:
டேவிற் (மகன்)

## 2ஆம் ஆண்டு நினைவு

மலர்வு: 25 . 05 . 1977



உதிர்வு: 26 . 05 . 2009

திதி: மாசி அமாவாசை 04.03.2011

### திருமதி அஜந்தா அபராஜிதன்

*(கிராம சேவையாளர், பளை)*

பூக்கள் மலர்ந்து உன்னைக் கேட்கின்றன
நிலா மங்கி ஒளிர்கின்றது - உனைக் காணாது
நீண்ட திசையில்
உன்னைத் தேடிக் கொண்டிருக்கின்றோம்
கண்கள் கலங்க

நிரந்தர முகவரி:
புலோப்பளை மேற்கு,
பளை,
தற்காலிக முகவரி:
அல்லாரை வீதி, மீசாலை கிழக்கு,
மீசாலை.
(32-23-24)
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை போர்க்குற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெனீவாவில் நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான பிரேரணை கொண்டுவரப்படலாம் என்ற அச்சம் நிலவும் நிலையில் அமெரிக்க செனற்றின் இந்தத் தீர்மானம் வந்துள்ளது. இது இலங்கை அரசுக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தும் என்று தெரிவிக்கப்படுகிறது.

பென்சில்வேனியா மாநிலத்தைச் சேர்ந்த செனற் உறுப்பினரான றொபேட் கசேயினால் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. செனற் சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

**முன்னுரை**

மே 19, 2010 அன்றுடன் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான 26 ஆண்டுகாலப் போர் முடிவுக்கு வந்து ஓராண்டுக்கு மேற்பட்ட காலம் கடந்துவிட்டது.

அதேநேரம், பெப்ரவரி 2002 தொடக்கம் மே 2009ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்ற ஏதேனும் சம்பவங்களுக்கு தனிநபரோ அன்றி குழுவோ அன்றி ஏதாவது நிறுவனமோ நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ பொறுப்பாக இருந்திருக்கிறதா என்பதைக் கண்டறிந்து அறிக்கையிடுவதற்காக கற்றுக் கொண்ட பாடங்கள் மன்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை இலங்கை அரசு அமைத்திருக்கிறது.

இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் தவிர்ப்பதோடு நாட்டினது அனைத்து இனங்கள் மத்தியில் தேசிய ஒருமைப்பாட்டினையும் இன நல்லிணக்கத்தினையும் ஏற்படுத்தும் வகையிலான சிபாரிசுகளை அந்த ஆணைக்குழு இலங்கை அரசுக்கு வழங்கும்.

அதேநேரம், இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக் கூறும் செயற்பாட்டினை முன்னெடுப்பேன் என்ற தனது உறுதிப்பாட்டினை இலங்கை அரசு நடைமுறைப்படுத்துவது தொடர்பாகத் தனக்கு ஆலோசனை வழங்கவென ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பன் கீ - மூன் ஆலோசனைக் குழு ஒன்றை அமைத்துள்ளார். இந்தோனேஷியாவின் முன்னாள் சட்ட மா அதிபர் மாசுகி டருஸ்மன், தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் இனநல்லிணக்க ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் ஒருவரான யஸ்மின் சூகா மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் அனைத்துலக சட்டங்கள், மனித உரிமைகள் சட்டங்கள் தொடர்பான சட்ட வல்லுநரான ஸ்ரீவன் ரட்னர் ஆகிய வல்லுநர்கள் அந்தக் குழுவில் இடம்பெற்றிருக்கின்றனர்.

இலங்கையில் உள்ள அனைத்து இனக் குழுமங்களினதும் தேவைகளைப் போக்கும் வகையில் செயற்படுவதாக என உறுதியளித்திருப்பதோடு நாட்டில் அமைதியான மற்றும் நீதியானதொரு சமூகத்தின் உருவாக்கத்திற்காக ஓர் அரசியல் தீர்வு முன்வைக்கப்பட்டு நல்லிணக்க முனைப்புக்கள் மேற்கொள்ளப்படுவது அவசியமானது என்பதையும் இலங்கை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

இடம்பெற்ற போர்க் குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கான உள்நாட்டு மற்றும் அனைத்துலக விசாரணைகளில் முன்னேற்றம் ஏற்படுவதோடு இன நல்லிணக்க முனைப்புக்களும் முறையாக முன்னெடுக்கப்படுவதுதான் இலங்கையில் அமெரிக்கா தொடர்ந்தும் முதலீடுகளை மேற்கொள்ள வழிசெய்யும்.

**தீர்மானங்கள்**

எனவே அமெரிக்க செனற் சபையானது கீழ்க்காணும் தீர்மானங்களை எடுக்கிறது.

01. இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புச்சொல்லும் நடைமுறையினைக் கைக்கொள்வது என்ற தனது உறுதிப்பாட்டினை இலங்கை அரசு நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஐ.நாவின் செயலாளர் நாயகம் வல்லுநர்கள் குழு ஒன்றை அமைத்தததை செனற்சபை வரவேற்கிறது.

02. இலங்கையில் இடம்பெற்ற போரின்போது இரண்டு தரப்பினராலும் புரியப்பட்டதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களைச் சுதந்திரமாகவும் பக்கச்சார்பின்றியும் விசாரிக்கும் வகையில் அனைத்துலகக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டும் என இலங்கை அரசிடமும் அனைத்துலக சமூகத்திடமும் ஐக்கிய நாடுகள் சபையிடமும் அழைப்பு விடுக்கிறது.

03. மனிதாபிமான அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள், பத்திரிகையாளர்கள், அனைத்துலக மனித உரிமை அமைப்புக்கள் என்பன இடம்பெயர்ந்தோர் முகாம்கள் உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் சுதந்திரமாகச் சென்று வருவதற்கு அனுமதிக்குமாறு இலங்கை அரசை செனற் கோருகின்றது.

04. மனித உரிமைகளை மதித்துச் செயற்படுதல், ஜனநாயகம், சட்டம் ஒழுங்கு, பொருளாதார நலன்கள் மற்றும் பாதுகாப்புசார் நலன்கள் உள்ளிட்ட விடயங்களில் அமெரிக்காவின் எதிர்பார்ப்பு எதுவோ அதனைப் பிரதிபலிக்கும் வகையிலான முழுமையான கொள்கையொன்றை வகுக்குமாறு இலங்கை ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்கிறது செனற்.

இவ்வாறு அந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

**தூதுவர் விளக்கம்**

இருப்பினும் இந்தத் தீர்மானம் யாரையும் கட்டுப்படுத்தக் கூடியது அல்ல, குறிப்பாக அமெரிக்க அரசை அல்லது அதிபரைக் கட்டுப்படுத்தக் கூடியது அல்ல என்று கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

''தீர்மானம் 84 நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது. இது சாதாரணமான ஒரு தீர்மானமே. இது யாரையும் கட்டுப்படுத்தக்கூடியது அல்ல என்றாலும் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களின் இலங்கை தொடர்பான கவலையை அது எடுத்துக் காட்டுகிறது. போரின் போது நிகழ்ந்திருக்கக் கூடிய மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுவதற்கான பொறிமுறை ஒன்றை இலங்கை அரசு ஏற்படுத்த வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள்'' என்று தூதரகம் தெரிவித்துள்ளது.

''போர்க் குற்றங்களுக்காக இலங்கை அரசு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன்பாக நிறுத்தப்படலாம்'' என்று தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்கச் செயலர் றெபோர்ட் ஓ பிளேக் கருத்துத் தெரிவித்த சில நாள்களில் செனற் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி உள்ளது.

**பிரதி அமைச்சர் கருத்து**

அமெரிக்க செனற்றின் இந்தக் கரிசனை குறித்து இலங்கை அரசு கவனத்தில் எடுத்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று வெளிவிவகாரத்துறை பிரதி அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்தார். ''இது குறித்து நாங்கள் கவனம் செலுத்தி பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்போம். எமது கடந்த கால நடவடிக்கைகள் மற்றும் தேசிய ஒருமைப்பாடு குறித்து மீளாய்வு செய்வதுடன் ஏதாவது விடயங்கள் மேம்படுத்தப்பட வேண்டி இருப்பின் அவை குறித்தும் அக்கறை செலுத்துவோம்'' - என்றார் அமைச்சர். (உ)

# டக்ளஸூக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்னை சூளைமேட்டில் கடந்த 1986ஆம் ஆண்டு நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் திருநாவுக்கரசர் என்பவர் கொல்லப்பட்டார். இது தொடர்பாக ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தைச் சேர்ந்த டக்ளஸ் தேவானந்தா மீது கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இது தொடர்பான வழக்கு விசாரணை சென்னை உயர்நீதிமன்றத்தில் நடைபெறுகிறது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமக்கு முன்பிணை வழங்கவேண்டும் என மனுத் தாக்கல் செய்திருந்தார். இந்த மனு நேற்று விசாரணைக்கு வந்தபோது அரச தரப்பு சட்டத்தரணி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு முன்பிணை வழங்குவதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்.

# நாங்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்தித் தாருங்கள்.

இவ்வாறு பூம்புகார் பகுதியில் நேற்று மீளக்குடியமர்வதற்கு திரண்டிருந்த மக்கள் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸிடம் ஒரே குரலில் தெரிவித்தனர்.

கொழும்புத்துறை, அரியாலைப் பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்வதற்கு நேற்று மாலை அனுமதி வழங்கப்பட்டது. இது தொடர்பான ஆரம்ப வைபவம் நேற்று அங்கு நடைபெற்றது. இதில் அமைச்சர் உரையாற்றும் போதே மக்கள் இவ்வாறு கோரிக்கை விடுத்தனர்.

மக்களின் இந்தக் கோரிகைக்கு பதில் அளித்து பேசிய அமைச்சர்.

ஒரு மாத காலத்துக்கு முன்னர் இந்தப் பகுதிகளில் மக்கள் நடமாடும் அனுமதி வழங்கப்பட்டது.இன்று முதல் மீளக் குடியமர அனுமதி வழங்கப்பட்டுள்ளது. உங்களது தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஒரு வாரமும் 10 நாள்களும் கால அவகாசம் தேவை. மக்கள் அனைவருக்கும் இந்திய அரசின் வீட்டுத் திட்டம் கிடைக்கும் இதற்கு மூன்று மாத கால அவகாசம் தேவை. அதன் பின்னரே அந்தத் திட்டத்தில் உங்களுக்கு வீடு கிடைக்கும் என்றார். (த-14-135)

# புலிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சி அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் சைத் பிரேமதாச இதனைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் போது அரசுக்கு ஆதரவு அளித்த போதும் போருக்காகச் செலவிடப்பட்ட பணத்தைக ஏன் சமுர்த்திப் பணியாளர்களுக்கு செலவிட முடியாது என அரசிடம் கேள்வி எழுப்பவும் தமது கட்சி தயங்கவில்லை என அவர் குறிப்பிட்டார்.

போர் முடிவடைந்த பின்னர் அதற்காக செலவிட்ட தொகை தற்போது மீதம் இருக்கின்றது. இதனை ஏன் சமுர்த்திப் பயனாளிகளுக்கு செலவிடக்கூடாது.

ஒவ்வொரு சமுர்த்தி பயனாளிகளுக்கும் 10 ஆயிரம் ரூபா மதிப்புள்ள அட்டைகளை ஒவ்வொரு மாதமும் வழங்க முடியும். ஆனால் அதை அரசு செய்யவில்லை. செய்யாது என்பதும் அனைவருக்கும் தெரியும். ஐ.தே.கட்சி ஆட்சிக்கு வந்தால் அதனைச் செய்யும்.

எனது தந்தையார் ரணசிங்க பிரேமதாஸ ஜனசவிய திட்டத்தின் ஊடாக பலவேறு தரப்பினருக்கும் பெரும் உதவிகளை வழங்கியதாகவும் இத்திட்டத்தால் வறுமை ஒழிக்கப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார். (உ-10)

# யாழ்.கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மனுமீதான விசாரணை நேற்று உயர் நீதிமன்ற நீதியரசர்களான காமினி அமரதுங்க, பி.ஏ.ரட்ணாயக்க, சந்திரா ஏக்க நாயக்க ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

சட்டமா அதிபர் சார்பில் மன்று வந்திருந்த பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் புவனேக அலுவிகார யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் பதிவு நடவடிக்கைகள் கைவிடப்படும் என விசாரணையின் போது உறுதியளித்தார்.

இதையடுத்து வழக்கைத் தொடர்வதில்லை என மனுதாரர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் நீதிமன்றில் தெரிவித்தனர். மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினரும் எம்.ஏ.சுமந்திரன், பவானி பொன்சேகா, நிரான் அன்கெட்டல் ஆகியோருடன் இணைந்து வாதாடினர். மூத்த சட்டத்தரணி மோகன் பாலேந்திரா நெறிப்படுத்தினார். (உ-சி)


## பாராட்டும் வாழ்த்துக்களும்

01.03.2011 செவ்வாய்க்கிழமை அன்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் அனர்த்த முகாமைத்துவத்துறையில் விஞ்ஞான முதுமாணி பட்டம் பெற்ற எமது திணைக்களத் தலைவர்

**பொன்னம்பலம் தயானந்தன்**
(S.L.A.S)

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் சீரும் சிறப்புடனும் மேலும் பல பட்டங்களைப் பெற இறைவனின் அருளை வேண்டுகின்றேன்.



நடராஜா இராஜரட்ணம் (32)

## ஸ்ரீ கந்தசுவாமி கோயில் உசன் - மிருசுவில்



மஹா உன்னத பாஞ்சஜன்ய சக்த 108 வலம்புரி சங்காபிஷேக ஸ்கந்த ஹோமப் பெருவிழா 06.03.2011 ஞாயிற்றுக்கிழமை.

ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில் அருள்வாக்குச் சித்தர் உசன் கந்தசாமி கோயில் பிரதமகுரு

**குகஸ்ரீ இரத்தின கேதீஸ்வர சுவாமிகள்**

தலைமையில் பல சிவாச்சாரியர்கள் கலந்து சிறப்பிப்பார்கள்.

யாழ்.பிரதான பஸ்நிலையத்திலிருந்து உசன் கந்தசுவாமி கோயில் வரை இ.போ.ச பஸ்சேவையும், தனியார் சிற்றூர்திப் போக்குவரத்துச் சேவையும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உசன், மிருசுவில். ஆலய தர்மகர்த்தா

விளம்பர அனுசரணை: திருமுருகன் கொம் நெற் 259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**ம.பிரதீப்குமார்**

(உடற்கல்வி ஆசிரியர் யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம்)

எமது பாடசாலையில் கடமையாற்றும் மேற்படி ஆசிரியர் 21.02.2011 அன்று நடைபெற்ற தேசிய மட்டத்திலான ஆசிரியர்களுக்கான மெய்வன்மைப் போட்டியில் குண்டு போடுதலில் முதலாம் இடத்தினையும், தட்டெறிதலில் இரண்டாம் இடத்தினையும் பெற்றுப் பெருமை சேர்த்தமைக்காக எமது பாடசாலைச் சமூகத்தின் சார்பில் அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/கைதடி முத்துக்குமார சுவாமி மகாவித்தியாலயம்.

(576570)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் மழை பெய்வதற்கான சாத்தியம் உள்ளது.

CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை ப யாழ்ப்பாணம்
பங்குனி 03, 2011
பங்குச்சந்தைச்சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 7701.19↓
மிலங்கா(MPI) 7096.56↓
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 2690.95Mn
பங்குகளின் அளவு(No.) 77.31Mn
வியாபாரம்(No.) 14870
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
லங்கா கொஸ்பிரல 52,30
செறன்டிப் ஹொட்டல் 127.10
ஈ பி கிறியேசி 3297.00
புறபரி டிவலொப்மன்ர் 59.80
றேடியன்ர் ஜெம்ஸ் 69.80
குறைவு(Top 5 losers) - விலை Rs.
கார்டியன் இன்வெஸ்ர்மன்ர் 1500.00
ஈஸ்ரேன் மேக்கன்ர் 600.00
சிங்கபுத்திரா 96.00
ஓட்டோறோம் 1000.00
சாம்சன் இன்ரநசனல் 102.00
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# சர்வதேச நீதிமன்றின் முன் இலங்கை நிறுத்தப்பட்டால் அதற்கான முழுப்பொறுப்பையும் அரசே ஏற்கவேண்டும்

## மங்கள எச்சரிக்கிறார்



கொழும்பு, மார்ச் 04

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் இலங்கை நிறுத்தப்பட்டால் அதற்கான முழுப் பொறுப்பையும் இலங்கை அரசே ஏற்க வேண்டும்.

- இவ்வாறு ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கை மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு இலங்கைக்குள்ளேயே பரிமாண பொறிமுறை ஒன்று அவசியம் என்று நாம் பல தடவைகள் நாடாளுமன்றில் கூறினோம். அரசு அதனைக் கவனத்தில் எடுக்கவில்லை.

அரசால் நியமிக்கப்பட்டுள்ள நல்லிணக்க ஆணைக்குழு கூட சுயாதீனமான ஒன்றல்ல. இலங்கை மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக இலங்கை அரசே உரிய முறையில் விசாரணை நடத்தாவிட்டால் வெளிநாட்டுத் தலையீடுகள் இலங்கை மீது திணிக்கப்படுவதைத் தடுக்கமுடியாது.

யுத்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைக்காக இலங்கை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் முன் நிறுத்தப்படலாம் என்று தெற்கு மற்றும் மேற்கு, ஆசிய பிராந்தியத் திற்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் றொபேர்ட் ஓ பிளேக் கூறியுள்ளார்.

அவர் கூறியதுபோல் இலங்கை சர்வதேச யுத்தக் குற்றவியல் நீதிமன்றத்தின் முன்நிறுத்தப்பட்டால், இலங்கை அரசே அதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும். யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக நாம் உரிய விசாரணை நடத்தத் தவறினால் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுவதைத் தடுக்க முடியாது.

இதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அரசு தோல்வியடையப் போவதை உணர்ந்த அமைச்சர்கள் மக்களைப் பிழையாக வழிநடத்தத் தொடங்கியுள்ளனர். நான் ரூபவாஹினிக்கும் கடன் கொடுக்க வேண்டியுள்ளது என்று அமைச்சர் டலஸ் அழகப்பெரும கூறியுள்ளார். நான் இந்தக் குற்றச்சாட்டை அடியோடு மறுக்கின்றேன். டலஸ் பொய் கூறியமைக்காக மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கோரவேண்டும். - என்றார்.

# வெளிநாட்டுப் பறவையைப் பிடித்த இருவருக்கு நீதிமன்றம் அபராதம்

தென்மராட்சி,மார்ச் 4

தென்மராட்சி தெற்கு தனங்களப்பு பகுதிக்கு வந்திருந்த வெளிநாட்டுப் பறவையினை கண்ணி வைத்துப் பிடித்த இருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 15 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது.

வெளிநாட்டுப் பறவையினைப் பிடித்து வைத்திருந்த தாகக் கைதடி மற்றும் மட்டுவில் தெற்கைச் சேர்ந்த இருவருக்கு எதிராகச் சாவகச்சேரிப் பொலிஸார் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்திருந்தனர்.

நேற்று வியாழக்கிழமை வழக்கினை விசாரித்த நீதிவான் மா. கணேசராசா இருவருக்கும் தலா 7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் தலா 2 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார்.

இதேவேளை, நாவற்குளி தெற்குப் பகுதியில் ஆமை இறைச்சி வைத்திருந்த நபருக்கு நீதிமன்றில் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரிப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை விசாரித்த நீதிவான் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 3 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (த-207)



குடத்தனை அ.மி.த.க. பாடசாலைக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அங்கு மாணவர்கள் மற்றும் ஆசிரியர் ஆகியோரை சந்தித்துப் பாடசாலைத் தேவைகள் பற்றி கலந்துரையாடுகிறார். (த)

# செஞ்சிலுவைச் சங்கங்களுக்கு தகரப் பந்தல்கள் அன்பளிப்பு

அச்சுவேலி, மார்ச் 4

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக செயற்படும் செஞ்சிலுவைச் சங்கங்களுக்குச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தகரப் பந்தல்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இந்தப் பந்தல்களை நியாயமான வாடகைக்குப் பொது மக்களுக்கு வழங்கி அந்த வருவாய் மூலம் பிராந்திய செஞ்சிலுவைச் சங்கங்களின் அடிப்படைச் செலவீனங்களை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு யாழ். மாவட்டச் செஞ்சிலுவைச் சங்கங்களின் ஊடாக யாழ். மாவட்டத்தில் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக செயற்பட்டு வரும் செஞ்சிலுவைச் சங்கக் கிளைகளுக்கு இந்தத் தகரப் பந்தல்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் செயற்பாடுகள் யாழ். மாவட்டத்தில் நிறுத்தப்பட்டுள்ளதால் செஞ்சிலுவைச் சங்கங்களின் செயற்பாட்டிற்கான வருவாயை பெற்றுக்கொள்வதற்கு வசதியாகவே இந்தத்தகரப் பந்தல்கள் வழங்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (த-11)

# விபத்தில் மாணவன் பலியானமை; ஹன்ரர் கைதிக்கு விளக்கமறியல்

கைதடி - கோப்பாய் வீதியில் இடம்பெற்ற ஹன்ரர் வாகனம் மோட்டார் சைக்கிள் விபத்தில் பாடசாலை மாணவன் பலியானது தொடர்பாக வாகனச் சாரதியினை மார்ச் 8 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் உத்தரவிட்டார்.

பெப்ரவரி 28 ஆம் திகதி இடம்பெற்ற இந்த விபத்தில் கைதடி கிழக்கைச் சேர்ந்த மகேஸ்வரன் கஜதீபன் (வயது 17) என்னும் மாணவன் ஸ்தலத்தில் பலியானதையடுத்து கைது செய்யப்பட்ட வாகனத்தின் சாரதிக்கு எதிராக சாவகச்சேரி பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

கடந்த செவ்வாய்கிழமை வழக்கை விசாரணைக்கு எடுத்த நீதிவான் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (த-202)

# நிகழ்வுகள்

### ஆய்வரங்கம்

யாழ்ப்பாணம்,மார்ச்.04

''இலங்கை கலை வரலாற்றை மீள சிந்தித்தல்'' எனும் தலைப்பிலான தேசிய மட்ட ஆய்வரங்கு நாளை சனிக்கிழமை காலை 9மணி தொடக்கம் 5மணி வரை யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடக் கட்டடத் தொகுதியில் இடம்பெறவுள்ளது.

நுண்கலைத் துறையின் 25ஆவது வருடப் பூர்த்தியினை முன்னிட்டு நடைபெறும் இந்த நிகழ்வில் இலங்கையின் முக்கியமான கலை வரலாற்று ஆசிரியர்களும் சமூகவியலாளர்களும், மானிடவியலாளர்களும் இலங்கைக் காண்பியக் கலை தொடர்பான உரைகளை நிகழ்த்துவார்கள்.

இக்கருத்தரங்கில் கலந்து கொள்ள விரும்புவோர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு நுண்கலைத் துறைத் தலைவர் கலாநிதி ஏ.என்.கிருஷ்ணவேணி கேட்டுக்கொண்டுள்ளார். (ற-319,313)

### மீளாய்வுக் கூட்டம்

கிளிநொச்சி,மார்ச்.04

இலங்கை வரலாற்றுப் புகழ்மிக்க கிளிநொச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் பொங்கல் நிர்வாகம் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட நிர்வாக சபையினரையும் பக்தர்களையும் கலந்துகொள்ளுமாறு கிளிநொச்சி அரச அதிபர் கேட்டுள்ளார். (ற-311)

### வாராந்த நிகழ்வு

யாழ்ப்பாணம்,மார்ச்.04

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் ''சைவக்கலை பண்பாட்டுப் பேரவை'' சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ''பக்தி நெறி'' எனும் தலைப்பில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் ஆசிரிய மாணவி செல்வி.விஜயபாரதி பழனிநாதன் சொற்பொழிவை நிகழ்த்துவார். (ற-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையச் செய்திகள்

## விடுவிக்கப்பட்ட போராளிகள் மீது குடாநாட்டில் படையினர் கெடுபிடி

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது படையினரால் கைது செய்யப்பட்ட மற்றும் சரணடைந்த போராளிகளில் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட போராளிகள் மீது யாழ்ப்பாணத்தில் கடுமையான கெடுபிடிகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரியவந்துள்ளது.

சமூகத்தில் எந்தவித பேதமுமின்றி வாழ முடியும் என அரச உயர் மட்டங்களும், படை அதிகாரிகளும் கூறி வருகின்ற போதிலும் யாழ்ப்பாணத்தில் படையினர் பலவாறான நடவடிக்கைகளையும், கட்டுப்பாடுகளையும் அவர்கள் மீது விதிக்கின்றனர்.

அண்மைக்காலமாக விடுவிக்கப்பட்ட போராளிகளின் வீடுகளுக்குச் செல்லும் படையினர் புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளிகளை அருகிலுள்ள ஏதாவதொரு முகாமுக்கு வருமாறு அழைத்து வாரத்தில் இரு நாள்கள் அல்லது ஒரு நாள் முகாமுக்கு வந்து கையெழுத்துப் போட வேண்டும் என அறிவுறுத்தி அதனைச் செயற்படுத்தியும் வருகின்றனர்.

(தமிழ்வின்)

## இலங்கையில் வேற்றுக் கிரக வாசிகள்

இலங்கைக்கு வேற்றுக்கிரக வாசிகள் வந்து செல்வதற்கான ஆதாரங்கள் பல வருடங்களுக்கு முன்பே கிடைத்திருப்பதாக இங்கிலாந்து விமானப்படை அதிகாரியொருவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இலங்கையில் கடமையாற்றிய ஓய்வுபெற்ற இங்கிலாந்து விமானப்படை அதிகாரியொருவரே அவ்வாறு தெரிவித்துள்ளார். அதற்கு ஆதாரமாக 2004ஆம் ஆண்டில் அவர் இலங்கையில் எடுத்த புகைப்படமொன்றை சமர்ப்பித்துள்ளார்.

அவர் தனது சேவை முடிந்து இங்கிலாந்து திரும்பிய பின் தான் எடுத்திருந்த பறக்கும் தட்டின் புகைப்படத்தை தனது முன்னைய விமானப்படை அதி காரிகளுக்கு அனுப்பியிருப்பதாக இங்கிலாந்தின் டெயிலி மெயில் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

(தமிழ்வின்)

## புலிகளின் முக்கிய உறுப்பினர் 500 பேர் தீவிர விசாரணையில்

விடுதலைப் புலிகளின் முன்னணி பொறுப்புகளில் இருந்த முக்கிய உறுப்பினர்கள் 500 பேர் இராணுவத்தின் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது தனியான இடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அவர்களிடம் விடுதலைப் புலிகள் அமைப்பல் செயலாற்றிய போது அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள், இராணுவத்திற்கெதிரான தாக்குதல்களில் அவர்களின் பங்களிப்பு என்பன குறித்து கடுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அத்துடன் விசேடமாக இறுதிக்கட்ட யுத்தம் அதன் பின்னரான நாள்களில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் மற்றும் அதனுடன் இணைந்த சம்பவங்கள் தொடர்பாகவும் அவர்களிடம் இருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ள பாதுகாப்புத் தரப்பு கடும் ஆர்வம் காட்டி வருகின்றது.

(தமிழ்வின்)

## பிரதி அமைச்சர் கருணா அமெ. செல்ல விசா மறுப்பு

மீள்குடியேற்ற விவகாரங்களுக்கான பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு (கருணா) அமெரிக்கா செல்வதற்கான வீசா வழங்க கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் மறுத்துள்ளது.

இலங்கை ஆணழகன் பிரசன்ன பீரிஸ் உடன் இணைந்து அமெரிக்கா செல்வதற்கு பிரதியமைச்சர் முரளிதரனும் விண்ணப்பத்திருந்தார். அதன் போது பிரதியமைச்சரின் வீசா விண்ணப்பம் காரணமாகவே பிரஸ்தாப விளையாட்டு வீரருக்கான வீசாவும் மறுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அது மாத்திரமன்றி பிரதியமைச்சர் தன் அந்தரங்கச் செயலாளரான தில்ருக்ஷி பெரேரா எனும் மங்கையையும் தன்னுடன் அமெரிக்காவுக்கு அழைத்துச் செல்ல வீசாவுக்கு விண்ணாப் பித்துள்ளார். (தமிழ்வின்)

## ஆடைகள் களையப்படும் என ஊடகவியலாளர்களுக்கு மிரட்டல்

இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையைச் சேர்ந்த அதிகாரிகள் சிலர் பலவந்தமாக ஊடகவியலாளர்களின் ஆடைகளைக் களையப் போவதாக மிரட்டியுள்ளனர்.

இச்சம்பவம் அண்மையில் கொழும்பில்நடைபெற்ற இலங்கை மற்றும் கென்யா அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியின்போது நடைபெற்றுள்ளது.

அதன் போது சில ஊடகவியலாளர்கள் தமது ஊடகத்தின் அடையாளத்தைப் பிரதிபலிக்கும் வண்ணமான ரீசேர்ட்டுக்களை அணிந்து போட்டியைக் கண்டுகளித்துக் கொண்டிருந்தனர்.

சற்றுநேரத்தில் இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ரீசோ்ட் அணிந்த இரண்டு பெண் அதிகாரிகள் அவர்களை நெருங்கி வந்து தமது நிறுவனத்தின் விதிகளின் பிரகாரம் கிரிக்கெட் போட்டிகளின் போது எந்தவொரு ஊடகவியலாளரும் அவர்களது நிறுவன இலச்சினை பொறித்த ஆடைகளை அணிய முடியாது என்று வாக்குவாதப்பட்டுள்ளனர்.

அதன் பின் உடனடியாக குறித்த ரீசோ்ட்டுக்களை கழற்றுமாறும் இல்லாது விடில் தாம் பலவந்தமாகக் கழற்றப் போவதாகவும் அவர்கள் ஊடகவியலாளர்களை அச்சுறுத்தியுள்ளனர். (தமிழ்வின்)

# அரியாலை மற்றும் கொழும்புத்துறையில் 17 வருடங்களின் பின் மக்கள் குடியமர்வு

யாழ்ப்பாணம்,மார்ச் 04

யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய இரு பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ளடங்கும் கொழும்புத்துறை, அரியாலைப் பகுதிகளில் ஐந்து கிராம அலுவலர் பிரிவுகளில் சுமார் 17 வருடங்களின் பின்னர் மக்கள் நேற்று மீளக் குடியமர்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

சேதமுற்ற வீடுகளைப் பார்த்துக் கலங்கினர் மக்கள்



இந்தப் பகுதிகளில் மக்களைக் குடியமர்த்துவதற்கான ஆரம்ப நிகழ்வுகள் துண்டி மற்றும் பூம்புகார் ஆகிய இடங்களில் நேற்று இடம்பெற்றன.

நல்லூர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் மக்களை மீளக் குடியமர்வதற்கான ஆரம்ப நிகழ்வு பூம்புகாரில் நல்லூர் உதவிப் பிரதேச செயலர் தலைமையில் இடம் பெற்றது. யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் மக்களை மீளக் குடியமர்வதற்கான ஆரம்ப நிகழ்வு துண்டியில் யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வுகளில் பாரம்பரிய கைத்தொழில் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் நோயல் ஜெயச்சந்திரன் மற்றும் திணைக்களத் தலைவர்கள், கிராம அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கிராம அலுவலர் பிரிவுகளான ஜே/61 இல் நெடுங்குளம் பகுதியிலும், ஜே/62 இல் கொழும்புத்துறை கிழக்குப் பகுதியிலும், ஜே/89 இல் அரியாலை தென் கிழக்கு பகுதியிலும், ஜே/90 இல் அரியாலை கிழக்குப் பகுதியிலும், ஜே/96 இல் அரியாலை மத்தி மற்றும் தென் பகுதியிலும் மக்கள் நேற்று மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மீளக் குடியமர்வதற்கு அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள தமது வீடுகள் மற்றும் காணிகளை நீண்ட காலத்தின் பின்னர் மக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டதை அவதானிக்க முடிந்தது.

அனைத்து வீடுகளும் இடிந்து சேதமடைந்த நிலையில் இருந்தன. வீடுகளின் மத்தியில் வேம்பு உள்ளிட்ட பெரிய மரங்கள் வளர்ந்து காணப்பட்டன. மரத்தளபாடங்கள், கூரைகள், கதவுகள் அற்ற நிலையில் அனைத்து வீடுகளும் உள்ளன. காணிகளுக்கான எல்லைகள் இனங்கான முடியாதவாறு அழிக்கப்பட்டு வெட்டை வெளியாக உள்ளன.

கடற்கரையோரப் பிரதேசமாக உள்ள பகுதிகளில் மண் அரிப்பு ஏற்பட்டு பல வீடுகள் இடிந்து வீழும் நிலையில் காணப்பட்டன.

அடிப்படை வசதிகள் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி தருமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் அங்குள்ள மக்கள் கேட்டனர். தனக்கு ஒரு வாரமும் பத்து நாள்கள் கால அவகாசம் தரும்படி அமைச்சர் அந்த மக்களிடம் கேட்டுக் கொண்டார்.

(த-14-135)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 4

கொக்குவில் இந்துக் கல்லூரி ஊடகக் கழகத்தினால் நித்திலம் காலாண்டிதழ் வெளியீடு இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு கல்லூரி சுப்பிரமணிய மண்டபத்தில் ரி.நிலக்ஷன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் இதழ் வெளியீட்டுரையினை யாழ்.பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தரும், ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலைய இணைப்பாளருமான பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை நிகழ்த்துவார்.

இதழாசிரியர் உரையினை ப.இராஜேஸ்வரன் வழங்குவார்.

(த-323)

## மகளிர் தினப் போட்டிகள்

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ்.பிரதேச செயலகத்தில் கட்டுரை, கவிதைப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

கட்டுரைத்தலைப்பாக "பெண்களுக்கு விஞ்ஞான தொழில் நுட்பத்தின் அவசியம்", "பெண்கள் கௌரவமான தொழிலில் ஈடுபடுவதற்கு வழி சமைப்போம்" ஆகியனவும் கவிதைத் தலைப்பாக "எழும் ஞாயிறு" என்பதும் அமைந்துள்ளது.

பங்குபற்ற விரும்புவோர் யாழ். பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

ஆர்வமுடையவர்கள் தமது ஆக்கங்களை எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.பிரதேச செயலக பெண்கள் அபி வித்தி உத்தியோகத்தருக்கு அனுப்பி வைக்குமாறு யாழ்.பிரதேச செயலர் சுகுணரதி தெய்வேந்திரம் அறிவித்துள்ளார். (ற-313)

## வல்வெட்டித்துறையில்

## வன்னி மக்களைப் பதிவு செய்வது காலை தொடங்கி நண்பகல் நிறுத்தம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து வடமராட்சி, வல்வெட்டித்துறைப் பகுதியில் வசித்துவரும் குடும்பங்களின் விவரங்களை இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் பதிவுசெய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அப்பகுதி கிராம உத்தியோகத்தருடன் இணைந்து நேற்று முன்தினம் காலை 9 மணிமுதல் இராணுவத்தினர் பதிவுகளை ஆரம்பித்தனர் எனவும் பிற்பகல் 2 மணிவரை பதிவு இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

நேற்றுக் காலை 9 மணியளவில் வல்வெட்டித்துறைப் பகுதி கிராம உத்தியோகத்தருடன் வீடு வீடாகச் சென்ற இராணுவத்தினர் வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து வல்வெட்டித்துறையில் வசிக்கின்ற மக்களின் குடும்ப விவரங்களைப் பதிவுசெய்து கொண்டனர். பிற்பகல் 2 மணியுடன் பதிவுகளை நிறுத்தினர்.

திடீரென இராணுவத்தினர் பதிவுகளை மேற்கொண்டதால் வல்வெட்டித்துறை பகுதி மக்களிடையே பெரும் பதற்றம் நிலவுகின்றது.

இது குறித்து பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் எஸ்.வரதீஸ்வரனிடம் தொடர்புகொண்டு கேட்டபோது

நேற்று முன்தினம் காலை 9 மணிமுதல் இடம்பெயர்ந்து குடும்பங்களின் விவரங்களை படையினர் பதிவுசெய்து கொண்டனர். பின்னர் பிற்பகலுடன் அதனை நிறுத்திக்கொண்டனர். இதனைத் தவிர எனக்கு வேறு எந்தத் தகவலும் தெரியாது என்றார் அவர்.

இதேவேளை - நேற்று ஊடகங்களைத் தொடர்பு கொண்ட பலாலி இராணுவ ஊடகப் பிரிவினர் இவ்வாறான பதிவுகள் எதுவும் இடம்பெறவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

(த-9-236-319)

## வர்ணம் பூசிய வீட்டுக்கு 'ஒயில்' பூசினர் விஷமிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 4

வர்ணம் பூசப்பட்டு அலங்கரிக்கப்பட்ட வீட்டுக்கு இனந்தெரியாத நபர்களால் கழிவு ஒயில் அடித்து அசிங்கப்படுத்திய சம்பவம் ஒன்று சிவராத்திரி தினமான நேற்றுப் புதன்கிழமை இரவு கல்வியங்காடு புலவர் வீதியில் இடம்பெற்றுள்ளது.

அத்துடன் வீட்டு உரிமையாளரின் தோட்டத்திலுள்ள வாழை மரங்களும் வெட்டி சாய்க்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக வீட்டு உரிமையாளரால் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக மாணவர்களை நடுவழியில் இறக்கி விட்ட பஸ்

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் வந்த போக்கு வரத்துச் சபை பஸ்ஸில் பயணித்த பல்கலைக்கழக மாணவர்கள் தாம் பஸ் நடத்துநரால் தாம் நடுவழியில் இறக்கிவிடப்பட்டதால் நேற்றுக் காலை விரிவுரைகளுக்குச் செல்ல முடியவில்லை எனத் தெரிவித்தனர்.

பருவகால சீட்டைப் பயன்படுத்தி பருத்தித்துறையில் இருந்து பல்கலைக்கழகம் வந்த 15 மாணவர்களுக்கே நேற்று இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட மாணவர்கள் தெரிவிக்கையில் நேற்றுக்காலை 6.30 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து புறப்பட்ட 750 பாதை இலக்க பஸ்ஸில் சில மாணவர்கள் ஏறிக்கொண்டனர். பஸ் நெல் லியடி தரிப்பிடத்தை அடைந்த போது அங்கு நின்ற மேலும் சில பல்கலைக்கழக மாணவர்களை பஸ் நடத்துநர் ஏற விடாது தடுத்ததுடன் ஏற்கனவே பஸ்ஸில் இருந்த மாணவர்களையும் அங்கே இறக்கிவிட்டுள்ளார்.

அத்துடன் மாணவர்களைத் தகாத முறையில் பேசியதுடன் நீங்கள் 764 இலக்க பஸ்ஸில் தான் பயணிக்க வேண்டும் என்றும் கூறியதாக மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் நேற்றுக் காலை 8 மணிக்கு நடைபெற்ற விரிவுரைகளுக்கு சமுகமளிக்க முடியவில்லை என்றும் 764 இலக்க பஸ் தாமதமாகவே பரமேஸ்வராச் சந்தியை அடைவதாலேயே தாம் காலை 6.30 இற்குப் புறப்படும் 750 பஸ்ஸில் ஏறியதாகவும் பாதிக்கப்பட்ட மாணவர்கள் தெரிவித்தனர்.

தாம் 750, 764 இலக்க பஸ்களுக்குப் பருவகால சீட்டுக்களைப் பெற்றிருந் தனர் எனவும் அவர்கள் கூறினார்கள். (த-10)

# ரோமியோ - ஜூலியட் பாணியில் சிலாபத்தில் காதலர்கள் மரணம்

பல நூற்றாண்டின் பின் ரோமியோ - ஜூலியட் பாணியிலான சாவுகள் சிலாபம் பகுதியில் இடம் பெற்றுள்ளன.

நேற்றுமுன்தினம் காதலி தற்கொலை செய்து கொண்டார் என்ற செய்தியைக் கேள்வியுற்ற காதலன் நேற்று மாலை தானும் உயிரை மாய்த்துக்கொண்டார்.

பொலிஸாரின் அறிக்கைப்படி இந்த இளம் பெண் தூக்கிலிட்டு இறந்துள்ளார் என்றும் திருமணத்துக்கு நாள் குறிப்பதற்கு சோதிடரின் ஆலோசனை பெறுவதில் ஏற்பட்ட சர்ச்சையை அடுத்தே குறித்த பெண் தூக்கிலிட்டு உயிரை மாய்த்துள்ளார்.

சோதிடர் ஆலோசனை பெறு வதற்கு பெண் எதிர்ப்புத் தெரிவித்த போது அதனை காதலன் ஏற்காததால் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

உரிரிழந்த இளைஞன் இரத்மலானை விமானப்படை முகா மில் பணியாற்றி வருகின்றார் என்றும் அவரது காதலி தன்னை மாய்த்துக் கொள்ளுபோது அவர் கடமையில் இருந்தார் என்றும் கடமை முடித்து வீடு திரும்பும் போது காதலி இறந்த செய்தி கேட்டு அதனைத் தாங்காது ரயிலின் முன் பாய்ந்து உயிரை மாய்த்துக்கொண்டார் என்றும் சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர். (உ-10)

# யாழ். விவசாயிகளை பாராட்டுகிறார் பஸில்

கொழும்பு, மார்ச் 04

விவசாய உற்பத்திகளில் நாட்டின் ஏனைய பகுதி மக்களுக்கு யாழ்ப்பாண மக்கள் முன்னுதாரணமாகத் திகழ்கின்றனர் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற திவி நெகும குடும்ப பொருளாதார அபிவிருத்தித் திட் டம் தொடர்பான விசேட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு யாழ். விவசாயிகளைப் பாராட்டினார்.

# தனியார் கல்வி நிலையத்தில் அதிகாலை வேளை தீ விபத்து

யாழ்ப்பாணம், மார்ச் 4

நெல்லியடி நகருக்கு அண்மையில் கரவெட்டி விக்னேஸ்வரா வீதியில் அமைந்துள்ள 'எக்சலன்ட்' கல்வி நிலையத்தின் வகுப்பறைக் கொட்டில்கள் நேற்று முன்தினம் அதிகாலை ஒரு மணியளவில் தீப்பிடித்து எரிந்து நாசமாகின. இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

இச்சம்மவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

நேற்றுமுன்தினம் அதிகாலை வகுப்பறைக் கொட்டில்களும் தளபாடங்களும் திடீரெனத் தீப்பிடித்து எரிந்தமையால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

அதிலிருந்த மக்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடு பட்ட போதும் அதனைக்கட்டுப் படுத்த முடியவில்லை.

இந்தத் தீ அனர்த்தத்தால் 50 ஆயிரம் ரூபாவுக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டடுள்ளதாக இக் கல்வி நிலையத்தின் நிர்வாகி தெரிவித்தார். இது தொடர்பாக நெல்லியடிப்பொலிஸார் தகவல் தெரிவிக்கையில்:

இச் சம்பவம் மின்னல் காரணமாக ஏற்பட்டிருக்கலாம். இது ஒரு விபத்தாக இருக்கலாமே தவிர தனிப்பட்ட வேறு காரணங்கள் எதுவும் கிடையாது என்றார். (த-313-319)

## தமிழ் மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையில் தேர்தலைப் பின்போடுவதற்கு அரசுக்கு எந்தவிதத் தேவையும் இல்லை.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களில் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலுள்ள மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ள எதிர்க்கட்சிகள் சில தந்திரோபாயங்களைக் கையாளுகின்றன. யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புப் பிரிவினரால் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டும். அவசரகாலச் சட்டம் நீக்கப்படவேண்டும் என குரல் எழுப்புகின்றன.

அந்தக் கட்சிகள் முன்னைய தேர்தல்களில் இத்தகைய தந்திரோபாய முறைகளைக் கையாண்டதனாலேயே தோல்வியைத் தழுவின.

வடக்கில் மனிதாபிமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டபோது 3 லட்சத்து 15 ஆயிரம் பேர் செட்டிக்குளம் முகாமில் தஞ்சமடைந்தனர். அவர்களைப் படிப்படியாக மீள்குடியேற்றினோம். அவர்கள் முட்கம்பிகளுக்குள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குப் போதிய வசதிகள் இல்லை என்று எதிர்க்கட்சிகள் போலியான விமர்சனங்களை செய்தன.

அவர்கள் இப்போது அதைப் பற்றிக் கூறுவதை நிறுத்திவிட்டார்கள். ஏனென்றால் அரசு மீள்குடியேற்றப் பணிகளை நேர்த்தியாக மேற்கொண்டது. இன்னும் 10 ஆயிரத்துக்கும் உட்பட்டவர்களே எஞ்சியுள்ளனர்.

தேர்தல்கள் ஆணையாளர் அண்மையில் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தார். அதில் அனைத்துக் கட்சித் தலைவர்களும், செயலாளர்களும் கலந்துகொண்டனர். அங்கு தேர்தல் பிற்போடப்பட்டமை தொடர்பாக ஆணையாளர் விளக்கமளித்துள்ளார்.

அந்த சந்திப்பில் கலந்துகொண்ட எதிர்க்கட்சிகள் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் தேர்தல் பின்போடப்பட்டமை தொடர்பில் அரசை சாடும் வகையிலும், தேர்தல் ஆணையாளரை சாடும் வகையிலும் கருத்துகளை வெளியிட்டன.

எரிபொருள் விலையை அதிகரிக்காததால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இப்போது கவலை ஏற்பட்டுள்ளது. அத்துடன், பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனியார் மயப்படுத்தப்படவேண்டும் என்று அவர்கள் மறைமுக அழுத்தம் கொடுக்கின்றனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த பின்னரே ஷெல் காஸ் நிறுவனம், காப்புறுதிக் கூட்டுத்தாபனம், எமிரேட்ஸ் ஆகிய நிறுவனங்கள் அரசமயப்படுத்தப்பட்டன. இந்நிலையில், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை ஒருபோதும் தனியார் மயப்படுத்தமாட்டோம்.

- இப்படி அவர் கூறினார். (த-சி)

## ஐ.நா அதிகாரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஜய் நம்பியாருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசியபோது அவர்களுடைய பாதுகாப்புக்கு விஜய்நம்பியார் உறுதியளித்திருக்கிறார்.

ஆனால் விஜய் நம்பியாரின் உறுதிமொழியை நம்பி சரணடைய வந்த புலிகள் இயக்கத் தலைவர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்கள் என உறுதியாக நம்பப்படுவதாக 'இன்னர்சிற்றி பிரஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

இவ்விவகாரம் குறித்து 'அல் ஜசீரா' என்ற சர்வதேச தொலைக்காட்சிக்கு விஜய் நம்பியார் அளித்த பேட்டியில்,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, இப்போதைய ஐ.நா. சபையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பாலித கோஹன்ன ஆகியோர் சரணடைய வரும் புலிகள் அனைவரும் யுத்தக் கைதிகளுக்கு உரிய மரியாதையோடு நடத்தப்படுவார்கள் என்று உறுதியளித்தனர்.

இத்தனை உறுதிமொழிகளுக்குப் பின்னரும் எவ்வாறு இந்தப் படு கொலைகள் நடந்தன என்று தெரிவித்துள்ளார்.

புலிகளின் தலைவர்கள் இலங்கை இராணுவத்திடம் சரணடைவதை விரும்பாத புலிப் போராளிகள் இராணுவத்தினருடன் போரிட்டிருக்கலாம் எனவும் நம்பியார் தெரிவித்துள்ளார்.

இது உங்கள் அனுமானம் தானே என எழுப்பிய கேள்விக்கு அவர் நேரடியாகப் பதிலளிக்காமல் மழுப்பிவிட்டார்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் ஆவணமாக மேற்கண்ட பேட்டியும் சேர்க்கப்பட்டுள்ளது.

-இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-சி)

## கிபீர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிராப்ட் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் விசாரணை அதிகாரி ஒருவரும் இலங்கைக்கு வரவழைக்கப்படுவார் எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, கிபீர் விபத்தில் உயிழந்த மொளாத் பெரேராவுக்குப் பதவு உயர்வு வழங்கப் பட்டுள்ளது. பிளாக் லெப்டினன்டாக இருந்த இவர் ஸ்குவாட்டன் வீரராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

யாழ். மண்ணில்...
புதியதோர் உதயம்

**Academy of Logic**

* தனித்துவமாக A/L கலை மாணவர்களுக்கு

ஆரம்பம் - 06: 03: 2011 ஞாயிறு
காலை - 09.00 மணிக்கு
இடம் - இல 57, பலாலி வீதி. (இலுப்பையடிச் சந்தி)

தனித்துவம் வாய்ந்த எமது ஆசிரியர் குழாம்.

* இந்து நாகரிகம் - S. றமணன்
* கிறீஸ்தவ நாகரிகம் - S யூட்
* அரசியல் - A மஃறூப்
* நாடகம் - M மங்களேஸ்
* தமிழ் - K ஜெசிதன்
* வரலாறு - R.S சந்திரன்
* புவியியல் - S . தினேஸ்
* அளவையியல் - என். பிரதீபன்

Note: - முதலாம் மாதத்தில் பதிவினை மேற்கொள்பவர்களுக்கு அனுமதிக் கட்டணம் இலவசம்.

நிர்வாகி

**500 வகையான**
புத்தம் புதிய அழகிய டிசைன்களில்
**திருமண அழைப்பிதழ்கள்**
பிறிண்ட் வசதியுடன் பெற்றுக்கொள்ளலாம்
10% கழிவு வழங்கப்படும்
ANDRA DIGITAL PRINTING
356A , கஸ்தூரியார் வீதி, நாவலர் சந்தி , யாழ்ப்பாணம்.
6D , உப்புமடம் சந்தி, K.K.S வீதி , கோண்டாவில்.
Tel:021222 8929, 0776622981,0750404144

கலைவட்டம்
நுண்கலைத்துறை
யாழ். பல்கலைக்கழகம்
**கூத்து ஆற்றுகைகள்**
கோவலன் கூத்து
காத்தவராயன் கூத்து
வசந்தன் கூத்து
04.03.2011 மாலை 5.30 மணி
கைலாசபதி கலையரங்கம். யாழ். பல்கலைக்கழகம்

**April Intak/ காலடியில் எமது கல்லூரி**
Study in UK
* IELTS அவசியமற்ற லண்டன்/ UK பயணம்
* Sponsor வசதிகள் மிகக் குறைந்த விலையில் - 130, 000
* 2 விதி முறைகளில் உருவாக்கப்பட்ட ஒரு திட்டம்.
  1) வீசாவுக்கு முன் கட்டணம்.
  2) வீசாவுக்கு பின் கட்டணம்.
* Course Fees குறைந்த விலையில் - 2500$
* UKஇல் 20 கல்லூரிகளுக்கு மேற்பட்ட தொடர்புகள்.
* வட மகாண மக்களின் நம்பிக்கை மிக்க தெரிவு.

தொடர்பு:-
European College of Higher Studies
315 ½, Parameaswara junction, Palaly Road, Jaffna.
Tel No:- 0213734747, 0776327623, 0773537378

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.03.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org